3/4

[illegible]

[illegible]

[illegible] 112. [illegible] 2 [illegible] ஜூன் 22.2001

D
V211,31'P01
P01.112.2
228172

வெளியீடு 16-7-2001 Issued 16-7-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜனவரி 22, 2001 – தொகுதி 112– எண் 2

**Monday the 22nd January, 2001 – Volume 112– No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

349
2002

**22-1-2001**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


(1) வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் 23-63

(2) சிறப்புக் கவன ஈர்ப்பு

தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் 64-70

திரு. கு. மனோகரன் 64

திரு. சி. ஞானசேகரன் 65-66

திரு. ஜி.கே. மணி 66-68

மாண்புமிகு திரு. ஆலடி அருணா 68-70

(3) அரசினர் தீர்மானம்—

23-3-1999 அன்று பேரவையால் திரு. இரா. தாமரைக்கனி அவர்களுக்கு விதித்த 15 நாட்கள் சிறைத் தண்டனையில் எஞ்சிய காலத்தை இரத்து செய்தல் 70-72

(4) தகவல் கோரல்—

கன்னட நடிகர் இராஜ்குமார் விடுதலை குறித்து உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை 72-73

| | பக்கங்கள் |
|---|---|
| (5) அறிவிப்புகள்— | |
| (அ) நாமக்கல் கவிஞர் மாளிகையில் "குடியரசு வளர்ச்சியில் சட்டமன்றத்தின் பங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்கம் | 73-74 |
| (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 74 |
| (6) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்— | 74-158 |
| *திரு. சுப. தங்கவேலன் | 74-83 |
| திரு. சி. ஞானசேகரன் | 83-95 |
| *திரு. இ. புகழேந்தி | 94-102 |
| *திரு. கே. சுப்பராயன் | 102-116 |
| *திரு. சி.டி. தண்டபாணி | 116-126 |
| திரு. ஜி.கே. மணி | 126-133 |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 133-141 |
| திரு. இரா. விசுவநாதன் | 141-150 |
| *திரு. மு. அப்பாவு | 151-158 |
| (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 158 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 9, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 ஜனவரி 22, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1—

### கேள்வித் தாள்கள்

***24590—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிளஸ் 2, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மற்றும் மெட்ரிக் தேர்வுகளில் கேள்வித்தாள்கள் தேர்வுகளுக்கு முன்னரே வெளியாவதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர்கள் திரு. சிவஞானம் மற்றும் திரு. கோபாலன் ஆகியோர் அடங்கிய வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இரகசியத் தன்மையைக் காக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

228172

[2001 ஜனவரி 22

**மாண்புமிகு பே[…]** …ரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மற்றுமுள்ள அரசு தேர்வுகளுடைய விடைத்தாள்கள் முன்கூட்டியே வெளியிடப்படுவதாக அறிந்து, அதைப் படித்து சில மாணவர்கள் ஏமாற்றம் அடையக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. உள்ளபடியே அரசு இரகசியமாக வைத்திருக்கக்கூடிய விடைத்தாள்கள் வெளியாவதனாலே, அந்தத் தவறுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகளைத் தண்டிப்பதோடு, அப்படிப்பட்ட இரகசிய வினாத்தாள்கள் வெளியாவதைத் தடை செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய இந்தச் சூழ்நிலையில் சில வினாத்தாள்கள் தவறாக யாரோ சிலர் சம்பாதிக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு வெளியாகிவிட்டன என்று சொல்லி எங்கேயாவது அச்சடித்து, இதுதான் வினாத்தாள் என்றெல்லாம் வெளியிட்டுவிடுகிறார்கள். மாணவ, மாணவிகள் அதைப் படித்து ஏமாந்துவிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தவறானவற்றைப் படித்து, அதையே உருப்போட்டுக் கொண்டுபோய் தேர்வில் எழுதுவதற்கு வாய்ப்பு இல்லாமல் ஏமாந்துவிடுகின்ற காரணத்தாலே பலர் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு நம்முடைய கல்வித் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகின்ற இந்த நேரத்திலே மேற்கொண்டு இவற்றைத் தடை செய்வதற்கு என்ன செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தவறான, பொய்யான, உண்மை இல்லாத கேள்வித்தாளை, உண்மையான கேள்வித்தாள் என்று சிலபேர் சிலகாலம் ஏமாற்றினால், பலபேர் அதனால் தெளிவடைந்து, இனி அப்படிப்பட்ட கேள்வித்தாள்களை நம்பமாட்டார்கள். ஆகவே, அது ஒரு வகையிலே இலாபம். இன்னொன்று பத்திரிகைகளிலே எல்லாம்கூட இப்படிப்பட்ட மாதிரி வினாக்கள் என்ற முறையில், தேர்வில் வரக்கூடிய வினாக்கள் என்ற முறையில் அவர்களாகவே தகுந்த முறையிலே கேள்விகளை உருவாக்கி அதற்கு விடைகளை மாணவர்கள் தேடி கண்டுபிடிக்கக்கூடிய முறையில் அல்லது அறிந்துகொள்ளக்கூடிய முறையில் பல கட்டுரைகளை ஏடுகளில் வெளியிட்[…]றார்கள். […] எந்த வகையிலும் தவறல்ல. அது மாண[…] ஒரு வகை[…]யிற்சி. அரசாங்க இரகசியம்

228172
சென்னை-600 0.8



2001 ஜனவரி 22]

காப்பாற்றப்பட வேண்டும் என்ற முறையில், கேள்வித்தாள்கள் அனுப்பி வைக்கப்படுகின்ற இடங்கள் எந்தெந்த வட்டாரங்களுக்கு, எந்த மையத்தில் கேள்வித்தாள் அனுப்பப்படுகிறதோ அந்த இடத்தில் சரியான பாதுகாப்பு இருந்தாலும்கூட, அவற்றையும் கடந்து ஒருவர், இருவர் தவறு செய்து கேள்வித்தாளை வெளியே கொண்டு வருகின்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, காவல் துறை அவர்களை கைது செய்து, நீதிமன்றத்திலே நிறுத்தியும் ஒருவர், இருவர் தப்பித்துக்கொண்டும் இருக்கிறார்கள். இருந்தாலும், எந்த ஒரு கேள்வித்தாளும், எந்த ஒரு மையத்திலே இருந்தும் கொண்டு போகக்கூடாது என்பதற்காக முன்னாள் இயக்குநர் சிவஞானம் அவர்கள், முன்னாள் இயக்குநர் கோபாலன் அவர்கள் நல்ல அனுபவம் பெற்றவர்கள். அவர்களைக் கொண்டு ஆய்வுகள் நடத்தி, ஆலோசனைகளைப் பெற்று, ஒவ்வொரு மையத்திலும் இரண்டு பேருக்கு அந்தக் கேள்வித்தாளைப் பாதுகாக்கின்ற பொறுப்பு கொடுக்கப்பட்டு காட்ரேஜ் லாக்கர் உள்ள பீரோ ஒவ்வொரு மையத்திற்கும் வழங்கப்பட்டு, கேள்வித்தாள்கள் அதிலேதான் வைக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. அப்படி வைக்கப்படுகின்ற அந்த பீரோக்கள் இரண்டு பூட்டுகளால் பூட்டப்பட்டு அதன் 4 சாவிகள் இரண்டு பேரிடத்திலே இருக்கக்கூடிய முறையிலே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கடந்த காலத்திலே திருட்டு போனதைப்போல இனியும் திருட்டு போவதற்கு இடம் இல்லாத வகையில் வழி காணப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-3…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப்ளஸ் 2, எஸ்.எஸ்.எல்.சி. படிக்கின்ற மாணவர்களுக்குத் தேர்வு மையங்கள் 1… கிலோமீட்டர், 20 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதால், அவர்கள் தேர்… எழுதுகிற நேரங்களில், அவர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு சரியான… முறையில் தேர்வு எழுத முடியாமல் இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு… அமைச்சர் அவர்கள், ப்ளஸ்2, எஸ்.எஸ்.எல்.சி. பள்ளிகளில், அந்தந்த… பள்ளிகளிலேயே தேர்வு மையங்களைத் தொடங்குவதற்கு ஆவன… செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்வதோடு… என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் மேல்நிலை… பள்ளி, நான் வேலை பார்த்த காவல்கிணறு இருதய மேல்நிலைப் பள்ளி… ஆகிய இரண்டு பள்ளிகளிலும் இந்த ஆண்டு ப்ளஸ் 2 தேர்…

D
V211,31.P01 P01.112.2

[2001 ஜனவரி 22

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

3—

## மின் வசதி

***36754—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி ஒன்றியம், தொட்டமஞ்சு ஊராட்சியில் பல கிராமங்களுக்கு மின் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சில குக்கிராமங்களில் மின் வசதி இல்லை.

**Thiru S. RAJAREDDY:** Hon. Speaker Sir, I have been appealing to the Government about this for the past four years. There are so many villages which have no power supply. Due to lack of power supply, there is no drinking water also. I once again appeal to the Hon. Minister to provide power supply to these villages as soon as possible. I would like to know whether he would do that.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரவேண்டுமென்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால், குக்கிராமங்களிலே, தருமபுரி மாவட்டம், தளி ஊராட்சியில் 6 கிராமங்களிலே மின் வசதி இல்லை. அதற்குக் காரணம் திம்மகோட்டை என்ற குக்கிராமத்தில் நான்கே நான்கு வீடுகள்தான் இருக்கின்றன. அங்கே மின்சார வசதி தேவையென்று ஒருவர்கூட விண்ணப்பம் செய்யவில்லை.



2001 ஜனவரி 22]

ஒன்னேரபுரம் என்ற கிராமத்தில் 30 வீடுகள் இருக்கின்றன. அங்கேயும் விண்ணப்பங்கள் இல்லை. காளிக்கட்டை என்ற கிராமத்திலே 15 வீடுகள் இருக்கின்றன. அங்கேயும் விண்ணப்பங்கள் இல்லை. கேலட்டி என்ற கிராமத்திலே 15 வீடுகள். மேல்கிரியப்பனூர் என்ற இடத்திலே 15 வீடுகள். மல்லிகைஒட்டு என்ற இடத்தில் 6 வீடுகள். இப்படி 4 வீடுகள் 10 வீடுகள் இருக்கக்கூடிய, அந்தச் சின்னஞ்சிறு குக்கிராமங்களில் மின்வசதி இல்லை என்பது உண்மை. நாளைக்கே உறுப்பினர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு விண்ணப்பங்கள் கேட்டு, மின் இணைப்பு வேண்டுமென்று மின்சார வாரியத்திற்கு கொடுப்பார்களேயானால், ஒரு மாத காலத்திலே அவர்கள் அத்தனை பேருக்கும் மின்வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, in a lot of villages in Hosur and Thenkanikottai Taluks low-voltage is prevailing. Last time when the Hon.Minister visited Hosur he has promised to increase voltage in both the taluks. Sir, may I know from the Hon.Minister for Electricity the stage at which it stands and when he is going to rectify the low-voltage problem.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே குறைவான மின்அழுத்தம் இருந்த பகுதிகள் என்று ஏறக்குறைய 300 பகுதிகள் இருந்தன. அதிலே இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, இப்போது இந்த 5 ஆண்டு காலத்திலே 250 இடங்களிலே குறைவான மின்அழுத்தம் இருப்பதைப் போக்கியிருக்கின்றோம். இன்னும் 50 இடங்களிலே குறைவான மின்அழுத்தம், low-voltage இருக்கிறது. அதை 2001-2002 இலே தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதியிலேயும் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள்ளாக low-voltage இல்லாத சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2001 ஜனவரி 22

எழுதுவதற்கான மையங்களை ஆரம்பித்துத் தருவீர்களா என்பதையும் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஆசிரியராக வேலை பார்க்கிறார் எனில், சட்டமன்ற உறுப்பினருடைய கடமையை நிறைவேற்றுவதிலே இடையூறு ஏற்படும் என்ற கருத்தை நான் முதலில் அவருக்கு ஆலோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து, அவரே சொன்னார்; 10 மைல், 20 மைல் தூரம் என்று. 10 மைலுக்கும், 20 மைலுக்கும் இடையிலே 10 மைல் வித்தியாசம் இருக்கிறது. இந்த 10 மைல் தொலைவில் இருக்கக்கூடியவர் தேர்வு எழுத இன்னொரு பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் 100 பேர்களாக இருப்பார்களேயானால் அவர்கட்கு ஒரு மையம் வழங்கி, அந்த 100 பேருக்கும் வசதி செய்யப்படுகிறது. ஒருவேளை இஸ்லாமியப் பெண்களாக இருப்பார்களேயானால், 75 பேர்களாக இருந்தாலும் அவர்களுக்குத் தனியாக மையம் வழங்கி Progressive முறையோடு மையங்கள் இயக்குநரால் தீர்மானிக்கப்படுகின்றன. அதற்கான விதிமுறைகள் வைத்துத் தருகிற பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. எந்த அளவிற்கு மையங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியுமோ, அந்த அளவில் அதிகப் பயன் உடைய வட்டாரத்தில் அந்த மாணவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்வதில் அந்த இயக்குநர் பொறுப்பாகச் செயல்படுகிறார். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மையம் வேண்டுமென்று கேட்டார்கள். அவருடைய வேண்டுகோள் இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர் தீர்மானிப்பது இல்லை; இயக்குநர் தீர்மானிப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2—

**பல்தொழில் நுட்பப் பயிலகம்**

***30250—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதியில் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



2001 ஜனவரி 22]

(ஆ) ஆம் எனில், அரசு இவ்வாண்டு இதைத் தொடங்கிட வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கல்விக்கென சிறப்பு ஒதுக்கீடு வழங்கி, தமிழகம் இந்தியாவில் ஒரு சிறந்த முன்னோடி மாநிலமாக கல்வியில் திகழ்கிறது. இந்த நிலையில் மாவட்டத் தலைநகராக விளங்கும் தருமபுரியில் அரசின் சார்பாக ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது பல்தொழில் பயிலகமோ கிடையாது. பொருளாதாரத் துறையிலும், படிப்பிலும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாவட்டத் தலைநகர் தருமபுரியில் வரும் நிதியாண்டிலாவது சிறப்பு முன்னுரிமை வழங்கி, polytechnic அமைக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலேயும் இந்த அரசுதான் தீர்மானிக்கும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால், அதேநேரத்தில் ஒரு மாவட்டத் தலைநகரத்திலேதான் பொறியியல் கல்லூரி இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஏனென்றால், மாவட்டம் முழுவதிலிருந்தும்; இன்னும் சொல்லப்போனால், பக்கத்து மாவட்டத்திலே உள்ளவர்களும்கூட அந்தக் கல்லூரியிலே இடம் பெறக்கூடிய அளவிற்கு பர்கூரில் பொறியியல் கல்லூரி மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அதற்கேகூட வேறு மாவட்டத்து மாணவர்கள் அங்கேபோய் பயில வேண்டிய அளவிற்கு அங்கே இடம் இருக்கிறது. ஆகவே, அது ஒரு பிரச்சினை அல்ல. தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே, ஐந்து சுயநிதி polytechnic-கள், ஆறு ஏழு சுய நிதி polytechnic-கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலேகூட மாணவர்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு சேரவில்லை. நூற்றுக்கு 55, 60, 70, 75 என்று polytechnic-களுடைய நிலையைப் பொறுத்து அல்லது அங்கேயுள்ள தேவையைப் பொறுத்து மாணவர்கள் சேருகிறார்கள். ஆகவே, மேலும் polytechnic-கள் தொடங்குவது, அந்த கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுவதாக இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 22

4—

## துணை மின் நிலையம்

***37152—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், செந்துறையில் துணை மின் நிலையம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் நிதியாண்டில் பணிகள் தொடங்கப்பட்டு முடிக்கப்படும்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல், செந்துறை, கொடைக்கானல் ஆகியவை மற்றும் இத்துடன் சேர்த்து மொத்தம் 7 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக மின் வாரியத்தால் பரிந்துரை செய்யப்பட்டது. அவற்றிலே திண்டுக்கல் துணை மின் நிலையம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியால் அங்கே நிறைவேற்றப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோன்று மீதமுள்ள அந்த 6 துணை மின் நிலையங்களில் இரண்டொன்றில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே, முக்கியமாக செந்துறைப் பகுதி கிராமங்கள் நிறைந்த ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் அங்கே துணைமின் நிலையம் வேண்டுமென்று கேட்டு, நிலமும் ஆர்ஜிதம் செய்து முடிக்கப்பட்டுவிட்டது. எனவே, அதை இந்த ஆண்டு தொடங்குவதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்குமா? அப்படி கிடைக்குமானால் பரிகாரம் நல்ல முறையிலே அமையும். எனவே, இந்த ஆண்டு துணை மின் நிலையம் கிடைப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 22]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, நான் திண்டுக்கல் மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோது, செந்துறையிலே 33/11 கே.வி. துணை மின் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். உடனடியாக, மின் வாரியத்திடம் தெரிவித்து 29-6-1999 இல் இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்புதலை மின் வாரியம் வழங்கியிருக்கிறது. அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2001-2002 இல் ஏப்ரலுக்குப் பிறகு அந்தப் பணியை மின்வாரியம் தொடங்கவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதியில் சின்னமனூர் ஒன்றியத்தில் கிழக்குப் பகுதிகளில் அதாவது சின்னஓவலாபுரம், எரசக்கநாயக்கனூர் போன்ற பகுதிகளில் மின்சார அழுத்தம் மிகவும் குறைவாக இருப்பதால் அங்கே இருக்கக்கூடிய வீடுகளிலும் சரி அல்லது தோட்டங்களிலே ஓடுகின்ற மோட்டார்களும் சரி, சரியாக ஓடுவதில்லை. அவர்கள் மிகவும் துயரத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, சின்னஓவலாபுரம், எரசக்கநாயக்கனூர் பகுதிகளில் ஒரு துணை மின்நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்த ஆண்டு, 2001-2002 ஆம் ஆண்டில் 60 துணை மின் நிலையங்கள் கட்டுவதற்கான முடிவினை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டிலே low-voltage இருக்கக்கூடிய இடங்கள் 50தான் இருக்கின்றன என்று பொறியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் அங்கேயும் low-voltage இருக்குமேயானால், கூடுதலாக இந்த ஆண்டு அதை அந்தத் திட்டத்திலே சேர்த்து அந்தப் பகுதியிலேயும் துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை உடனடியாக ஆராய்ந்து அதை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுக்க அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

[2001 ஜனவரி 22

விரைவாக ஓர் ஆண்டு காலத்தில் திட்டம் முடிவடைகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அவர்கள் 1½ ஆண்டுகளுக்கு மேல் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதில் எவ்வளவு காலத்தை குறைக்க முடியுமோ, குறைத்து விரைவாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

6—

## குடிநீர்த் திட்டப் பணிகள்

***34008—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி ஊராட்சி செட்டியூர் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவில் முடித்து உபயோகத்திற்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள கல்லூரணி ஊராட்சியைச் சார்ந்த செட்டியூர் குடியிருப்பான குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. அநேகமாக இந்த 31-1-2001-க்குள் சோதனை ஓட்டம் முடிவுற்றதும், அது சரியாக இருக்குமானால், சோதனை வெற்றி பெற்றிருக்குமானால், திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செட்டியூர் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள சில கிராமங்களுக்கும், கடையம் ஒன்றியத்திலுள்ள சில கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக கடானா நதியிலிருந்து ஒரு திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் இந்த வருடமே தொடங்கும் என்று சட்டப் பேரவையிலே



2001 ஜனவரி 22]

அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை விரைவாகத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் துணைக் கேள்வி தொடர்பில்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரில் 1989-90 ஆம் ஆண்டிற்கு முன்பாக மிக அதிகமாகக் குடிதண்ணீர் பஞ்சம் இருந்தது. அதன் பிறகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் புளிச்சப்பள்ளம் தண்ணீர் திட்டம் கொண்டுவரப்பட்டு ஓரளவிற்குப் பஞ்சம் போக்கப்பட்டது. இப்போது பெருகிவரும் மக்கள் தொகையினாலும், நகரம் பெருகுவதாலும் தண்ணீர் பிரச்சினை இருந்து வருகிறது. அதை நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோளாக வைத்திருக்கிறேன். திண்டிவனம் நகர குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெண்ணையாற்றுத் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா? பரிசீலனையில் இருக்கிறது என்றால் அது எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பல முறை என்னிடத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். புதிய திட்டம், தொடர்புத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், சம்பந்தப்பட்ட நகராட்சி இதுவரையில் எந்தக் கோரிக்கையையும் இந்த அரசுக்கு அனுப்பவில்லை. அதோடுகூட இப்போது நாம் அவருடைய வேண்டுகோளை ஏற்று, அதை சர்வே செய்யச் சொல்லியிருக்கிறோம். கூடுமானவரையில், எங்கிருந்து நீர் கொண்டுவந்தால் குறைந்த செலவில் அவர்களுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு நீர் கொடுக்க முடியும் என்ற, நீர் ஆதாரப் பிரச்சினையையும் அதுபோலவே எந்தெந்தப் பகுதிகளுக்குத் தேவைப்படுகிறது, எவ்வளவு அதிகரித்து எங்கெங்கு கொடுக்க வேண்டும் என்ற பணிகளும் இப்போது ஆய்வில் இருக்கின்றன. அந்த ஆய்வு முடிந்து அதற்கான நீர் ஆதாரம் கிடைத்து, அந்த நீர் ஆதாரத்தைப் பயன்படுத்துகிற நிலை வேண்டுமென்று நகராட்சி கோரிக்கை வைக்குமானால் அதைப் பரிசீலித்து வரும் ஆண்டில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

[2001 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செந்துறை என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதி. நத்தம் ஒன்றியம் செந்துறையிலும், சாணார்பட்டி ஒன்றியம், கம்பிளியம்பட்டியிலும், துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று நானும் கேட்டிருந்தேன். ஆனால், இப்போது அந்தக் கேள்வி என்னுடைய பெயரில் வரவில்லை. இருந்தாலும்கூட, இந்தக் கம்பிளியம்பட்டியிலே இப்போது துணை மின் நிலையம் தொடங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு முன்பே கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, இடம் கையகப்படுத்தப்பட்ட செந்துறையிலே மட்டும் இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் காலதாமதம் ஆகிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2001 ஏப்ரலிலே அந்தத் துணை மின் நிலையம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே விவசாயிகளும் மற்றும் மின் பயனாளிகளும் low-voltage பிரச்சினையினால் மிகவும் அல்லலுற்று, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, துணை மின் நிலையம் ஏற்படுத்தும் வரை அதற்கு இடைக்காலமாக தற்காலிக நிவாரணமாக அரசு மாற்று ஏற்பாடு செய்து, அந்தப் பகுதியிலே மின்சாரம் சீராக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே மின்சார உற்பத்தி மிகச் சிறந்த முறையிலே நடைபெற்று வருவதாலும், மின்சாரப் பற்றாக்குறையே இப்போது இல்லை என்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பதாலும், மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மாற்று ஏற்பாடு ஏதாவது செய்வதற்கு வழி இருக்குமானால், உடனடியாகச் செய்வதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 22]

5—

## குடிநீர்த் திட்டம்

***33756—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை நகரில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வைகையில் புதிய குடிநீர்த் திட்டம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகரில், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஒரு புதிய குடிநீர் விரிவாக்கத் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 15-12-2000 அன்று பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதும் செயலாக்கப் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை நகரில் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி அளித்த மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் முடியும் எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நீர் ஆதாரத்தைப் பற்றி பிரச்சினை தற்போது இல்லை. காரணம், ஏற்கெனவே, 35 லிட்டர்தான் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், நாம் முறைப்படி 70 லிட்டர் வழங்க வேண்டும். ஆகவே, துணையாகத்தான் இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோமே தவிர, இது ஆரம்பத் திட்டம் அல்ல. ஆகையால்,

[2001 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்த ஆண்டு குடிநீருக்காக வழங்க ஒதுக்கியிருக்கிற நிதி கிராமப் பகுதிகளுக்கு அதிக வாய்ப்பு தராமல் நகராட்சிகளுக்கு வாய்ப்பு தந்திருப்பதாகப் பேசப்படுவது உண்மையா? 2000-2001 ஆம் ஆண்டுக்கான குடிநீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நிதி இன்னும் வரவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு தொகுதிக்கு 2,3 திட்டங்கள்தான் என்று அதிகாரிகள் வெளிப்படையாகச் சொல்கிறார்கள். ஆகவே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான குடிநீர்த் திட்டம் இதுவரையிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு, ஒரு தொகுதிக்கு 15 குடிநீர்த் திட்டங்களாவது உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய மானியக் கோரிக்கையின்போது கிராமப்புறங்களில் கணக்கெடுத்து அதற்கான தேவைகளை உள்ளடக்கி, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் அதிலே அடக்கி ஏறத்தாழ 6500 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டு குடிநீர் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தேன். அந்த அறிவிப்பையொட்டி புதுக்கோட்டைக்கு எத்தனை சதவீதம் கொடுக்க வேண்டும், அதாவது மக்கள் தொகை அடிப்படை, ஏற்கெனவே நீர் ஆதாரம் இருந்த நிலை, தற்போது இருக்கிற நிலை, இவற்றைப் பரிசீலித்து அதற்குத் தகுந்தவாறு கொடுத்திருக்கிறோம். மொத்தமாக 6500-ல் கணக்குப் பார்க்கிறபோது நேற்றுவரை ஏறத்தாழ 80 தனிப்பட்ட குடிநீர்த் திட்டங்களைத் தவிர பாக்கி அத்தனையும் முடிவுற்றிருக்கின்ற நல்ல செய்தியையும் தெரிவிக்கின்றேன். மேலும், எந்தவிதமான நிதி நெருக்கடியும் இல்லை. அப்படி அதிகாரிகள் ஏதாவது சொல்லியிருந்தால் அதை என்னிடத்தில் தனியாக வந்து கேட்கும்போது கேட்டால் அதற்கான விவரங்களையும் நான் அளிக்கத் தயாராக இருக்கின்றேன். நிதி ஆதாரத்தை ஒதுக்கியதில் கிராமப் பகுதிகளுக்குக் குறைவு என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ ஒரு பங்கு அதிகமாகவே அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்நூற்றுச் சொச்சம் கோடிக்கு மேல் கிராமப்புறத் திட்டங்களுக்குத்தான்



2001 ஜனவரி 22]

நாங்கள் செலவழித்துக் கொண்டு வருகிறோம். இந்தக் கலைஞர் அரசு அதிலே மிக முக்கியத்துவம் காட்டி வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

7—

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி

***38442—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நடைபெறும் பணிகளைத் தேர்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கி உரிய அரசு ஆணை வழங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக நடைபெறுகின்ற பணிகள் ஒப்பந்த முறையில் செய்வதில்லை. அந்தத் துறையின் மூலமாகவே செய்கிறார்கள். அவ்வாறு செய்யும்பொழுது அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளே வேலையையும் செய்துவிட்டு அந்தத் துறை அதிகாரிகளே measurement-ம் எடுக்கிறார்கள். அந்தத் துறை அதிகாரிகளே check measurement-ம் எடுக்கிறார்கள். அவர்களே Bill pass செய்கிறார்கள். இப்படி அவர்களே எல்லாவற்றையும் செய்துகொள்ளும்போது அதிலே பெருமளவில் முறைகேடு நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; நடந்திருக்கிறது என்பதையெல்லாம் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட எங்களுடைய பகுதியிலே அந்தத் துறையிலே நடைபெற்றிருக்கின்ற முறைகேடுகளை கேசெட் வாயிலாகப் பதிவு செய்துகூட கொடுத்திருந்தேன். இப்படிப்பட்ட தவறுகளைக் களைவதற்காக, பணிகளைத் தேர்வு செய்யும்போது ஏற்கெனவே வெட்டிய குளங்களை perculation Pond என்று சொல்கின்ற அந்த வெட்டிய குளங்களையே

[2001 ஜனவரி 22

மீண்டும் வெட்டியதாக அவர்கள் பல இடங்களிலே செய்திருக்கிறார்கள். Board எழுதி வைக்கும்போது, மதிப்பீடுகளைப்பற்றிப் போட வேண்டுமென்ற முறை இருந்தாலும்கூட அந்தத் திட்ட மதிப்பீட்டுத் தொகையை அவர்கள் அதிலே குறிப்பிடுவதில்லை.

முற்பகல் 9-55

இப்படி பல்வேறு முறைகேடுகள் அதிலே நடைபெறுவதற்கு வாய்ப்பு இருப்பதால் அந்தத் திட்டத்தை அமல்படுத்தும்பொழுது, அந்தப் பணிகளை தேர்வு செய்யும்பொழுது, செய்த பணிகளே திரும்பி வராமல் இருப்பதற்காக அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தான் நான் கேட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளைக்கூட அதிலே உள்ளடக்கி கண்காணிக்கின்ற அதிகாரத்தையும் அரசு வழங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வி வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நடைபெறும் பணிகளை தேர்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கி, உரிய அரசு ஆணை வழங்கிட அரசு முன்வருமா என்பதுதான். அதற்கு நான் இல்லை என்று பதில் தந்திருக்கிறேன். ஆனால் அவர் இங்கு இந்த வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நடைபெறக்கூடிய பணிகள் குறித்த ஒரு குற்றச்சாட்டைப்போல சிலவற்றை இங்கே கருத்துக்களாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே அவர் இங்கு பேசிய அந்தக் கருத்தை ஒட்டிகூட அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய கண்காணிப்புப் பொறியாளரிடத்திலே முழு விவரமாக நேரிலே சென்று விசாரித்து ஒரு அறிக்கை தரவேண்டும் என்று கேட்கப்பெற்று, அறிக்கை பெற்று வைத்திருக்கிறேன். ஆனால் அவர் சொன்னதைப் போல அந்தக் குற்றச்சாட்டிலே ஆதாரம் இல்லை. இப்போது அதையே இங்கு அவர் ஏதோ கேசட்டை கொடுத்ததாகச் சொல்கிறார். என்னிடத்திலே தரவில்லை. யாரிடத்திலே கொடுத்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது உண்மையா அல்லது உண்மைக்குப் புறம்பான தகவலா எதுவாக இருந்தாலும் அப்படி ஒரு புகார் வந்தால், அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு, இதிலே எந்தவிதமான உள்நோக்கத்திற்கோ அல்லது தவறான நடவடிக்கைக்கோ



2001 ஜனவரி 22]

இந்த அரசு உடன்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திருமதி ஆர். வேடம்மாள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. விசுவநாதன், உட்காருங்கள். நியாயமாக நீங்கள் கேள்வியிலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அதையே நான் அனுமதித்தேன், உட்காருங்கள்.

8—

**மேம்பாலம்**

***29529—திருமதி ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, அனுமன்தீர்த்தம் என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே தென்பெண்ணை ஆறு ஓடுவதால், இது முக்கிய சாலையாகவுள்ளதால் அங்கு ஒரு மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்தப்பட்ட விடையைத் தெரிவிக்க அனுமதி கோருகிறேன்.

அரூர் தொகுதியில் அனுமன்தீர்த்தம் என்னுமிடத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தற்போது ஒரு சிறு மூழ்குபாலம் Submersible bridge உள்ளது. இப்பாலம் சேதமடைந்து உள்ளதால் மேற்கண்ட இடத்தில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று 300 இலட்சம் ரூபாய் (3 கோடி) மதிப்பீட்டில் ஹட்கோ கடனுதவி திட்டத்தின்கீழ் இப்பாலம் கட்டுவதற்காக முடிவு செய்யப்பட்டு அரசாணை எண். 7/நெடுஞ்சாலை எச்.கி.1/12-1-2001-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரைவில் வேலை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**9—**

## கப்பல் போக்குவரத்து

***36646—திரு. ஜி. நிஜாமுதீன்:***

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினத்தில் கப்பல் போக்குவரத்து தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் துறைமுகத்தில் மே 1999 முதல் மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

(ஆ) திருவாளர்கள் Foods Fats and Fertilizer Limited அவர்களால் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சமையல் எண்ணெய் தற்பொழுது இறக்குமதி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் இருக்கையில் இல்லை, திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகிற இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அரசுக்கு இலாபம் என்ற வகையில் வருவாய் கிடைக்கும் விவரம் என்ன? மேலும், நாகை துறைமுகத்தை விரிவுபடுத்திச் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுகத்தில் தனியார் நிறுவனமான Foods Fats and Fertilizer Limited அவர்களால் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. இதுவரையில் 53,294 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு அதன்மூலமாக ஏறத்தாழ 10.65 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது.





இதுதவிர Port dues என்ற வகையில் 12 இலட்சம் ரூபாய் அதிலே வருமானம் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மேலும் இந்தத் துறைமுகத்தில் திருவாளர்கள் Chennai Petroleum Corporation Limited அவர்கள் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு அருகேயுள்ள பனங்குடி சுத்திகரிப்பு ஆலைக்கு நேரடியாக கச்சா எண்ணெய்யை எடுத்துச் செல்வதற்காக அணுகுபாலத்துடன்கூடிய (Jetty with approach trestle) தோணித் துறை ஒன்றை நாகப்பட்டினத்தில் அமைக்க திட்டமிட்டுள்ளனர். இந்நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயைக் கையாள உத்தேசித்துள்ளது. ஆரம்பகால கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தோணித் துறை கட்டப்பட்டவுடன் 2001 ஆம் ஆண்டு இறுதியில் அங்கு கச்சா எண்ணெய் கையாளப்படும். இது தவிர, நாகப்பட்டினம் துறைமுகத்தில் நிலம் ஒதுக்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு, திருவாளர்கள் Rajathi Agencies சென்னை நிறுவனத்திற்கு, 80 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் J.S. Oversees Private Limited புதுடெல்லி நிறுவனத்திற்கு 0.46 ஏக்கர் நிலமும் டிசம்பர் 2000 ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு நிறுவனங்களும் இத்துறைமுகத்தில் சமையல் எண்ணெய் மற்றும் இதர பொருட்களை இறக்குமதி செய்யவுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**10—**

## தமிழ் இசைக் கல்லூரி

***34537—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2001 ஜனவரி 22

(அ) தேனி நகராட்சிப் பகுதியில் தமிழிசைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி நகராட்சிப் பகுதியில் தனி தமிழிசைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை. எனினும், மாவட்டந்தோறும் அரசு இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட வேண்டும் எனும் அரசின் கொள்கைப்படி தற்போது 17 இடங்களில் அரசு இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தேனி நகராட்சிப் பகுதியிலே இருக்கக்கூடிய நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது, அங்கே தேனி மாவட்டத்தினுடைய தலைநகரான தேனியில் ஓர் அருங்காட்சியகம் திறக்க வேண்டும் என்று நான் கேட்டேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அருங்காட்சியகம் மட்டுமல்ல, அங்கே ஓர் இயல், இசை நாடகக் கல்விக்கூடமும் அமைக்கப்படும் என்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே, சொன்னதைச் செய்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு அவற்றைச் செய்ய வேண்டும் என்று நான் உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 4 மாவட்டங்களில் அரசு இசைக் கல்லூரிகளும், 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகளும் இருக்கின்றன. எஞ்சியிருக்கின்ற மாவட்டங்கள் 9 மட்டுமே. கண்டிப்பாக உறுப்பினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தாய்மொழி வழிக்கல்வி பற்றிய நமது உயர் நீதிமன்றத்தினுடைய



2001 ஜனவரி 22]

தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுவிட்டதா? அது பற்றிய விவரங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இசைக் கல்லூரிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உட்காருங்கள். அடுத்து திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலின் கோபுரம் தமிழக அரசின் முத்திரைச் சின்னத்தின் மாடலாக உள்ளது. கோதை பிறந்த ஊர், கோவிந்தன் வாழும் ஊர் ஸ்ரீவில்லிப்புத்தூர். தமிழ்ப் பாவை ஸ்ரீஆண்டாள். அந்த ஆண்டாள் பிறந்த ஊரில் தமிழிசைக் கல்லூரியை நிறுவுவதற்கு அரசு முன்வருமா அல்லது தேவஸ்தானத்தின் மூலம் நிறுவுவதற்கு முன்வந்தால் அரசு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தொடங்கப்பட வேண்டிய இசைப் பள்ளிகள் 9 மாவட்டங்களில் மட்டும்தான். எனவே, நம்முடைய தேனி தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுத்த அதே உறுதிமொழியை விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினருக்கும் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

11—

### கிராமச் சாவடிக் கட்டடங்கள்

***33513—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரப்பாடி கிராமத்திற்கு கிராமச் சாவடிக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதிலும் செப்பனிடப்படவேண்டிய நிலையிலுள்ள கிராமச் சாவடிகளை தற்போதுள்ள நிதிநிலையில்

[2001 ஜனவரி 22

ஒட்டுமொத்தமாகச் செப்பனிட இயலாத நிலை உள்ளது. எனவே, ஆண்டுதோறும் நிதிநிலைக்கேற்ப காலக்கிரமத்தில் பழுதடைந்த கிராமச் சாவடிகளைப் பழுதுபார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒரு தொடர் நடவடிக்கையாதலால், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரப்பாடி கிராமத்திற்கு கிராமச் சாவடி கட்டடம் கட்டும் பணியை எப்போது முடிக்க இயலும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.

முற்பகல் 10-05

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மொத்த கிராமச் சாவடிகள் எத்தனை? அவற்றில் எத்தனை கிராமச் சாவடிகள் அரசு கட்டடத்தில் இயங்குகின்றன? எத்தனை கிராமச் சாவடிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன? அவ்வாறு வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றவற்றின் வாடகையை அங்கே இருக்கக்கூடிய கிராம அதிகாரிகள்தான் செலுத்த வேண்டுமா அல்லது அரசு செலுத்துகின்றதா?

அதோடு, வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற கட்டடங்கள் அதனுடைய உரிமையாளர்கள் அடிக்கடி அதை மாற்றச் சொல்வதால் சில நேரங்களில் சில கிராமத்தில் உங்கள் ஊருக்கு கட்டடங்கள் இல்லை, ஆகவே தங்கள் ஊருக்கு வர இயலாது என்றுகூட சொல்லுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஆகவே, தமிழகத்திலுள்ள அனைத்து கிராமச் சாவடிகளிலும் அரசு புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதோடு, வாடகைக் கட்டடத்தில் இயங்குவதற்கு வாடகையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பரப்பாடியில் இருக்கின்ற கிராமச் சாவடி அந்த இளங்குளம் கிராமத்தைச் சேர்ந்த கிராமச் சாவடி, அங்கே மாடு அடைக்கக்கூடிய பவுண்ட் ஒன்று இருக்கிறது. அது இப்பொழுது காலியாகத்தான் இருக்கின்றது. அந்த இடத்தில் விரைவிலேயே கட்டித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விகள் போட்டால் அவர் கேட்ட அத்தனை தகவல்களையும் சொல்லலாம். இருந்தாலும், மொத்த கிராமச்சாவடிகள் 1536. நல்ல நிலையில் உள்ளவை 491, சீர் செய்யப்பட வேண்டியவை 592 மற்றும் புதுப்பிக்கப்பட வேண்டியவை 453. குறிப்பாக இந்தக் கேள்வி எழுப்பப்பட்டதற்குப் பிறகு வந்திருக்கக்கூடிய ஒரு தகவல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நாங்குநேரி வட்டம் பரப்பாடி கிராமத்திலே



2001 ஜனவரி 22]

498/2 பி அந்த சர்வேயிலே நத்தம் புறம்போக்கு ஏழரை சென்ட் சி.ஆர்.ஏ.—நிர்வாக அலுவலரால் நிலமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கிராமச் சாவடி கட்டுவதற்கான வேலை விரைவில் தொடர இருக்கிறது என்ற நல்ல செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, மேலூர் திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

12—

## புதிய சிறைச்சாலை

***29907—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சிறைச்சாலையில் இலங்கை அகதிகள் இருப்பதால், போதிய இடவசதி இல்லாமையால், புதிய சிறைச்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதிய கிளைச் சிறை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இலங்கை அகதிகள் ஐந்தாறு பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், அந்தக் கைதிகளை வேறொரு மாவட்டத்திற்கு மாற்றி, புதிய சிறைச்சாலையாவது அல்லது அந்தச் சிறைச்சாலையைப் புனரமைத்து அவர்களுக்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரில் உள்ள கிளைச் சிறைச்சாலை அகதிகளுக்காக 1993 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பிறகு வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதை மீண்டும் சிறைத்துறைக்குத் தாருங்கள் என்று கேட்டபொழுது தற்போது இயலாது என்று வருவாய்த் துறை எங்களுக்குப்

பதில் அளித்திருக்கிறது. இதனாலே பெரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுவிட்டது என்று அரசு கருதவில்லை. எனவே, அந்த சுமார் 87 அகதிகள் மேலூர், செங்கல்பட்டு, திப்பு சுல்தான் மஹால் அதாவது வேலூர் ஆகிய பகுதிகளில் இருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு புனர்வாழ்வு அமைந்த பிறகு இந்தச் சிறைச்சாலையை - கிளைச் சிறைச்சாலையை மீண்டும் வருவாய்த் துறையிலிருந்து பெற்று அது செயல்பட ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

13—

## ஓய்வு பெறும் திட்டம்

***33397—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டில் அமைந்துள்ள நாகை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை நலிவடைந்து உள்ளதால், அத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தானே முன்வந்து ஓய்வு பெறும் திட்டத்தை அமல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணல்மேட்டிலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் தன் விருப்ப ஓய்வுத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அரசு அறிவித்த புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இந்நூற்பாலையில் தன் விருப்ப ஓய்வில் சென்ற 89 தொழிலாளர்களுக்கு ரூ.56,77,235 பணிக்கொடை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தவிர, தன் விருப்ப ஓய்வில் செல்லும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000 வீதம் 100 பேர்களுக்கு வழங்க மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து ரூ.20 இலட்சத்தை இந்த நூற்பாலைக்குக் கடனாக அரசு வழங்கியுள்ளது. (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டில் அமைந்துள்ள நாகை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை நலிவடைந்துள்ளது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்தார்கள். இப்படி பல கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலை, அதேபோல சாரம் கூட்டுறவு நூற்பாலை ஆகியவற்றில் நீங்கள் அங்குள்ள தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் போகக்கூடிய அளவுக்கு ஏற்கெனவே சில ஏற்பாடுகளைச் செய்தீர்களேயொழிய, இன்றுவரை நீங்கள் அரியூர் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்கவில்லை. அதைத் திறப்பதாக இந்த மன்றத்திலேயே மூன்று முறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். இருந்தாலும் இதுவரையில் அது திறக்கப்படாமல் இருப்பதன் மர்மம் என்ன? நீங்கள் இந்த ஆட்சிக் காலம் முழுவதும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியில் 'மர்மம் என்ன' என்றெல்லாம் கேட்கக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்படிக் கேட்டால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. முறையாகக் கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் உட்காருங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் கேட்டிருக்கிற மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரையில், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு நூற்பாலை அது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்காலத்திலே இந்த ஆலை தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வருகிறது. அந்த ஆலையைக் காப்பாற்றுகின்றவகையில், விருப்ப ஓய்வுத் (வி.ஆர்.எஸ்.) திட்டத்திலே தொழிலாளர்களுக்குத் தொகை வழங்கி இருக்கிற இந்த அரசையும், அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பதோடு, மேலும் விருப்ப ஓய்வுத் திட்டத்திற்குத் தகுதி பெற்றிருக்கிற 125 நபர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணத் தொகை வழங்கி, அந்த ஆலை சிறப்பாக நடைபெற அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்பு, மீண்டும் நாகப்பட்டினம் மாவட்டக்

தமிழ்நாட்டில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இயங்கும் சுற்றுச்சூழல் கல்வி மன்றங்களின் எண்ணிக்கை 700 ஆக உயர்ந்துள்ளது.

முற்பகல் 10-15

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய குறிக்கோள் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குத் தங்கள் அருகில் உள்ள சுற்றுச்சூழல் அவசியத்தை அறியச் செய்வது, சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கான காரணங்களைப் பற்றி எடுத்துரைப்பது மற்றும் சுற்றுச்சூழல் கோட்பாடு பற்றி தகுந்த களப் பயணம் அழைத்துச் சென்று பயிற்சி அளிப்பது, சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் தாங்களே அறிவியல் விசாரணை மேற்கொள்வது மற்றும் மரம் நடுதல், பள்ளி வளாகத்தைத் தூய்மையாக வைத்திருத்தல், மண்புழு உரம் தயாரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி நடத்துதல் போன்றவை இதனுடைய நோக்கங்கள் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இப்பொழுது மிக இன்றியமையாத உலகப் பிரச்சினையாக இருந்து வருகின்ற காரணத்தினாலே, இதன் நோக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த நோக்கங்கள் சரிவர நிறைவேற்றப்பட வேண்டுமேயானால், மேலை நாடுகளிலே உள்ளதைப்போல இந்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கல்வியை பாடத்திட்டத்தோடு சேர்த்து அதாவது ஒரு காலத்திலே நீதி வகுப்புகள் எப்படி பள்ளிகளிலே தனி வகுப்புகளாக நடத்தப்பட்டனவோ அதேபோல இந்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வகுப்புகளைத் தனியாக ஏற்படுத்தவும், பாடத்திட்டத்தோடு சேர்த்து பயிற்சி அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்து வரவேற்கத்தக்கது.



எதிர்காலத்தில் இதுபற்றி மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடன் கலந்து ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

15—

**வீடுகள்**

***15927—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய கிராம மக்களுக்கு மானியக் கடன் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே முன்னாள் நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் தமிழகத்திற்கு வருடத்திற்கு 65,000 வீடுகள் கிடைப்பதற்கு அப்போது அனுமதி அளித்திருந்தார்கள். தற்போது 21 ஆயிரம் வீடுகள்தான் தமிழகத்திற்கு மத்திய அரசு மூலமாகக் கிடைத்து வருகின்றன. அது அரசுக்குத் தெரியுமா? அல்லது அரசு அதிகமான வீடுகளை வாங்கிக் கொடுப்பதற்கு முன்வருமா? மேலும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு, அரசு ஆதிதிராவிடர்களுக்கு முழு மானியத்தில் வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்போல, பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு மத்திய அரசு மூலம் தமிழக அரசு முடிவுகளை மேற்கொள்ளுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்பு மட்டும் இத்திட்டத்தின்கீழ் 1,35,000 வீடுகள் கட்ட ரூ.154.20 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசாங்கம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 10

[2001 ஜனவரி 22

கூட்டுறவு நூற்பாலையில், 18 தொழிலாளர்களுக்கு ரூ.15,41,682 வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அரசாணையின்படி, மேலும் 14 கோடியே 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியிலிருந்து ரூ.1,92,62,000 செலவில் 150 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நாகப்பட்டினம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையிலிருந்து விடுவிக்கப்பட உள்ளனர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையாகக் கேட்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முறையில்லாமல் முன்பு கேட்டிருந்தாலும், அமைச்சர் அவர்கள் அரியூர் ஆலை பற்றி பதில் சொல்வார்கள், நீங்கள் உட்காருங்கள். அமைச்சர், அரியூர் ஆலை என்ன ஆயிற்று என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியூர் நூற்பாலை நல்லமுறையில் ஓடும் என்ற எங்களுடைய உறுதிவார்த்தையை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களே அந்த அரியூர் ஆலையின் விளம்பரப் பலகையில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்புதான் அந்தச் செய்தி கிடைத்தது. அவர்களே, 'கலைஞர் அவர்கள் இந்த ஆலையைத் திறக்கப் போகிறார்கள்' என்ற உறுதியை அங்கே அளித்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழி (குறுக்கீடு) அங்கே இருப்பதால்தான் சொல்கிறேன். அவர்களே அரசை நம்பித்தான் அங்கே உறுதியளித்திருக்கிறார்கள், அது நடக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதுவரை செய்யாத காரணத்தால் அதைச் செய்வீர்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. செங்கை சிவம், மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**14—**

**சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் கழகம்**

***22410—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 22]

'சிங்காரச் சென்னை' இலட்சியத்தை அடைய ஒவ்வொரு பள்ளி, கல்லூரியிலும், "சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் கழகம்" அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிங்காரச் சென்னை' என்ற இலக்கை அடைய நம்முடைய வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள் எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு வலு சேர்க்கின்ற வகையில், சென்னையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுமா? எங்கெங்கு அமைக்கப்படுகிறது? அதைப்போல மற்ற மாவட்டங்களிலும் இந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றனவா? இதனுடைய குறிக்கோள் என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைச் 'சிங்காரச் சென்னை' என்ற இலக்கினை நோக்கிக் கொண்டு செல்லவும், மாநிலத்தின் மற்ற பகுதிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாணவர்கள் பாடநூல் வாயிலாக வகுப்பறைகளில் பல்வேறு பாடங்களைக் கற்றாலும், சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் பற்றி வகுப்பறைக்கு வெளியே சிறிய அளவிலான பயிற்சிகளுடன் கலந்து கற்பிக்கும் நோக்குடன் தமிழகப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கும் பணி, 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக 1998-ல் திருச்சி, ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் 170 பள்ளிகளிலும், 10 கல்லூரிகளிலும், 1999-ல் மதுரை, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மொத்தம் 90 பள்ளிகள், 5 கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில், சென்னை, தேனி, விருதுநகர், தருமபுரி, சேலம், கரூர், கோவை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, கடலூர் ஆகிய 10 மாவட்டங்களில் 425 பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வி மன்றங்கள் என்னால் 6-11-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. இத்துடன்

[2001 ஜனவரி 22

ஆயிரம் ரூபாய் மானியம், 30 ஆயிரம் ரூபாய் கடன் தொகை என்கின்ற வகையிலே வீடுகளைக் கட்டுவதற்கு புதிய திட்டங்களை அறிவித்து, இப்போது ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள், மீனவர்களுக்கு வீடுகள், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள், இப்படி கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு வகைகளிலே மானியத்தோடு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

16—

### கால்நடை மருத்துவமனை

***29436—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் கால்நடை மருத்துவமனை அல்லது பார்வை நிலையங்கள் அமைக்கக் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் தொகுதியில் கால்நடை மருத்துவமனை அல்லது பார்வைக் கிளைநிலையங்கள் அமைக்கக் கோரி முறையீடு ஏதும் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10-20

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளில் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கால்நடைத் துறையின் மூலமாகச் செய்ய வேண்டிய பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நான் பலமுறை கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறேன். மங்கலம்பேட்டையில் ஒரு



2001 ஜனவரி 22]

கால்நடை மருந்தகம் தொடங்கப்பட வேண்டுமென்று அரசிற்கே 10 ஆண்டுகாலமாக அரசின் சார்பிலே கோரிக்கை வந்திருக்கிறது; நானும் அதைக் கேட்டிருக்கிறேன். ஒரு ஒன்றியத்திலே இரண்டு இடங்களிலே கால்நடை மருந்தகம் இருக்க வேண்டுமென்பது விதி; தமிழ்நாட்டிலே அனைத்து ஒன்றியங்களிலும் இருக்கிறது. ஆனால் விருத்தாசலம் தொகுதியைச் சார்ந்த கம்மாபுரம், விருத்தாசலம் ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு இடத்தில்தான் இருக்கிறது. எனவே மீதியுள்ள கால்நடை மருந்தகத்தை மங்கலம்பேட்டையிலும் ஆலடியிலும் திறக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று விருத்தாசலத்திலே கால்நடைக் கிளை மருத்துவமனை இருக்கிறது. அதை பிரதம சுகாதார நிலையமாக உயர்த்த வேண்டும். பிரதம சுகாதார நிலையமாக உயர்த்துவதற்கு போதிய கட்டடங்கள், 1½ ஏக்கர் நிலம் இருக்கிறது. அதைச் செய்து தரவேண்டும். அதேபோன்று, விருத்தாசலம் கால்நடை மருத்துவமனையில் தினந்தோறும் 75 மாடுகள் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினா? ஒரு வினாவோடு நிறுத்துங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** 75 மாடுகள் தினந்தோறும் வருகின்றன. அதிலே 50 கருவூட்டுதல் பணி மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரேயொரு டாக்டர்தான் இருக்கிறார். மற்றொரு டாக்டரை நியமனம் செய்து, நடமாடும் கால்நடை மருத்துவமனையை அங்கே தருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கம்மாபுரம், விருத்தாசலம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்திருக்கின்றன. கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், திட்டக்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், கம்மாபுரத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், ஆக இரண்டு இயங்கி வருகின்றன. மேலும் மந்தாரக்குப்பம், வி. மங்கலம், கோட்டேரி ஏ. குமாரமங்கலம், வி. சாத்தப்பாடி, சி. கீரனூர் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே சேப்ளாநத்தம், முதனை, பாலக்கொல்லை, அரசக்குழி, சிறுவரப்பூர், கார்மாங்குடி ஆகிய பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில். விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் தற்போது செயல்பட்டு வருகிறது. இதற்கு கோபுரபுரம், மங்கலம்பேட்டை, மாத்தூர்,

கருவேப்பிலங்குறிச்சி, சாத்துக்குடல் கீழ்ப்பாதி, தொரவனூர் ஆகிய 6 இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் இவற்றிற்கு முறையே சாச்சிராயநத்தம், காட்டுபரூர், விஜயமாநகரம், இராஜேந்திரபட்டினம், ஆவிச்சிகுடி, மரவலூர் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் 18-1-2000-லிருந்து விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 11 முகாம்கள் நடந்து, 22,494 கால்நடைகளுக்கும், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 21,447 கால்நடைகளுக்கும் இலவச சிகிச்சைகள் தற்போது செய்யப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் தொகுதி, சின்னமோனூர்பட்டியிலே கால்நடை ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டு, பெருமனது வைத்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த ஆஸ்பத்திரிக்கு அனுமதி கிடைத்தது. ** தடையாணை பெறப்பட்டு, அந்த ஆஸ்பத்திரி இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. இது துணை வினாவா? ** தடையாணை வாங்கினார்கள் என்று சொன்னால் எப்படி? நீதிமன்றத்திலே தடையாணை வாங்கி இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். ** என்பதை எடுத்து விடுகிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே தடையாணை பெறப்பட்டு இன்னும் அந்த ஆஸ்பத்திரி தொடங்கப்படாமல் இருக்கிறது. விரைந்து அந்தத் தடையாணையை அகற்றி, அந்த ஆஸ்பத்திரியை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நீதிமன்றங்களிலே தடையாணை பெறப்பட்டிருந்தால் அது முறையாக அணுகப்பட்டு, தடையை விலக்கி தொடங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**17—**

### கலப்புத் திருமண நிதியுதவி

***32126—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவியினை வழங்கும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டத்தின்கீழ் வருகின்ற விண்ணப்பங்கள் ஒன்றிய அளவிலான விரிவாக்க அலுவலர்களாலும், மாவட்ட சமூக நல அலுவலர்களாலும் பெறப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. விசாரணை ஒரு திங்களுக்குள் முடிவடையும்பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் சேமிப்புப் பத்திரங்களும், காசோலைகளும் மாவட்ட சமூக நல அதிகாரியால் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பங்கள் பெறுவதற்கு இரண்டு ஆண்டு கால அவகாசம் இத்திட்டத்திலே தரப்பட்ட காரணத்தாலும், நிலுவையிலே உள்ள விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்ற நிலையிலே அந்த விண்ணப்பங்களையும் பரிசீலித்து நிதியுதவி வழங்கப்படுகிற காரணத்தாலும் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் அனைத்திற்கும் நிதியுதவி கூடுதலாக வழங்கியுள்ள காரணத்தால் விரைவில் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 22

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பல்வேறு காரியங்களை, ஆதிதிராவிடர்களுக்காக செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவிற்கே வழிகாட்டுகிற அரசாக நம்முடைய கலைஞர் அரசு இருக்கிறது. அந்த வகையிலே, வல்லம் பகுதியைப் பொறுத்தவரையிலே சுற்றி பல்வேறு கல்லூரிகள் இருக்கின்றன. பொறியியல் கல்லூரி, கலை, விஞ்ஞானக் கல்லூரி இவையெல்லாம் இருக்கின்றன.

அந்த வகையிலே ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி என்பதாலே அவர்களுக்கு இந்த இலாகாவிலே, ஆதிதிராவிடர் நலத் துறையிலே பள்ளிகளை அமைப்பதுதான் சிறந்தது என்ற முறையை கடைபிடிக்கிற வகையிலே வல்லத்திலே ஒரு ஆதிதிராவிடர் நலப்பள்ளியை தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு வெகுவாகப் பயன்படும் என்ற வகையில், இந்த அரசுக்கும் ஒரு சிறப்பு சேர்க்கும் என்ற முறையில், அது நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலம் காப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கிறது தமிழக அரசு என்பதைப் பலர் பாராட்டியிருக்கிறார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக புதிய பள்ளிகள் எதுவும் தொடங்கப்படுவதில்லை. பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகத்தான் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியிலே அதுவும் 18 விழுக்காடு தொடங்கப்பட்டு வருகின்றது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை மூலமாக முன்மொழிவுகள் அனுப்பி முயற்சி எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

19—

### பயணியர் விடுதி

***26246—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 22]

(அ) சுற்றுலாத் துறை மூலம் கரூரில் ஒரு பயணியர் விடுதி கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூரில் பயணியர் விடுதி கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு முக்கிய நகரங்களுக்குச் செல்லும் வழியில் மைய நகரமாக கரூர் அமைந்துள்ளது. எனவே அங்கு தமிழ்நாடு மோட்டல் ஒன்றை சுற்றுலாத் துறை மூலமாக கட்டித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சிக்கு சுமார் 80 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக விடுதிகள் இயங்கி வருகின்றன. அதுவே போதுமானதாக துறை கருதுகிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். முல்லையாறும் வைகையாறும் இணைந்து ஒன்றாக சேரக்கூடிய இடத்தில் அதாவது பேரணையில் அனுமாரப்பன் கோவில் இருக்கிறது. அங்கே நிறைய மக்கள் வெளியேயிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையினால், அதைச் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும். இயற்கைக் காட்சிகளும் சிறப்பான முறையிலே இருக்கின்றன. அங்கே மரங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தினாலும், இடம் நிறைய இருக்கின்ற காரணத்தினாலும், அதைச்

[2001 ஜனவரி 22
முற்பகல் 10-25

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திட்டம் நாட்டிலே இருக்கிற சாதி, மத, இன வேறுபாடுகளை அகற்றி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம். இதிலே மலைவாழ் மக்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறபோது, அவர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலே கிடைப்பதில்லை. ஆகையால், அவர்கள் இந்தச் சான்றிதழ்கள் கிடைக்காத காரணத்தால் அந்த நிதியுதவியை பெறமுடியாமல் இருக்கிறார்கள். எனவே அரசு இதுபோன்ற நிகழ்வுகளில் குறிப்பிட்ட மாவட்டங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சான்று அளித்தாலே போதும் என்ற ஒரு அரசாணையைப் பிறப்பிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ்களை முறையாகத் தருகின்றபோதுதான் இதற்குரிய நிதி வழங்கப்படும் என்று விதிமுறைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்த விதிமுறைகளை மாற்றி மக்கள் பிரதிநிதிகள் தருகின்ற பரிந்துரையின் அடிப்படையில் வழங்கலாம் என்று உறுப்பினர் சொல்வது ஏற்புடையதாக இல்லை. எனினும் இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் ஒரே சமயத்தில் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்த இளைஞனும், ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த பெண்ணும் திருமணம் செய்து கொண்டால் இந்தக் கலப்புத் திருமண நிதியுதவி மறுக்கப்படுகிறது. ஒரே சமயமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். இவையெல்லாம் தவிர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைக்கு மாறான செய்தியாக எனக்குத் தென்படுகிறது. காரணம், கலப்புத் திருமணம் செய்து கொள்ள நினைக்கிறபோது, அந்தக் கலப்புத் திருமணம் மதத்தின் அடிப்படையில் வேறுபாடு இருந்தாலும், அது நடைபெற்று வருகின்றது. குறிப்பாக முற்படுத்தப்பட்ட இனம், பிற்படுத்தப்பட்ட இனம், அதைப்போல தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் மற்ற இனத்துடன் செய்துகொள்ளும் கலப்புமண அடிப்படையில்தான் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறதே தவிர, இந்துமதம், இஸ்லாமிய மதம் என்று வேறுபாடு பார்க்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி ஏதேனும் திருமணத்திற்கு நிதியுதவி கிடைக்காமல் இருக்கும்பட்சத்தில், உறுப்பினர்கள் குறிப்பிட்டு தெரிவிப்பார்கள் என்று சொன்னால் அதற்கு ஆவன செய்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**18—**

## ஆதிதிராவிட நலப்பள்ளி

***23586—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி கீழத்தெருவில் புதிதாக ஆதிதிராவிட நலப்பள்ளி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி கீழத்தெருவில் புதிதாக ஆதிதிராவிட நலப்பள்ளி அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2001 ஜனவரி 22

சுற்றுலாத் தலமாக மாற்றி, அங்கே வரக்கூடிய மக்களுக்கு, அவர்கள் நல்ல முறையிலே சாமி தரிசனம் செய்வதற்கும் தங்குவதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் துறைத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் துறை, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற இடங்களில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை துறையினுடைய கடமையாகக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தின் அடிப்படையில் அங்கே அதிகமாக பயணிகள் வருவதாக இருந்தால் நிச்சயமாக வருங்காலத்தில் பரிசிலிக்கப்படும் என்ற உறுதியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் உள்ள அத்தனை அணைகளும் அங்கேதான் இருக்கின்றன. நம்முடைய பொதுப் பணித் துறை சார்பில் அங்கே ஆளியாறு அணையில் அருமையான ஒரு பூங்கா கட்டப்பட்டு, டாப்சிலிப் உட்பட மிகப் பெரிய சுற்றுலா மையமாக என்னுடைய வால்பாறை தொகுதியிருக்கிறது. ஆகவே, ஆளியாறு அணையில் சுற்றுலாத் துறையின் மூலம் ஒரு பயணியர் தங்கும் விடுதி நம்முடைய அரசின் சார்பாகக் கட்டித்தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக விடுதிகள் கட்டுவதை இந்தத் துறை தேவையில்லை என்று கருதுகிறது. தனியார் யாராவது முன்வருவதாக இருந்தால் அவர்களுக்கு உதவி புரிவதற்காக துறை காத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 22]

20—

## இறால் பண்ணை

***29774—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இறால் பண்ணைக்காக பயன்படுத்தப்படும் நிலப்பரப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றில் இறால் பண்ணை தொடங்குவதற்கு முன்னர் என்ன பயிரிடப்பட்டு வந்தது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 1,289 இறால் பண்ணைகள், 5,194 எக்டேரில் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் இறால் பண்ணைகள் தொடங்குவதற்கு முன்னர் எவ்விதமான பயிர்களும் பயிரிடப்படவில்லை. காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் போன்ற அனைத்து மாவட்டங்களிலும் விவசாயம் செய்ய தகுதியற்ற நிலங்களாகவே இருந்துள்ளன.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளிலேயும், ஏரிகளுக்கு அருகிலேயும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விரோதமான முறையில், உச்ச நீதிமன்றம் வரையறுத்த எல்லைகளுக்குள்ளேயே செல்வாக்குமிக்க நபர்களால் இறால் பண்ணைகள் நடத்தப்படுவதாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகின்றன. அது பற்றிய விரிவான ஆய்வு அறிக்கைகள் எல்லாம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கின்ற இறால் பண்ணைகளில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் எல்லைக்கு விரோதமாக, அவை, வரையறுத்த எல்லைக்குட்பட்டு Effluent Water-ஐ கடலுக்குள்ளும், ஏரிகளுக்குள்ளும் கொண்டு செலுத்துகிற இறால் பண்ணைகள் எவ்வளவு? அவைமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 22

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையை வழங்கியது, இறால் பண்ணைகள் அழிக்கப்பட வேண்டும் என்று. சில மத்திய அரசு நிறுவனங்கள் இந்தத் தீர்ப்பினை மறுஆய்வு செய்ய வேண்டுமென்று மேல்முறையீடு வைத்திருந்தன. அதனை உச்ச நீதிமன்றம் பரிசிலித்து கீழ்க்கண்ட இடைக்கால ஆணையை வழங்கியிருக்கிறது. அழிக்கப்படவேண்டிய இறால் பண்ணைகள் அழிக்கப்பட வேண்டாம் என்றும் வரையறுக்கப்பட்ட இடங்களிலுள்ள இறால் பண்ணைகள் நீர் வாழ் உயிரின குழுமம் நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்குட்பட்டு இயங்கலாம் என்றும் இவ்விதிமுறைகளை மீறுவது கண்டறியப்பட்டால் அதாவது அந்தச் சட்டத்திற்குப் புறம்பாக இருக்குமானால் அழிக்கப்படும் என்றும் கூறியுள்ளது. அதற்கிணங்க இப்போது மொத்தத்தில் 76 இறால் பண்ணைகளுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள எந்த ஒரு இறால் பண்ணையும் இப்போது இயங்கவில்லை. 76-க்குத்தான் இப்போது அந்த உயர்மட்டக் குழு அனுமதி வழங்கியிருக்கிறது. மீதியுள்ள எல்லா இறால் பண்ணைகளும் இயங்காமல் இருக்கின்றன. படிப்படியாக மனு செய்திருக்கின்றன. மொத்தம் மனு செய்திருப்பவை 972. அந்த மனுக்கள் எல்லாம் ஆய்வில் உள்ளன. ஆய்வில் உள்ளவற்றில் அனுமதி வழங்கப்பட்டது 76-க்குத் தான். மீதி எல்லாம் படிப்படியாக — தகுதி உள்ளவையாக இருந்தால், அதுவும் பயிர் நிலங்கள் இல்லாதவையாக இருந்தால் மற்றும் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுக்கு அதாவது உச்ச நீதிமன்றம் விதித்த கட்டுப்பாட்டுக்கு ஏற்றாற்போல் இருந்தால்தான் அந்த அனுமதி வழங்கப்படும். அப்படித்தான் வழங்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. இந்தக் குழுமத்தின் பரிசிலனையில் பல மனுக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்து ஒன்றாக இருக்கிறது; யதார்த்த வாழ்க்கை வேறு ஒன்றாக இருக்கிறது. நடைமுறையில் தீர்ப்பு எல்லை வகுக்கப்பட்டு இருந்தாலும், அந்த எல்லைக்குள் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும் என்று.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய மூலக் கேள்விக்கும் இப்போது நீங்கள் கேட்கிற துணை வினாவுக்கும் ஏகப்பட்ட வேறுபாடு இருக்கிறது. இதற்குப் பதிலளிக்க அமைச்சர் தயாராக இருக்கிறாரா,



2001 ஜனவரி 22]

இல்லையா என்றுகூடத் தெரியாது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆகையினால் குறிப்பிட்டு நீங்கள் இதில் கேளுங்கள்; அதற்குண்டான பதிலை எதிர்பாருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** இப்படி ஒரு துணைக் கேள்வியை கேட்பதற்காகத்தான் அந்தக் கேள்வியையே நான் போட்டேன். ஆகவே, உச்ச நீதிமன்றம்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் துணைக் கேள்வியை நீங்கள் முதல் கேள்வியாகக் கேட்டிருக்க வேண்டும். சரி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** சரி. பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் வரையறுத்து இருக்கிற எல்லைக்குள் அனுமதிக்கப்படாமலேயே தமிழ்நாட்டின் எல்லைக்குள் பல இடங்களில் இறால் பண்ணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; அவற்றின் Effluent water கடலுக்குள் செல்வதால், கடலில் மீன் பிடிக்கிற மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுகிறது, ஏரிகள் பாதிக்கப்படுகின்றன என்பது தொடர்ந்து கிளர்ச்சிகளின் மூலம் உணர்த்தப்பட்டு வருகின்றன. பூதாள தலைவர்கள்கூட இந்தப் பிரச்சினையை எடுத்து, இது ஒரு Serious பிரச்சினை என்ற முறையிலே கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். எனவே, மாநில அரசு அதிரடி நடவடிக்கையாக, அனுமதி பெறாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இறால் பண்ணைகளை மூடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் மாவட்டத்தில் ஒரு குழுவும், மாநிலத்தில் ஒரு உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவின் அனுமதியோடுதான் இவை இயங்க வேண்டியிருக்கிறது. அப்படியே நீங்கள் சொல்வதுபோல், ஏதாவது அனுமதி வாங்காமல் இருந்தால், அதுபற்றி நீங்கள் எங்களுக்குத் தெரிவித்தால், நிச்சயமாக அதற்கு உரிய நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2001 ஜனவரி 22

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதித்த பிறகுதான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. கு. மனோகரன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. சி. ஞானசேகரன் அவர்களும் கொடுத்து இருக்கின்றார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக ஏற்றுக்கொண்டு, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. கு. மனோகரன் அவர்களை முதலிலே பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று தருமபுரி, பாலக்கோடு, பெண்ணாகரம், அரூர், மொரப்பூர் ஆகிய வட்டங்களைச் சார்ந்த பொதுமக்களும் வழக்கறிஞர்களும் உயர் நீதிமன்றத்தை அணுகிய பின்பு, உயர் நீதிமன்றம் 26-3-1995 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தை அமைக்க பரிந்துரைத்தது. அந்தப் பரிந்துரையை ஏற்று, தருமபுரியில் அந்த நீதிமன்றத்தை அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் கடந்த 18-1-2001 முதல் 20-1-2001 வரை 3 நாட்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம், சாகும்வரை உண்ணாவிரதம் என்று தருமபுரியில் இருந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரை அறிவுறுத்தியதன் பேரில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்த அமர்வு நீதிமன்றம் வழங்கப்படவில்லையெனில் 23-1-2001 முதல் சாலை மறியல், கடை அடைப்பு என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் உயர் நீதிமன்ற பரிந்துரையை ஏற்று தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தை வழங்க வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.



2001 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உங்கள் இடத்திலிருந்து பேசுங்கள்.

முற்பகல் 10-40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தினுடைய தலைநகரமாக விளங்கிக் கொண்டிருப்பது தருமபுரி. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே கிருஷ்ணகிரி என்கிற இடத்தை, நீதிமன்றத்தைப் பொறுத்த அளவிலே, தலைமையிடமாக வைத்து, அந்த இடத்திலே அமர்வு நீதிமன்றமும், அதேபோல சப்-கோர்ட் என்று அந்த இடத்திலே பல கோர்ட்டுகள் அமைக்கப்பட்டன.

ஆனால் தருமபுரியில் இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் மாவட்டத் தலைநகராக இருக்கக்கூடிய தருமபுரியில் ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் வேண்டும்; கிருஷ்ணகிரியில் இருக்கக்கூடிய அமர்வு நீதிமன்றம் அங்கேயே இயங்கட்டும்; Principal Sessions Judge Court அங்கேயே இருக்கட்டும்; Additional Principal Session Judge Court மட்டும் இங்கே வர வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்து, கிட்டத்தட்ட 5 ஆண்டு காலமாக அவர்கள் போராடி வருகிறார்கள்.

சென்ற மாதம்கூட நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள் வேலூருக்கு வழக்கறிஞர்களுடைய பாராட்டு விழாவிற்கு வந்தவர்கள், வழக்கறிஞர்கள் strike-ல் ஈடுபடக்கூடாது என்ற ஒரு கருத்தினை சொன்னபோது, நான் அந்தக் கூட்டத்திலேகூடச் சொன்னேன். வழக்கறிஞர்களுடைய கோரிக்கைகளுக்கு உயர் நீதிமன்றமும் அரசும் உடனுக்குடன் செவி சாய்க்காத காரணத்தினாலேதான் இதுபோன்று strike-குகள் உருவாகக்கூடிய ஒரு நிலைமை உருவாகிறது; வழக்கறிஞர்கள் எப்போதுமே strike செய்கிறபோது உயர் நீதிமன்றமும் கண்டுகொள்வதில்லை; அதுபோல அரசும் கண்டுகொள்வதில்லை. 5 ஆண்டு காலமாக இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்து வழக்கறிஞர்கள் போராடுகிறபோது, அரசு அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிற ஒரு முறையை வகுத்துக்கொள்ளவே மறுக்கிறார்கள். அப்படி மறுத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால்தான், இதுபோன்ற strike-குகள் வந்து கொண்டிருக்கின்றன.

இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் சொன்னதுபோல, அங்கேயிருக்கக்கூடிய தருமபுரி வழக்கறிஞர்கள் 18 ஆம் தேதியிலிருந்து சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்து,

[திரு. சி. ஞானசேகரன்] [2001 ஜனவரி 22

தொடர்ந்து அவர்கள் 3 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தபோது 4 வழக்கறிஞர்கள் மயக்கம் போட்டு, விழுந்து, அவர்களுடைய உயிருக்கு ஆபத்தாகி, பிறகு அவர்களெல்லாம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக செவி சாய்க்க வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்றம் ஏற்கெனவே ஒப்புதல் அளித்திருந்தும்கூட ஏன் அங்கு இன்னும் அந்தக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்கப்படாமல் இருக்கிறது என்பதை நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு விளக்க வேண்டும். அந்தக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் எப்போது தொடங்கப்படும்? இல்லையென்று சொன்னால், தொடர்ந்து இதுபோன்று வழக்கறிஞர்கள் போராடி, போராடி அவர்கள் ** என்று இந்த அரசு விரும்புகிறதா என்பதையும் இந்த இடத்திலே அவர்கள் தெளிவாக்கி, கூடிய விரைவிலே அந்த வழக்கறிஞர்களுடைய கோரிக்கைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தினுடைய தலைநகரமாக தருமபுரி இருந்து வந்தாலும்கூட, கிருஷ்ணகிரியில்தான் நீதிமன்றங்கள் எல்லாம் இருந்து வருகின்றன. 5 நீதிமன்றங்கள் கிருஷ்ணகிரியிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே பல ஆண்டு காலமாக, தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய 5 வட்டங்களை உள்ளடக்கிய பகுதியில் உள்ள வழக்கறிஞர்களும், பொதுமக்களும் தொடர்ந்து நீதிமன்றம் கேட்டு போராடி வருகிறார்கள். அரசுக்கு வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அனைத்து அரசியல் கட்சிகளும் அந்தப் போராட்டத்தைக் கையிலே எடுத்து தொடர்ந்து செய்து வந்தன. இந்த நிலையிலே மாவட்டத்திற்குள்ளேயே மிகப் பெரிய சர்ச்சை கிளம்பியது. என்னவென்று சொன்னால் கிருஷ்ணகிரியில் இருக்கக்கூடிய நீதிமன்றத்தை இங்கே மாற்றக்கூடாது என்ற ஒரு நிலை வந்த நேரத்திலே நாங்களெல்லாம் அதைத் தெளிவுபடுத்திச் சொன்னோம். கிருஷ்ணகிரியில் இருக்கக்கூடிய அமர்வு நீதிமன்றத்தை தருமபுரிக்கு மாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை; கூடுதலாக மாவட்டத் தலைநகரிலே ஒரு கூடுதல் அமர்வு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2001 ஜனவரி 22] [திரு. ஜி.கே. மணி]

நீதிமன்றம் வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் அணுகினோம். அப்போது வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. தொடர்ந்து சட்டமன்றத்திலே பல முறை பேசினோம். பேசிய நேரத்திலேகூட, அங்கே அமர்வு நீதிமன்றம் அமைப்பதாக வாக்குறுதி அளித்து, நீண்ட காலமாக நிலுவையில் இருந்த காரணத்தினாலேதான், கடந்த 18-1-2001 ஆம் நாளன்று வழக்கறிஞர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதிலே 6 வழக்கறிஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தை அறிவித்திருந்தார்கள். நான்கூட அந்த உண்ணாவிரதப் பந்தலுக்குச் சென்று இந்த சாகும்வரை என்ற வார்த்தையை எடுத்துவிடுங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றுவார்கள், காலம் கனிந்திருக்கிறது என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி வந்தேன். இருந்தாலும்கூட அவர்கள் கேட்கவில்லை. அதற்குப் பிறகு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் ஒன்றாகக் கூடி, மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து, இந்த உண்ணாவிரதத்தை நீங்கள் ஒத்திவைக்க வேண்டுமென்று வைத்த வேண்டுகோளை ஏற்று, உண்ணாவிரதம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே வாக்குறுதி நிறைவேற்றப்படாமல், இப்போதும் வாக்குறுதி தவறப்படும் சூழ்நிலையில் 23 ஆம் தேதியிலிருந்து அந்த 5 வட்டங்களிலே சாலை மறியல் போராட்டம், கடையடைப்பு போராட்டம் எல்லாம் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பிலேயும், அனைத்து அரசியல் கட்சிகள் சார்பிலேயும் நடத்தலாம் என்கிற ஒரு நிலையை எடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த 5 வட்டங்களை உள்ளடக்கிய பகுதி, அதிக வழக்கறிஞர்கள் செல்லக்கூடிய பகுதி, பொதுமக்கள் வழக்குகள் நிறைய இருக்கின்றன என்பதையெல்லாம் கருத்திலே வைத்து மாவட்டத் தலைநகரான தருமபுரியிலே கூடுதல் அமர்வு நீதிமன்றம் விரைவிலே தொடங்குவதற்கு, வார்த்தையோடு இல்லாமல், நீங்கள் வாக்குறுதி அளித்து, உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

முற்பகல் 10-45

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேகூட எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பு.த. இளங்கோவன் அவர்கள் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மற்றவர்கள் எல்லாம் சமாதானப்படுத்தி முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதாக வாக்குறுதி அளித்து, உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்

இதையெல்லாம் கவனத்தில் கொண்டு நீங்கள் நிறைவேற்றித் தருவதற்கு வாக்குறுதி அளிப்பதோடு கூடிய விரைவிலே இந்த அமர்வு நீதிமன்றம் அமைய ஆவன செய்ய வேண்டுமென்று தெளிவுபடுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் வழக்கம்போல, அவர் பேசுகின்ற நேரத்தில் எல்லாம் நிதானத்தைக் காட்ட வேண்டிய இடத்திலே வேகத்தைக் காட்டுவார், தேவையில்லாமல் வழக்கறிஞர்கள் எல்லாம் ** என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியது முறையல்ல என்று சொல்லி, அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு தொடர்பாக என்னுடைய துறையின் சார்பில் தரப்பட்டிருக்கின்ற விவரத்தை இந்த அவைக்குத் தெரிவித்து, அதற்குப் பிறகு அரசினுடைய முடிவையும் இந்த மாமன்றத்திற்கு நான் விளக்க இருக்கிறேன். தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்கள் கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆரம்பத்தில் இயங்கி வந்தன.

தருமபுரி நீதித் துறை மாவட்டத்தை இரண்டு நீதித் துறை மாவட்டங்களாகப் பிரித்து தருமபுரியில் புதிதாக நீதித் துறை தலைமையிடம் ஒன்றை ஏற்படுத்தலாம் என அனைத்து நீதிபதிகளும் முடிவு செய்திருந்தனர் என்று சென்னை உயர் நீதிமன்ற பதிவாளர் 1994 ஆம் ஆண்டு அரசுக்குத் தெரிவித்தார். இந்த முடிவிற்கிணங்க அவர் தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றம், தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஏற்படுத்த அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்தார். இந்தச் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து நிதிநிலை நெருக்கடி காரணமாக இந்தச் செயற்குறிப்பை அரசு தள்ளி வைத்து 1995-ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்திற்கு பதில் அனுப்பிவிட்டது. இதற்கிடையில் முன்னோடி திட்டத்தில் Pilot Project Scheme-ன் கீழ் கிருஷ்ணகிரியில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம் Additional Sessions Judge and Additional Chief Magistrate Court ஏற்படுத்த அரசு 1995-ஆம் ஆண்டு ஆணையிட்டது. இக்கூடுதல் நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் தற்போது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





செயல்பட்டு வருகிறது. பின்னர், கிருஷ்ணகிரி வழக்கறிஞர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்றம் தருமபுரி நீதித் துறை மாவட்டத்தை இரண்டு நீதித் துறை மாவட்டங்களாக பிரிக்கலாம் என்ற தனது முந்தைய பரிந்துரையை மறுபரிசீலனை செய்து தருமபுரி மாவட்டத்தை ஒரே நீதித் துறை மாவட்டமாக தொடர்ந்து வைத்துக்கொள்வது என்று முடிவு செய்திருந்தது. எனினும் தருமபுரியில் தற்போது வேலை பளுவை கருத்தில் கொண்டு கிருஷ்ணகிரியில் தற்போது செயல்பட்டு வரும் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தை தருமபுரிக்கு மாற்றி தனியாக ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கலாம் என சென்னை உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. இப்புதிய நீதிமன்றத்தை தருமபுரியில் தொடங்கிட பரிந்துரை செய்யும்போது, கூடுதல் பணியாளர்கள், புதிய தளவாடங்கள், தொலைபேசி, கார், ஜெராக்ஸ் இயந்திரம் போன்றவை வாங்க ஒப்பளிப்பு வழங்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் அரசைக் கேட்டுள்ளது. இவ்வகையில் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 8,24,760 ரூபாய் தொடரினச் செலவும் 7,57,620 ரூபாய் தொடராயினச் செலவும் ஏற்படும். மேற்கண்ட செலவினத்திற்கு நிதித் துறையின் ஒப்புதல் தேவைப்படுகிறது. நிதித் துறை சென்னை உயர் நீதிமன்றத்தின் இப்பரிந்துரையை அலுவல் குழு Official Level Committee முன் வைத்து முடிவு செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்தது.

அதன்படி இந்தச் செயற்குறிப்பை அலுவல் குழு முன் வைத்து முடிவெடுப்பதற்குத் தேவையான குறிப்பு நிதித் துறைக்கு அனுப்பப்பட்டது. 1999-2000 நிதி ஆண்டில் எந்த புதுத் திட்டத்தையும் அறிமுகம் செய்யக்கூடாது என்று தெரிவித்து, இந்தச் செயற்குறிப்பை நிதித் துறை, நீதித் துறை அல்ல, நிதித் துறை திருப்பி அனுப்பிவிட்டது. எனவே இந்தச் செயற்குறிப்பை 2000-2001 ஆம் ஆண்டு புதுப்பிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். 2000 ஆண்டு மே மாதத்தில் இச்செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரால் புதுப்பிக்கப்பட்டபோது மீண்டும் அதிகமான செலவினம் இச்செயற்குறிப்பினால் ஏற்படுமானால் இதனை 2001-2002 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தில் கொண்டுவருமாறு நிதித் துறை தெரிவித்துள்ளது. எனினும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. கு. மனோகரன், திரு. ஜி.கே. மணி, திரு. சி. ஞானசேகரன் போன்றவர்கள் அரசுக்கு முறையீடு செய்திருப்பதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதை அனுதாபத்துடனும், நல்ல முறையிலும் பரிசீலித்து, உயர் நீதிமன்றத்தின்

[திரு. ஆலடி அருணா] [2001 ஜனவரி 22

பரிந்துரைக்கு ஏற்ப இந்த ஆண்டே தருமபுரியில் தனியாக ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றமும், கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றமும் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த நீதிமன்றத்தை அமைப்பதற்காக யாரும் கடையடைப்பு செய்யத் தேவையில்லை, சாலை மறியல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் கோரிக்கை ஏற்கப்பட்டு இந்த நீதிமன்றம் உடனடியாகத் திறக்கப்படவிருக்கிறது. முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு நான் இதை அறிவித்துள்ளேன். இதற்கான நிதியும் உடனடியாக வழங்கப்படும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நான் பேசியதற்குப் பிறகு பேசுங்கள், இப்போது உட்காருங்கள்.

## 3. அரசினர் தீர்மானம்

### 23-3-1999 அன்று பேரவையால் திரு. இரா. தாமரைக்கனி அவர்களுக்கு விதித்த 15 நாட்கள் சிறைத் தண்டனையில் எஞ்சிய காலத்தை இரத்து செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம் குறித்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 23-3-1999 அன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நடந்த நிகழ்வு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகின்றேன். அது தொடர்பாக—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களைத் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதற்காக—மாண்புமிகு ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து இப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் அடிப்படையில் அவர் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் 25-3-1999 அன்று தற்காலிக தடை விதித்து உறுப்பினர் ஜாமீனிலே வெளியே விடப்பட்டார். இவ்வழக்கில் 22-12-2000 நாளன்று சென்னை உயர் நீதிமன்றம் சட்டப் பேரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் உறுப்பினர் திரு. தாமரைக்கனியை 15 நாட்கள் காவலில் வைத்து பேரவைத் தலைவர் வெளியிட்ட உத்தரவு செல்லுபடியாகும் என்றும் அவர் சிறையில் அனுபவித்த நாட்கள் தவிர



2001 ஜனவரி 22] [பேரவைத் தலைவர்]

மீதமுள்ள நாட்களுக்கான சிறைத் தண்டனையை அவர் அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பு கூறியுள்ளது. எனவே, இப்பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் திரு. தாமரைக்கனி அவர்கள் ஏற்கெனவே தண்டனை அனுபவித்த நாட்கள் தவிர மீதமுள்ள நாட்களுக்கு சிறையில் அடைக்கப்பட வேண்டும். எனினும் திரு. தாமரைக்கனி அவர்களுக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து இப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அவர் ஏற்கெனவே தண்டனை அனுபவித்த நாட்களே போதுமானதாகக் கருதப்பட வேண்டுமென்று, இந்தத் தீர்ப்பு வந்த பிறகு, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்த நேரத்தில், இந்த இரண்டு நாள் சிறைத் தண்டனையே போதும், சட்டமன்றத்தின் இறையாண்மையைக் காப்பாற்றுவதுதான் நம்முடைய குறிக்கோள் ஆகுமே அல்லாமல் சிறைத் தண்டனை முக்கியம் அல்ல என்று சொல்லிவிட்டு, இருந்தாலும் இந்தச் சிறைத் தண்டனைத் தீர்மானம் எல்லா கட்சித் தலைவர்களையும் கலந்து ஒருமனதாக சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ற வகையில், அதை மாற்ற வேண்டுமென்றால் மறு தீர்மானம் இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதன் அடிப்படையில் அலுவல் ஆய்வுக் குழுவிலே முதலமைச்சர் அவர்களே முன்மொழிந்து, எல்லா கட்சித் தலைவர்களும் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று, ஏற்கெனவே திரு. தாமரைக்கனி அவர்கள் சிறையிலே இருந்த இரண்டு நாட்களே போதும் என்றும், மீதமுள்ள நாட்களுக்கு அவர் சிறையில் இருக்க வேண்டியதில்லை என்றும், இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அவர் எதிர்காலத்திலே ஈடுபடக்கூடாது என்றும் ஓர் எச்சரிக்கை செய்து, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை முடிக்கலாம் என்றும் ஒருமனதாக எல்லோரும் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொண்டு, அதற்குரிய தீர்மானத்தை இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை அவையில் முன்மொழியுமாறு அழைக்கின்றேன்.

முற்பகல் 10-55

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"23-3-1999 ஆம் நாளன்று இப்பேரவையில் திரு. இரா. தாமரைக்கனி அவர்களுக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அவர்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2001 ஜனவரி 22

ஏற்கெனவே சிறைத் தண்டனை அனுபவித்த நாட்களே போதுமானது எனக் கருதி மீதமுள்ள நாட்களுக்கான சிறைத் தண்டனை இரத்து செய்யப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இந்த அளவோடு இந்தப் பிரச்சினை முடிவுற்றது.

## 4. தகவல் கோரல்

### கன்னட நடிகர் இராஜ்குமார் விடுதலை குறித்து உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னட நடிகர் திரு. இராஜ்குமார் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 9-15 மணிக்கு என்னிடம் வந்து ஒரு முன்னறிவிப்பைக் கொடுத்துவிட்டு 10-00 மணிக்கு என் தீர்ப்பைக் கேட்டீர்களென்றால் எப்படி? நீங்கள் முதலமைச்சர்மீது ஓர் உரிமைப் பிரச்சினையை, இராஜ்குமார் விடுதலை விவகாரத்திலே கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் படித்துப் பார்த்து, அதை அனுமதிக்கலாமா, இல்லையா என்ற என் தீர்ப்பைப் பின்னால் சொல்வேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன் என்பதை நீங்கள் விளம்பரம் தேடிக்கொள்வதற்காக வேண்டுமானால் சொல்லுங்கள். அதற்கு மேலே நான் பேச அனுமதிக்க மாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் காலை 8-10-மணிக்கே கொடுத்துவிட்டேன்.



2001 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முன்னறிவிப்புக் கொடுப்பீர்கள் என்பதற்காக நான் இங்கே வந்து காத்திருக்க முடியுமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** செயலாளரிடம் கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் கைக்கு 9-15 மணிக்கு வந்தது. நான் அதைப் பரிசீலனை செய்து தீர்ப்பு சொல்வேன்; ஆறு பக்கங்கள் எழுதியிருக்கிறீர்கள். அதை என்ன என்று நான் படித்துப் பார்க்காமல் முடிவு சொல்ல முடியாது. ஆகையினாலே, நீங்கள் அந்த அளவோடு நிறுத்திக்கொள்ளுங்கள். முதலமைச்சர் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள். "ஆம், நான் அதைப் படித்துப் பார்த்து அதன் முடிவைச் சொல்வேன்" என்று நான் சொல்கிறேன். அதோடு முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான்தான் சொல்லிவிட்டேனே? நான் அதற்கு மேலே பேசவிட மாட்டேன். என்னை நீங்கள் சொல்லக்கூடாது என்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், முதலமைச்சர் மீது, இராஜ்குமார் விடுதலைப் பிரச்சினையிலே ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்லுங்கள்; அதை மட்டும் ரெக்கார்டு பண்ணிக்கொள்கிறேன். நான் அதைப் படித்துப் பார்த்துவிட்டு தீர்ப்பு சொல்வேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு தமிழக முதல்வர் மீது இராஜ்குமார் அவர்கள் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓர் அவை உரிமை மீறல் கொடுத்திருக்கின்றேன். அதை விவாதிக்க வேண்டும். நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை விவாதிக்க முடியாது. அதை விவாதிக்கலாமா, வேண்டாமா என்பதை நான் படித்துப் பார்த்துவிட்டு, என் உத்தரவைச் சொல்கிறேன், உட்காருங்கள்.

## (5) அறிவிப்புகள்

### (அ) நாமக்கல் கவிஞர் மாளிகையில் "குடியரசு வளர்ச்சியில் சட்டமன்றத்தின் பங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. குடியரசுப் பொன்விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, 'குடியரசு வளர்ச்சியில் சட்டமன்றத்தின் பங்கு' என்ற தலைப்பில் முன்னாள் மற்றும் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவைத் தலைவர்கள் பங்குபெறும் கருத்தரங்கம் இன்று, 22-1-2001 மாலை 4-00 மணியளவில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10-வது தளத்திலுள்ள மாநாட்டு

[பேரவைத் தலைவர்] [2001 ஜனவரி 22

கூட்ட மண்டபத்தில் நடைபெறும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கருத்தரங்கினைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 11-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்.

1. திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்
2. திரு. சுப. தங்கவேலன்
3. திரு. ஏ.ஜி. சம்பத்
4. திரு. செங்கை சிவம்
5. திரு. ப. மோகன் கந்தசாமி
6. திரு. பி. வெங்கடசாமி

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிதல், திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை உங்கள் அனுமதியோடு முன்மொழிகின்றேன்:

"2001 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

---

@ 159 முதல் 166 வரையிலான பக்கங்களில் மேதகு ஆளுநர் ஆற்றிய ஆங்கில உரை இணைப்பு-I ஆகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையில் படித்த ஆளுநர் உரையின் தமிழாக்கம் 167 முதல் 176 வரையிலான பக்கங்கள் இணைப்பு-II ஆகவும் அச்சிடப்பெற்றுள்ளன.



2001 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல், திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குகிறது, திரு. சுப. தங்கவேலன்.

***திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டப் பேரவையினுடைய நிறைவுக் கூட்டத் தொடரிலே மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீதான விவாதத்திலே, நன்றி கூறும் தீர்மானத்தினை முன்மொழிந்து பேசுகின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கும், என்னுடைய நெஞ்சம் நிறைந்த தலைவரும், தமிழக மக்களுடைய நெஞ்சங்களில் தங்கச் சிம்மாசனம் போட்டு வீற்றிருப்பவரும், மீண்டும் ஐந்தாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர இருப்பவருமான எங்கள் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிந்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-00

ஆளுநருடைய உரையில், தேர்தல் நெருங்கி வருகின்ற இந்தக் காலகட்டத்தில்கூட, 5 ஆண்டு காலத்தில் அற்புதமாக நடத்தப்பட்டிருக்கக்கூடிய இந்த ஆட்சியினுடைய சாதனைகளை எல்லாம் தொகுத்து ஒரு முத்தாரமாக தந்திருக்கின்றார்கள். புதிய செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், எதிர் வரிசையில் இருப்பவர்கள் இது ஆளுநருடைய உரையல்ல, ஆளுகின்ற முதல்வர் அவர்களால் தயாரித்து, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்களாலே படிக்கப்பட்ட உரை என்று விமர்சனம் செய்வார்கள்.

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு மிகப் பெரிய ஜனநாயகவாதி என்பதைத் தெளிவுபடுத்துகின்ற வகையில், தேர்தல்

நெருங்குகின்ற காலக்கட்டத்திலேகூட, பல்வேறு சாதனைகளை எல்லாம் செய்யப் போகிறோம் என்று எடுத்துச் சொல்லி, ஒரு குறையான பிரச்சினையைத் தேடிக்கொள்வதற்கு அவர்கள் விரும்பாமல் ஒரு மிகப்பெரிய ஜனநாயகவாதி என்பதை நிரூபித்திருக்கின்றார்கள். இன்றைக்கு நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் ஒரு மிகப் பெரிய இலட்சியவாதி என்று எடுத்துக்காட்டுகின்ற வகையில், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தத்துவத்தைத் தொடர்ந்து இங்கே வலியுறுத்தி வருகிறார்கள். அதைப்போல கடந்த ஆட்சிக் காலத்தில், அவர்கள் புரிந்த ஊழல்களை மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் ஆட்சி மாற்றம் செய்தார்கள். அதன்படி நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று ஓர் ஊழலற்ற, ஓர் அற்புதமான ஆட்சியை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். எனவே, ஊழலற்ற ஆட்சியைத் தந்ததோடு மட்டுமல்லாமல், ஊழல் புரிந்தவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து, அதேநேரத்தில் ஊழலின் ஊற்றுக்கண்ணாக இருந்த ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற முறையை மாற்றி, ஓர் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நடைமுறைச் சட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ்நாடு ஒரு சிறந்த நாடு என்பதை எடுத்துக்காட்டுகின்ற அளவிற்கு, ஒரு ஊழலற்ற சட்டப் பேரவை இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற வகையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே நான் பெருமிதத்துடன் எடுத்துச்சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, சமுதாய நல்லிணக்கம். ஜாதி பேதமற்ற சமதர்ம குடியரசை உருவாக்குவது எங்கள் இயக்கத்தினுடைய இலட்சியமாகும். அதனுடைய வழிகாட்டுதலிலேதான் தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் இப்போது நூற்றுக்கு மேற்பட்ட சமத்துவபுரங்கள் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

தென்மாவட்டங்களிலும் இன்னும் சில மாவட்டங்களிலும் ஜாதிப் பிரச்சினைகள், மதப் பிரச்சினைகள் எழுந்த நேரத்தில் அவற்றை எல்லாம் ஒரு கட்டுக்குள் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல், அந்த நேரத்தில் நடந்த கசப்பான உணர்வுகளை, சங்கடங்களை ஆய்ந்து அறிக்கை தருவதற்கு நீதியரசர் மோகன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் பலவற்றை ஏற்று அமல்படுத்தி இருக்கக்கூடிய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு நிரந்தரமானத் தீர்வைக் காண வேண்டுமென்று கருதியவர்கள், நம்முடைய



நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைத்தார், தென்தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு, தொழில், அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு என்ன ஆலோசனைகளை நீங்கள் சொல்கிறீர்கள் என்று, அவர்களிடத்திலே கருத்துக் கோரப்பட்டது. அவர்களும் தென் மாவட்டங்கள் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அந்தக் கருத்துக்களை எல்லாம் தொகுத்து, அரசிடத்திலே தந்திருக்கிறார்கள். அதன்மீது எடுக்கப்படுகின்ற முடிவை மிகுந்த ஆவலோடு தென்மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டில் உணவுப்பொருட்களில் ஒன்றான, எண்ணை, பயறு வகைகள் எல்லாம் விலை உயர்ந்துவிடாமல் தடுப்பதற்காக ஒரு உயர் நிலைக் குழுவை நியமித்திருக்கிறார்கள். அது இன்றைக்கு இந்த அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, நம்முடைய உணவுப் பங்கீடு. உணவுப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு அற்புதமான கட்டமைப்பு நம்முடைய தமிழ்நாடுதான். நாங்கள் எல்லாம் மாணவர்களாக இருந்த காலத்தில் ஒரு டெக்னிக்கல் அரிசி. அதாவது வானவில்லைப் போன்ற வர்ணஜாலங்கள் கலந்த அரிசி தான் அன்றைக்குப் போடப்பட்டது. அந்த அரிசியை ஒரு முறைக்கு பலமுறை களைந்து, உலையிலிட்டு சாதமாக வடித்தெடுத்தாலும், அதனுடைய வாடை போகாது. அந்த வாடையை மாற்றுவதற்கு கருவாட்டுக் குழம்பு வைத்து, அதிலே கலந்து சாப்பிட்டால்தான் சாப்பிட முடியும் என்ற நிலைமை அன்றைக்கு இருந்தது. ஆனால், இன்றைக்கு தும்பைப்பூவைப் போன்ற அரிசி நியாய விலைக்கடைகளில் போடப்படுகிறது. அதுமட்டுமல்ல, இது எங்கே கொள்முதல் செய்யப்படுகிறதோ அங்கே, மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில்கூட அனைவருக்கும் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுவதில்லை. ஆனால், தமிழ்நாட்டிலே மட்டும்தான் தற்போது அற்புதமான முறையிலே, வறுமைக்கோட்டிற்கு கீழே, மேலே என்று பார்க்காமல் அனைவருக்கும் கிலோ ஒன்றிற்கு ரூ.3.50-க்கு அரிசி தரப்படுகிறது.

நெல் அரிசியாக வேண்டும், குருணையாகிவிடக் கூடாது என்று பதம் பார்ப்பார்கள் தாய்மார்கள். அது இடிந்து போகின்ற அளவிற்கு, குருணையாகின்ற அளவிற்கு நிலைமை இருந்தால், மாலை நேரத்திலே நிலாக் காயும்போது அந்த நெல்லைக் காயப் போடுவார்கள். அதற்கும் இன்றைக்கு அந்த சிமெண்ட் தளங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. இரவு நேரங்களிலே அதிலேதான் தெருவிளக்கில் கிராமத்து மாணவர்கள் படிக்கின்றார்கள் அதிலேதான் கிராமத்து பெரியவர்கள் எல்லாம் பாய் விரித்துப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே சிமெண்ட் சாலை எதற்கு என்று யாரேனும் கேட்பார்கள் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கிராமப்புறத்தைச் சார்ந்த தாய்மார்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்து, நம்முடைய கணினி தொலைத் தொடர்பு. அது எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. அமெரிக்காவினுடைய பல்கலைக்கழகமே ஆய்வு செய்துவிட்டு, மனித குலத்தினுடைய மொத்த ஜனத் தொகையில் பாதிக்கு மேல் வாழுகின்ற ஆசிய கண்டத்தினுடைய நுழை வாயிலாகவே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வரப் போகிறது என்று சொல்லியுள்ளது. அதை அற்புதமாக உருவாக்கியிருக்கிறார் தானைத் தலைவர் கலைஞர் என்று சொன்னால், இது எங்கே போகிறது? 10 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான் என்ற பெயரைப் பெற்றான். அவன் உலக நாடுகளிலே பல பகுதிகளுக்குச் சென்று மலேஷியா, பர்மா போன்ற பகுதிகளுக்கெல்லாம் சென்று அவன் அந்த நாடுகளை வென்று காட்டினான். அன்றைக்கு அவன் அழைத்துச் சென்ற படை, வீரப் படை அதற்கு இடைக் காலத்திலே வெளி நாட்டிற்குச் சென்ற படைகளெல்லாம் கூலிப் படைகளாகும். கள்ளத் தோணிகள் என்றுதான் தமிழக மக்களால் வருணிக்கப்பட்டார்கள். ஆனால் இப்போது இந்தக் கல்வியைத் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்களே அது ஒரு அற்புதமான சாதனை. அதனாலே இன்றைக்கு இந்த விஞ்ஞான உலகத்திற்குத் தமிழகத்தினுடைய மாணவர்களெல்லாம் மிகப் பெரிய மேதைகளாக, கணினி மேதைகளாக, கணினி கற்றவர்களாக விளங்குகிறார்கள். அமெரிக்கா மட்டுமல்ல உலகத்திலே பரந்து கிடக்கின்ற பல்வேறு நாடுகள் தமிழ்நாட்டிலே வந்து நேர்முகத் தேர்வுகளை நடத்தி இங்கே இருக்கக்கூடிய ஆற்றல் மிகுந்த இளைஞர்களைக் கண்டறிந்து தேர்வு செய்யக்கூடிய அளவிற்கு நம்முடைய



தலைவர் அவர்கள் இப்பொழுது கணினியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு டைடல் பூங்கா, அதைப் போலவே அதன் அருகிலேயே ஒரு இரண்டாவது பூங்காவை அமைக்கவிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே இது உருவாக்கப்பட்டிருந்தபோது அன்றைக்கிருந்த எண்ணிக்கை—ஏறத்தாழ 1200 அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் இன்றைக்கு இந்தக் கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்தக் கணினிக் கல்வியைக் கற்பிப்பதற்காக மட்டும் 17,000 ஆசியர்களை நியமித்துக்கொள்வதற்கு அனுமதி அளித்திருப்பதும் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1999 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற மாநாட்டில் அனைத்து அறிஞர்களையும் கலந்து, தமிழுக்கான விசைப் பலகையைத் தமிழ் மொழிக்கு நல்ல முறையிலே தரப்படுத்திய பெருமையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும்.

தகவல் தொழில் நுட்பத்திற்கென்று தனித் துறையை உருவாக்கிய பெருமையும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.

1995-96-ல் வெறும் 34 மென்பொருள் தொழில் பிரிவுகள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. அப்போது அவற்றின் சார்பிலே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களினுடைய ஏற்றுமதி விலைமதிப்பு வெறும் 37 கோடி ரூபாய்தான். ஆனால், இன்றைக்கு 1999-2000-ல் அதனுடைய ஏற்றுமதி மதிப்பு 1914 கோடி ரூபாய். எனவே, அந்த அளவிற்கு அற்புதமான முறையில் இன்றைக்கு தமிழ் நாட்டினுடைய பொருளாதாரம், தமிழ்நாட்டிலுள்ள தனி மனிதனுடைய ஆண்டு வருமானம் இவற்றையெல்லாம் நல்ல முறையில் உயர்த்துவதற்குப் பெரும் பொறுப்பு ஏற்று, இன்றைக்கு சங்கத் தமிழையும் தர முடியும், குறளோவியத்தையும் தர முடியும், இந்த நவீன விஞ்ஞான உலகத்திற்கு உரிய தேவைகளை உருவாக்கி அதில் மாணவச் செல்வங்களையும் உருவாக்க முடியும் என்ற ஓர் அற்புதமான சாதனையைத் தலைவர் அவர்கள் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போலவே அவருடைய படைப்பில் ஏராளமான சாதனைகள் ஏற்பட்டுள்ளன.

இப்போது, கிராமப்புறங்களிலே பொங்கல் கொண்டாடப்படுகிறது. எனவே, வருமுன் காப்போம் என்று சொன்னால், அதை கிராமப்புறத்து

இதனாலே 1 கோடியே 59 இலட்சம் மக்கள் பயன்படுகிறார்கள். இதனாலே அரசு மானியமாக செலவழிக்கக்கூடிய மொத்தத் தொகை 1,700 கோடி. 1,700 கோடியா என்று நாம் அச்சப்பட வேண்டியதில்லை. இதனால், பொதுச் சந்தையில் அரிசியினுடைய விலை இன்றைக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இது பெரிதும் பயன்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

மேலும், ஒரே மாதத்தில் இரண்டு புயல்கள் நம்முடைய தமிழகத்தை நோக்கி வந்தன. அதிலே ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பனை நோக்கி வந்து கொண்டிருந்தது. பகல் 2 ½ மணிக்கு பாம்பனைக் கடக்கும் என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்டம் 2 ஆண்டு காலம் மிகப் பெரிய கடுமையான வறட்சிக்கு இலக்காகி வந்தது. எதிர்வரும் தேர்தல் ஏப்ரல், மே என்று சொன்ன காரணத்தினால், குடிநீர்த் தட்டுப்பாடு என்று சொல்லியே சுலபமாகத் தேர்தலை சந்திக்கலாம் என்று எண்ணியிருந்த எதிர்க் கட்சியினுடைய வயிற்றில் புளியை கரைக்கின்ற வகையில் மழை பெய்தது. கிராமப்புறத்தில் ஒரு பழமொழிச் சொல்வார்கள் "பாம்பும் நோகாமல் பாம்படித்த கம்பும் நோகாமல்" என்று சொல்வார்கள். அதேபோல், யாருக்கும் அந்தப் புயல் தீங்கிழைக்காமல், மழை பெய்து, ஏராளமான குளம், குட்டைகள் நிரம்பி வழிந்தன. அதன் மூலமாக எங்கள் பகுதி மக்கள் தலைவர் கலைஞருடைய அரசு கருணை உள்ளம் கொண்ட அரசு (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல காரியங்களை எல்லாம், சமூகப் பணிகளை எல்லாம் செய்து கொண்டு வருகிற அரசு, இந்த இரண்டு புயல்களும் தலைவர் கலைஞருடைய ஆட்சிக்குத் தந்த அருட்கொடை என்று பேசிக் கொண்டார்கள். அந்த அளவிற்கு மிகப் பெரிய வறட்சியின் கோரப் பிடியிலிருந்து அந்தப் பகுதியையும், அந்த மக்களையும் மீட்டுத் தந்திருக்கிறது இந்த இரண்டு புயல் என்று சொன்னால், இயற்கையே மீண்டும் ஐந்தாவது முறையாக தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் ஆட்சிப் பீடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க வேண்டும் என்று அதற்கு அடையாளமாக வந்து போயிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கட்டமைப்பு வசதிகள். கட்டமைப்புகளைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாடு அற்புதமான முறையிலே திட்டமிடுகிறது. இதே மாமன்றத்தில் நான் பேசுகிறபோது சொன்னேன். சாலை மானியக்



கோரிக்கையில், இத்தனை ஆண்டு காலம் ஆகிவிட்டது, சுதந்திரம் கிடைத்து. ஆனால், நெடுஞ்சாலைத் துறையில், அதிலும் தேசிய நெஞ்சாலையில் 2,002 கிலோ மீட்டர் மட்டும்தானே இருக்கிறது என்று கேள்வி எழுப்பினேன். ஆனால், இந்த 4½ ஆண்டு காலத்திற்குள் 6,000 கிலோ மீட்டருக்கு மேல் தேசிய நெடுஞ்சாலை உருவாகி இருக்கிறது. அதேபோல, மாவட்ட பிரிவு சாலைகள் மாநிலச் சாலைகளாக, இதரச் சாலைகள் மாவட்டப் பெரிய சாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டு, இருக்கின்றன. சாலைகள், பாலங்கள் அற்புதமான கட்டமைப்பு. அதேபோல் மின்சாரம். ஒருபுறத்தில் உற்பத்தி நிலையங்கள், இன்னொரு புறத்தில் துணை மின் நிலையங்கள், மின் பெருக்கிகள் என்று தமிழ்நாடு இப்போது ஒளிமயமாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

மூன்றாவதாக குடிதண்ணீர். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பட்டியலிலே சொல்லப்பட்டிருக்கிற வகையிலே பார்த்தால்கூட 24,000-திற்கு மேற்பட்ட கிராமங்களுக்கு 1996-க்குப் பிறகு அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக கிராமப்புறங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, குடிநீர், சாலை வசதி, பாலங்கள், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். மாநிலத்தில் இருக்கக்கூடிய ஒரு மாவட்ட தலைநகரத்தையும், இன்னொரு மாவட்டத்தினுடைய தலைநகரத்தையும் அல்லது பிற மாநிலத்தையும் இணைக்கின்ற சாலைகள் மட்டுமல்ல, இந்த அரசு, தலைவர் கலைஞர் அவர்கள் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும், கிராமப்புறத்தை மையமாக வைத்து "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு" என்பதைப்போல கிராமப்புறத்திலே ஒரு உழவனுடைய நிலையிலே இருந்து சிந்திக்கின்ற தலைவர் அவர்கள் கிராமப்புறத்திலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் வேண்டும் என்று கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள், தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள் தந்திருக்கிறார்கள்.

சிமெண்ட் சாலைகள் மட்டும் 5,900 கிலோ மீட்டர் 472 கோடி ரூபாய் செலவில் தற்போது போடப்பட்டிருக்கிறது. சில பேர் கிராமங்களுக்கு சிமெண்ட் ரோடு தேவையா என்று கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். அவை, இன்றைக்கு மிகப் பெரிய வரவேற்பு பெற்றிருக்கின்றன. தாய்மார்கள் மத்தியில் மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன. காரணம், கிராமப்புறங்களிலே அவர்களாலே உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை அவித்து அரிசி ஆக்குவார்கள். அதை உலர்த்துவதற்கு களங்கள் கிடையாது கிராமங்களிலே. இந்தச் சிமெண்ட் சாலைகளிலேதான் இன்றைக்கு அந்த நெல்லை விரிக்கின்றார்கள். அந்த

மக்கள் வீட்டுப் பொங்கலாகக் கருதுகிறார்கள். கால்நடைகளுக்குப் பாதுகாப்புத் திட்டம். அதை மாட்டுப் பொங்கலாக அவர்கள் கருதுகிறார்கள். தமிழனுடைய வரலாற்றில் தமிழன் அவனுடைய நெல் மணிகளை அரிசியாக்கி பொங்கலிட்டு குதூகலத்தோடு கொண்டாடுவதற்கு அவனுக்கு ஒரு பொங்கல். அது வீட்டுப் பொங்கல். தன்னோடு தோளொடு தோளாக நின்று உழைக்கின்ற மாட்டுக்கு நன்றி சொல்வதற்கு மாட்டுப் பொங்கல். அதைப்போலவே இப்போது ஏராளமான திட்டங்கள், பூமாலைத் திட்டம், நவீன திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தனைக்கும் மேலாக, ஒரு கவிஞன் தலைவர் அவர்களை ஒரு கவிஞனாகவே பார்க்கிறான். ஒரு எழுத்தாளர் நம்முடைய தலைவர் அவர்களை ஒரு எழுத்தாளனாகவே பார்க்கிறான். ஆனால், நான் ஒரு விவசாயக் குடும்பத்திலேயிருந்து வந்தவன். அதனால் இன்றைக்கும் நான் நமது தலைவர் கலைஞர் அவர்களை ஒரு விவசாயியாக, நங்கவரம் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஒரு தலைவராகத்தான் பார்க்கிறேன். என்னுடைய பார்வையில் அவரை ஒரு மிகப்பெரிய உழவனாகவே பார்க்கிறேன்.

மேலும், இப்போது பாருங்கள், கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆளுகின்ற நாட்டிலேகூட இலவச மின்சாரம், எங்காவது உண்டா? இந்தியத் துணைக் கண்டத்திலே ஆளுகின்ற மாநிலங்களிலேயாவது உண்டா? விவசாயத் தொழிலாளர்களுக்கு, கூலித் தொழிலாளர்களுக்குச் சங்கம் கண்டிருப்பார்களே ஒழிய அவர்களுடைய எதிர்கால வாழ்விற்கு வளம் காணுவதற்கு ஏதாவது திட்டம் எங்காவது தீட்டப்பட்டதுண்டா? கிடையாது. ஆனால் தலைவர் அவர்கள் இப்போது 12 அமைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ 63 தொழில்கள். சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அவற்றிலே கொண்டு வந்து அவர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கியிருக்கிறார்களே.

இதெல்லாம் இந்தியத் திருநாட்டிற்கு ஒரு மாதிரி மாநிலமாக, இந்தத் தமிழக அரசு நடத்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அந்த உழவர்கள் எல்லாம் பனைமரத் தொழிலாளர்கள், நகைத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் இன்னும் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 53 வகையான தொழிலாளர்களும் குடும்பத்திலே குதூகலமாக இந்த ஆண்டுதான் பொங்கல் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அன்புத் தலைவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மீண்டும் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்து அமர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற என்னுடைய ஆவலைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இம்மாமன்றத்திலே ஆற்றிய பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கான இந்த விவாதத்தில் பங்குகொள்கிற நல்வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடும் கெடும்."

—என்பான் வள்ளுவன். நாளும் குடிமக்களின் நன்மை தீமைகளை ஆய்ந்து ஆட்சி செய்யாத அரசன் நாள்தோறும் மெல்ல மெல்ல நாட்டை இழப்பான் என்பதுதான் அதற்குப் பொருள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் குறளுக்கு ஏற்ப தமிழகத்தை ஒரேயடியாக இழந்துவிட்டாரே என்கிற ஆதங்கம் எங்களுக்கு உண்டு. இன்றைய நாட்டினுடைய முதல்வர் எது சொன்னாலும் நடக்கும் என்கிற நிலை மாறி சந்தனக் கடத்தல் வீரப்பன் போன்றவர்கள் எல்லாம் சொல்வது தான் இந்த நாட்டில் நடக்குமோ என்ற நிலை வந்து சேர்ந்திருப்பதுதான் இந்த நாட்டினுடைய தலையெழுத்தாக மாறிவிட்டது என்கிற வேதனையினுடைய விளிம்பிலேயிருந்து நான் இங்கே பேசக் கடமைப்பட்டிருக்கின்றேன். சந்தனக் கடத்தல் வீரப்பன், கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமார் அவர்களைக் கடத்திக் கொண்டு போய் —ஜூலை 30 ஆம் தேதி கடத்துகிறான். நவம்பர் 15 ஆம் தேதி — நவம்பர் 15 ஆம் தேதி தான் அவர் விடுதலை ஆனார் என்கிற தவறான செய்தியை இந்த நாட்டிற்குத் தந்தது. ஆனால் 11 ஆம் தேதியே அவர் விடுதலையான அந்த நிலையை இந்த அரசாங்கம் ஏன் மறைத்தது என்கிற நிலையை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் 15 11 ஆம் தேதி அந்த நடிகர் விடுதலை ஆகிறார். ஆனால் அரசாங்கம் 15

**•மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பனிடமிருந்து இராஜ்குமார் 15 ஆம் தேதிதான் விடுதலை ஆனார் என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்தது. எங்களைப் பொறுத்தவரையில்

11 ஆம் தேதி அவர் விடுதலை ஆனார் என்பதற்கான எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஏதோ ஒரு வாரப் பத்திரிகையிலே வந்த பேட்டியை வைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது என்றால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் உண்மையிலேயே சந்தனக் கடத்தல் வீரப்பன் என்றைக்கு விடுதலை செய்தான் என்பதை மறைக்கவேண்டிய அவசியம் இல்லை. இராஜ்குமார் அவர்கள் என்றைக்கு விடுதலையானார் என்பதை மறைக்க வேண்டிய அவசியமும் இந்த அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே 11 ஆம் தேதியே அவர் விடுதலை ஆனார் என்பதற்கான ஆதாரம் இருந்தால் அவர் சொல்வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அமைச்சர் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கமே—ஒரு அரசு தூதரை நீங்கள் அனுப்புகிறீர்கள். நக்கீரன் ஆசிரியர் கோபாலை நீங்கள் அரசு தூதுவராக அனுப்பி அவர் பஞ்சராகிவிடுவார் என்று ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்ததோ என்னவோ தெரியவில்லை, ஒரு ஸ்டெப்னியாக பழ. நெடுமாறன் அவர்களையும் அரசு தூதுவராக சேர்த்துக்கொள்கிறீர்கள். இப்படி இரண்டு பேர் அங்கே போய் அவர்களுக்குத் துணையாக இன்னும் சில ஸ்டெப்னிகளாக அங்கே சுகுமாறன், கல்யாணி போன்றவர்கள் எல்லாம் போகிறார்கள். அரசு தூதுவர்கள் ஏற்கெனவே அங்கே போய் எப்போது விடுதலையானார் என்கிற ஒரு செய்தியைக்கூட இங்கே இருக்கிற முதலமைச்சருக்கு அவர்கள் தெரிவிக்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய தீவிரவாத இயக்கம் இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஒரு போர் பரணி பாடி தனியாக ஒரு உலகத்தை அவர்கள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தினுடைய



எல்லைப் பகுதி இன்னது, இன்னது என்று இருப்பதெல்லாம் போய் இப்போது காட்டுப் பகுதிகள் எல்லாம் மெல்ல, மெல்ல வீரப்பன் பிடித்துக் கொண்டு அவர் ஓட்டே வாங்காத முதல்வராக அங்கே கொடியோச்சி, அங்கே கொடி கட்டி பறந்துகொண்டு இருக்கிறாரே அது எந்தவிதத்தில் நியாயம் என்பதைத்தான் நான் இந்த மன்றத்தில் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வீரப்பன் இதுவரை கைது செய்யப்படவில்லை.

முற்பகல் 11-20

உங்களுடைய கணக்கு பிரகாரமே 15 ஆம் தேதி அவர் விடுதலை ஆனார் என்ற செய்தி உங்களிடம் இருக்குமேயானால், நீங்கள் அதிரடிப்படையை உடனடியாக ஏவிவிட்டு, ஏனென்றால் ஒரு பெண் டாக்டர் பானு போய்ப் பார்க்கிறார், கொளத்தூர் மணி போய்ப் பார்க்கிறார், நக்கீரன் கோபால் போய்ப் பார்க்கிறார், நெடுமாறன் போய்ப் பார்க்கிறார். இவர்கள் எல்லாம் பார்க்கிறபோது நம்முடைய பலம் பொருந்திய ஒரு காவல் துறை, ஸ்காட்லாந்துயார்டு போலீஸுக்கு இணையான ஒரு காவல் துறை, ஏன் அந்த வீரப்பன் இருக்கக்கூடிய இடத்தை இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது thousand doller question still unanswered. இந்த அரசாங்கம் இந்த நாட்டிற்கு நிச்சயமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. உங்களுடைய Intelligence wing என்பது முழுக்க, முழுக்க utter failure ஆகிவிட்டதா அல்லது உங்களுடைய காவல் துறை முழுக்க, முழுக்க * செயலிழந்து விட்டதா என்பதைத்தான் நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரணமாக, ஒரு பிக்னிக்-க்குப் போகிறமாதிரி போய், போய் வருகிறார்கள். வீரப்பனைப் பார்த்துவிட்டு வருகிறார்கள். அங்கே போய் இராஜ்குமாருக்கு அவர்கள் வைத்தியம் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் அப்படிச் செய்கிறபோது, சாதாரணமானவர்கள் எந்தவிதமான பலமும் இல்லாதவர்கள், எந்தவிதமான வசதியும் இல்லாத இவர்கள் போய் அப்படிச் செய்கிறபோது..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** சரி, மாற்றிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "காவல் துறை செயலிழந்துவிட்டதா" என்று தாங்கள் மாற்றிக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** திரு. சி. ஞானசேகரன் சொன்ன சொல் அப்படியே அவைக் குறிப்பில் இருக்கட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** நம்முடைய அமைச்சர் அப்படியே இருக்கட்டும் என்று கூறுகிறார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டால் அப்படியே வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, எடுத்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உங்களுடைய முடிவை ஏற்றுக்கொள்கிறேன்.

அந்த அளவிற்குச் சாதாரணமானவர்கள் போய்ப் பார்க்கிறபோது, நம்முண்டய Inteligence ஏன் failure ஆகியிருக்கிறது? காவல் துறை ஏன் இங்கே failure ஆகியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவைக்கு விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, திடீரென்று ஓர் அறிவிப்பு வருகிறது. வீரப்பன் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை, தகவல் கொடுத்தால் நாங்கள் 20 இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்று அரசாங்கம் ஓர் அறிவிப்பு விடுத்ததாக பத்திரிகைகளிலேயெல்லாம் செய்திகளைப் பார்த்தேன். இப்போது அதற்கு மாறாக நீங்கள் அவரை அரசுத் தூதர் என்று அறிவிக்கவில்லை. இருந்தாலும், வீரப்பன் கோரினார், அதனால் நக்கீரன் கோபாலுக்குத் துணையாகப் போயிருப்பார், அவரும் ஒரு அரசுத் தூதர் என்பது போல் முதல்வர் அவர்கள் பதிலளித்திருந்தார்கள் ஒரு பத்திரிகையிலே. அப்படி இருக்கும்போது இந்த பழ. நெடுமாறன் இன்றைய பேப்பரில் காஞ்சிபுரத்திலே ஒரு பேட்டி கொடுக்கிறார். வீரப்பனை இவர்களால் பிடிக்க முடியவில்லை. 20 இலட்சம் ரூபாய் என்று அறிவித்ததிலேயிருந்தே அவரைப் பிடிக்கப்போவதில்லை என்று தெரிகிறது. ஆகவே, வீரப்பனுக்கு நீங்கள் பொது மன்னிப்பு கொடுப்பதாக இருந்தால் நான் அவருடன் பேசி, சரண்டர் அடைய வைக்கிறேன் என்று பழ. நெடுமாறன் அங்கே கூறியிருக்கிறார். அதனால் பழ. நெடுமாறனுக்கு வீரப்பன் இருக்கிற இடம் இப்போது நன்றாகத் தெரிகிறது. ஏற்கெனவே பழ. நெடுமாறன் L.T.T.E. போன்றவர்கள் மற்றும் தீவிரவாத

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



அமைப்புகளுக்கு பத்திரிகைகளிலே இங்கே ஆதரவாகப் பேசி, ஆங்காங்கே கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்திகொண்டிருக்கிறவர். இன்று "தினமலர்" பத்திரிகையிலே பார்க்கிறேன். L.T.T.E.-க்கு 17 நாடுகளிலேயிருந்து நிதியுதவி கிடைக்கிறது. அந்த நிதியுதவி எங்கேயிருந்து வருகிறது என்று நம்முடைய சி.பி.ஐ. டைரக்டர் திரு. இராகவன் இன்று கேட்டிருக்கிறார். எல்லையை மீறி அவர் கேட்பது நியாயம் இல்லை. அவருக்கு எச்சரிக்கை விடுகிறேன் என்று அவர் இங்கே சொல்வதோடு மட்டுமல்லாமல், வீரப்பனைப் பிடிப்பதாகச் சொல்லி, அதிகாரிகள் அட்டூழியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மீது விசாரணை வேண்டும் என்றும், இல்லையென்று சொன்னால் நான் போராடுவேன் என்றும் அறிக்கையில் அவர் கூறியிருக்கிறார்.

இப்படி ஒரு baned Organisation L.T.T.E.. அந்த baned Organisation-க்கு ஆதரவாகக் குரல் கொடுத்து, நாடு முழுவதும் அவர்கள் மாநாடு நடத்திவிட்டு அவர் இன்று பேசித் திரிகிறார், பத்திரிகைகள் மூலமாக பேட்டி அளித்துக் கொண்டிருக்கிற ஒரு இயக்கத்தவர்களை இன்றுவரை ஏன் இந்த அரசாங்கத்தினுடைய கைகள் போய்ப் பிடிக்க மறுக்கிறது என்பதுதான் எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. நீங்கள் மிக எளிதாக - You can arrest Pazha Nedumaran, you can interrogate him, you can get information, you can get statement and then you can easily arrest Veerappan. அதைச் செய்யாமல் காவல் துறை ஏன் இங்கே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது, அந்தக் காவல் துறையைக் கையகத்திலே வைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏன் அமைதியாக இருக்கிறார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, L.T.T.E-யைப் பொறுத்தவரையில் நெடுமாறன் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வீரப்பனிடத்திலே தொடர்புகொண்டு, இராஜ்குமாரை விடுதலை செய்ததற்கும் L.T.T.E.-க்கும் சம்பந்தம் இல்லை ஒன்று. இரண்டாவது L.T.T.E.-யோடு தொடர்பு கொண்டு, ஏதாவது நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுவாரேயானால், நிச்சயமாக நெடுமாறன் மட்டுமல்ல, யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தயாராகத்தான் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மெத்தப்பணிவோடு கேட்பதெல்லாம் L.T.T.E..-க்கோ அல்லது தீவிரவாத அமைப்புக்களுக்கோ banned Organisation-க்கு

யாரெல்லாம் ஆதரவாக இருக்கிறார்களோ அவர்கள் மீது மிக எளிதாகக் குற்ற வழக்கை நீங்கள் பதியலாம். நீங்கள் குற்ற வழக்கைப் பதிவு செய்துவிட்டு, அவர்களை நீங்கள் arrest செய்து, நீங்கள் 162 ஆவது அல்லது 161 ஆவது செக்ஷன்படி Cr.P.C.-படி நீங்கள் ஒரு statement-ஐ அவர்களிடம் பெற்று உங்களுக்குப் பொதுவாக நீங்கள் சாட்சியாக எடுத்துக்கொண்டால் section 161 இல் accused ஆக எடுத்துக் கொண்டாலும்கூட 27 Section பிரகாரம் Evidence Act பிரகாரம் நீங்கள் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறலாம். இப்படி நீங்கள் சாட்சியாக எடுத்தோ அல்லது நீங்கள் இல்லையென்று சொன்னால் குற்றவாளியாக எடுத்தோ அவர்களிடம் நீங்கள் information-ஐ interrogate செய்து, information-ஐப் பெற்று உடனடியாக வீரப்பனுடைய இடத்தை இன்னும் கண்டுபிடிக்காமல் இருப்பதற்கான மர்மம் என்ன என்பதைத்தான் இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு முதல்வரவர்களும், இந்த அரசும் நிச்சயமாக வெளிப்படுத்த வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரப்பனைப் பிடிக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் இருவேறு கருத்துக்கள் இல்லை. இந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, கர்நாடக அரசாங்கமாக இருந்தாலும் சரி, மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு பிடிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், சந்தனக் கடத்தல் வீரப்பன் எத்தனை ஆண்டுகளாக அரசாங்கங்களாலே பிடிக்க முடியாமல் எப்படியெல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்பது இந்த அவையிலே இருக்கின்ற அத்தனைபேருக்கும் தெரியும். ஆனாலும், எப்படியும் பிடித்தே தீர வேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் நிச்சயமாக உறுதியாக இருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அவரைப் பிடிப்போம் என்பதிலே உறுதியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். உங்களுடைய உறுதிக்கு நன்றி. ஆனால் அந்த உறுதி எவ்வளவு நாட்களிலே நிறைவேற்றப்படும் என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. நீங்கள் 15 ஆம் தேதி விடுதலையான அந்த ராஜ்குமாருக்கு, உடனடியாக S.T.F.-ஐ, அதிரடிப்படையை நீங்கள் அனுப்பியிருப்பீர்களேயானால் உங்களுக்கு வீரப்பனைப் பிடிப்பதிலே நிச்சயமாக உறுதி இருக்கிறது, நாட்டம்



இருக்கிறது, நம்பிக்கை இருக்கிறது என்று பொருள்; 5 நாட்கள் காலதாமதமாக நீங்கள் 20 ஆம் தேதிதான் அதிரடிப்படையை காட்டுக்குள்ளே அனுமதிக்கிறீர்களே அந்த 5 நாள் அனுமதி என்பது ஒரு பெரிய சந்தேகத்தை இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டிலேகூட judges என்ன சொல்கிறார்கள்? சட்டத்தின் பிடியில் அவர் சிக்காமல் வெளியில் நடமாடுவதுதான் அரசு விரும்புகிறது என்று எடுத்துக் கொள்ளலாமா என்றுகூட சுப்ரீம் கோர்ட்டிலே உங்களை நீதிபதி உங்களுடைய வழக்கறிஞரைப் பார்த்துக் கேள்வி கேட்கிறார். ஆகவே, அந்த அளவுக்கு இந்த அரசாங்கத்தின்மீது சுப்ரீம் கோர்ட்டுக்குக்கூட நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் உடனடியாகத் தவிர்த்து இந்த வீரப்பனைப் பிடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதிலேகூடப் பார்த்தீர்கள் என்று சொன்னால், நம்முடைய காவல் துறை அதிகாரிகள் தினந்தோறும் இந்த மீடியா வந்ததற்கு அப்புறம், நாங்கள் helicopter-இலே கயிறை விட்டு பிடிக்கப் போகிறோம் என்று அவர்கள் என்ன modus operandi கடைப்பிடிக்கப் போகிறார்களோ, அதையும் சொல்லி விட்டுப் போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் Sun T.V. இலே கொண்டு போய் அந்த S.T.F.-க்கும் மற்றவர்களுக்கும் நாங்கள் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, அந்தப் பயிற்சியைக்கூடக் காட்டுகிறார்கள்.

இதெல்லாம் அரசு சிலவற்றை மறைமுகமாக வைத்திருந்து, ஒரு secret-ஐக் காப்பாற்றி அவனை எப்படிப் பிடிக்கப் போகிறோம் என்பதற்கு ஒரு தனி முறையை நீங்கள் கையாள வேண்டுமேயொழிய எல்லாவற்றையும் பிரகடனப்படுத்திவிட்டு, helicopter-லே வருவேன் என்று சொன்னால், helicopter-ஐப் பார்த்தவுடனே வீரப்பன் எங்கோ போய்விடுகிறார்.

எங்களுக்கு கிடைத்திருக்கிற அந்த நிலையைப் பார்க்கிறபொழுது, நாங்கள் அறிந்ததெல்லாம், இப்பொழுது வீரப்பன் உண்மையிலேயே இல்லை என்கிற ஒரு சந்தேகம் வந்துவிட்டது, இப்பொழுது நெடுமாறனே சொல்கிறார், அவரைப் பிடிக்க முடியாது என்கிறார். ஆகவே, மக்களுக்கு இருக்கக்கூடிய சந்தேகம் அந்த வீரப்பன் என்பவன் தஞ்சாவூர் வழியாக யாழ்ப்பாணத்திற்கு ஏற்கெனவே சென்று விட்டார். இல்லாத இடத்தில் இவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தி நாட்டு மக்கள்

மத்தியிலே இப்பொழுது நிலவிக்கொண்டு இருக்கிறது; அதற்கு ஒரு முற்றுப்புள்ளியை நீங்கள் வைக்க வேண்டும்.

வீரப்பனைப் பிடிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு உண்மையிலேயே இந்தப் பதவியில் இந்த அமைச்சரவைக்குத் தொடர்ந்து நீடிப்பதிலேகூட moral right என்பதை நீங்கள் இழந்து விட்டீர்களோ என்கிற அச்சம்கூட எங்களுக்கு உண்டு. ஆகவே, நீங்கள் உடனடியாக வீரப்பனைப் பிடித்துக் காட்டுங்கள். இல்லையென்று சொன்னால் உங்களால் முடியவில்லை என்று சொல்லி நீங்கள் விலகி விட்டாலாவது உங்களுக்கு ஆளுநர் ஆட்சியாவது - ஆளுநர் உரையை நாம் இப்பொழுது விவாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் ஆளுநர் ஆட்சியாவது—அவரைப் பிடிப்பதற்கு ஏதாவது முடிவு எடுக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களேகூட, 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் தேதி இந்த மாமன்றத்திலே அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஆற்றிய உரையை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். எப்பொழுதுமே சொல்லியதைச் செய்வது இந்த அரசு; அந்த வகையில் பார்த்தால் மந்திரிகள் எல்லாம் தங்களுடைய சுற்றுப் பயணத்தைக் குறைத்துக் கொள்ளலாம். மக்களைச் சந்திக்கிறோம் என்பது சரியான வாதம் அல்ல. மந்திரிகள் சுற்றுப் பயணங்கள் குறைக்கப்படுவதன் மூலம் சிக்கனத் திட்டம் நிறைவேறும். 1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு, 3 மாதங்களுக்கு முன்பு மந்திரிகள் தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்து விடுவார்களேயானால் அதன் மூலம் மந்திரிகளுக்குத் தரப்படும் சம்பளம் சிக்கனப்படுத்தப்படும். ஜனநாயகம் காப்பாற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள்கூட மாண்புமிகு முதல்வரவர்கள் ஜனநாயகவாதி என்று இங்கே உரையாற்றினார்கள். அதைத்தான் நானும் நினைவூட்ட விரும்புகிறேன். ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்று முதல்வரே சொல்லி அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, மூன்று அதாவது மூன்றே மூன்று மாத காலம்தான். அதிகம் கூட வேண்டாம். அவர்களுக்கு ஆசை இருக்கலாம். அடுத்த தடவை வருகிறோமோ, இல்லையோ என்று—

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று பேசியது உண்மை. அன்றைக்கு இருந்த அரசு அதைச் செய்து



காட்டியிருக்குமேயானால் இப்போதும் அதைச் செய்து காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்று இருந்த ஆட்சிதான் செய்யவில்லை. நீங்கள்தானே சொல்வதைச் செய்கிறீர்கள். செய்வதைச் சொல்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களாவது செய்துகாட்டுங்கள். உண்மையான ஜனநாயகம் இங்கே தழைப்பதற்காக நீங்கள் வழிகோலுங்கள். ஏனென்றால் அன்றைக்கு—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** நாங்கள் சொல்வதைச் செய்கிறோம், செய்வதைச் சொல்கிறோம். இரண்டுமே செய்ய முடியாதவர்கள் இதைப்பற்றி ஏன் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கே புரியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சி. ஞானசேகரன்:** நாங்கள் இரண்டுமே செய்யாதவர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறார்கள். நீங்கள் செய்து காட்டுங்கள். நாங்கள் சொல்லாமலாவது இருக்கிறோம். நீங்கள் சொல்லிவிட்டு ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்களே? நீங்கள் சொல்வதைச் செய்ய மறுக்கிறீர்களே என்பதை நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மூன்றே மூன்று மாதங்கள்தான். இராஜினாமா செய்துவிட்டு பொதுத் தேர்தலில் ஈடுபடுவதன் மூலமாக, இந்தியத் துணைக்கண்டத்தில் ஜனநாயகத்தை மலரச் செய்வதற்கு இந்தத் தமிழ்நாடு சர்க்கார் காரணமாக இருந்தது என்று பெருமையடித்துக் கொள்ளவாவது இந்த அமைச்சர்கள் இந்தக் காரியத்தைச் செய்து, நல்ல முன்னுதாரணமாக விளங்கவேண்டுமென்று, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இன்றைய அமைச்சரவையில் உள்ள நீங்கள் இதையெல்லாம் ஒப்புக்கொண்டு, நீங்களாகவே இராஜினாமா செய்துவிட்டு, ஒரு free and fair election-ஐ நீங்கள் ஆளுநர் ஆட்சியில் சந்தித்தால்தான், நீங்கள் உண்மையிலேயே ஜனநாயகவாதிகளாக இருப்பீர்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊழல் இல்லாத ஒரு ஆட்சியை கொடுத்ததாக எனக்கு முன்னாலே இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள் சொன்னார்கள். ஊழல் தமிழகத்திலே

இல்லையென்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிக நேரம் கொடுங்கள். தமிழகத்திலே எந்த அலுவலகத்திற்குப் போனாலும், இன்று காசு கொடுக்காமல் வேலை முடிந்தது என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமையே இல்லை.

அது தாலுக்கா அலுவலகமாக இருந்தாலும் சரி, பதிவுத் துறை அலுவலகமாக இருந்தாலும் சரி, வணிகவரித் துறை அலுவலகமாக இருந்தாலும் சரி, வட்டார போக்குவரத்துத் துறை (R.T.O.) அலுவலகமாக இருந்தாலும் சரி, எந்த ஆபீசுக்குப் போனாலும் காசு கொடுக்காமல் வேலையே நடப்பதில்லை. நீங்கள் இப்படிப்பட்ட ஒரு அரசு அமைப்பை அல்லது அரசு நிர்வாகத்தை வைத்துக்கொண்டு, ஊழலை ஒழித்துவிட்டோம் என்று சொல்வதை நாங்கள் எப்படி ஏற்கமுடியும்? எங்களுடைய வேலூரில் கூட....

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அதிகாரிகள் லஞ்சம் பெறுகிறார்கள், யார் யார் கொடுக்கிறார்கள் என்ற தகவல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முழுமையாகத் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எதிர்க்கட்சி வரிசையில் முக்கியமான தலைவர்களில் ஒருவராக இருக்கிற அவர், இப்படிப்பட்ட தகவலை இதற்கு முன்னால் தெரிவித்து, இந்த அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்காமல் இருக்கிறதா? அப்படி இருக்கிற தகவல் எது எது என்பதை இப்போதாவது தருவாரா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக, பர்ஸ்ட் ராங்க் (first rank) என்று இயங்கி வந்திருக்கக்கூடிய வேலூர் மாவட்டத்தினுடைய கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையினுடைய நிலையைக் குறித்து, நாங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறோம். அடிக்கடி நான் தெரிவித்து வந்தேன். இப்போது அங்கே இருக்கக்கூடிய தலைவர், கிட்டதட்ட 11 கோடி ரூபாய்க்கு - நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்தான் - ஊழல் செய்த காரணத்தாலே, நாங்கள் அடிக்கடி நினைவூட்டி, இவ்வளவெல்லாம் செய்து, இன்றைக்கு அதற்கு மூடுவிழா ஆகிவிட்டது. The Vellore Super Market has been closed. அது வந்தபிறகுதான் இப்போது நடவடிக்கை எடுத்து அவரை நீக்கியிருக்கிறீர்கள். ஆனால் அவர்மீது குற்ற வழக்கு இல்லை, அவர் கைது செய்யப்படவில்லை.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, இதிலிருந்து என்ன தெரிகிறது? உள்ளபடியே ஒரு குற்றம் நடக்குமேயானால், அதைத் தெரிவிப்பார்களேயானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது இந்த அரசினுடைய கொள்கை என்பதை அவர் ஒத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆமாம். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், தொடர்ந்து நான்காண்டு காலம் நாங்கள் போராடி, இதிலே வெற்றி பெற்றிருக்கிறோம் என்றாலும், இன்னும்கூட நீங்கள் வழக்குப் போடவில்லை. இப்போது அந்தத் தலைவர் பதவியில் இல்லை. அவர் நீக்கப்பெற்றுள்ளாரே தவிர, Still case has not been registered and he has not been arrested.

***மாண்புமிகு திரு கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், வேலூர் மொத்த விற்பனை பண்டகசாலை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். எந்த ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவரையும் நேரடியாக, உடனடியாக கைது செய்துவிட முடியாது, நேரடியாக வழக்குப் பதிவு செய்யவும் முடியாது. அவர் குற்றம் செய்து இருப்பாரேயானால், விளக்கம் கேட்டு அந்த விளக்கம் எங்களுக்கு ஒப்பவில்லை என்று சொன்னால், அவரை நீக்குவதற்கு முதலில் நோட்டீஸ் கொடுத்து, பிறகுதான் வழக்குப் பதிவு செய்யமுடியும். அதுவும் கூட்டுறவுத் துறைக்கு என்று C.C.I.W./C.I.D. என்று ஒரு துறையே தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலேதான் பதிவு செய்யவேண்டும். அதிலே பதிவு செய்து முடித்துவிட்டுத்தான் மீண்டும் அதைக் கிரிமினல் கேசாகக் கொண்டுவருவது என்று இப்படி படிப்படியாகத்தான் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வேலூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்கச்சொல்லி உத்தரவிட்டார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ரேஷன் கடையில் ஷாம்பு விற்கிறார்கள் என்று சொன்னவுடன், முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சொல்லி, அப்படி விற்பது தவறு, உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று சொல்லி, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எந்த இடத்திலும் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளிலே, ஒரு சில பேர், யாரோ ஒரு சில பேர் தவறு செய்கின்றபோது, அவர்களுக்கு எல்லாம் ஆதரவாக இந்த அரசு இருக்கிறது என்று கூறுவதும் தவறு. கூட்டுறவுத் துறை கடந்த காலத்தைவிட 100 சதவீதம் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது என்பதற்கு நான் பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சொல்லமுடியும்.

(மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் காலத்தில் கூட்டுறவுத் துறை அழியாது, அழிய விடமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி. (குறுக்கீடு) 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொன்னார்கள். எப்போதுமே, கண் கெட்ட பிறகுதான் சூரியநமஸ்காரமா? That Karpagam Super Market has been closed. நாங்கள் பல முறை, பல நாட்களில் மனுக்களாக, Fax-ஆகக் கொடுத்தபோதெல்லாம் நடவடிக்கை எடுக்காமல், அந்த Super market-டை மூடிய பிறகுதான் அவரை நீக்கியிருக்கிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் மூடுவிழாவைக் கண்டுவிட்டீர்களே, இதிலே மீதம் என்ன இருக்கிறது? அப்படிப் பார்த்தால் ஊழல் இன்னும் நிறைய இருக்கிறது. எங்கு பார்த்தாலும் கொப்பரைத் தேங்காய் ஊழல்; அதேபோல கால்நடை மருந்து வாங்குவதில் ஊழல். இதற்காக நான் கேட்டுக்கொள்வது, நீதி விசாரணைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி. (குறுக்கீடு) ஏற்கெனவே பேரவைத் தலைவர் அவர்கள் 15 நிமிடங்கள்தான் என்று சொன்னார்கள் (குறுக்கீடு) 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. மற்றவர்கள் எல்லாம் பேசவேண்டாமா? புகழேந்தி பேசட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) 26 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் 40 நிமிடங்கள் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேட்டால் என்ன; நான் பேரவைத் தலைவர் சொல்வதைத்தானே செய்ய முடியும். திரு. இ. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில்... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்காக...

**திரு.சி.ஞானசேகரன்:** எதிர்க்கட்சியின் குரலை நசுக்குவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் நான் நசுக்கினேனா? திரு. புகழேந்தி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இந்த ஆளுநர் உரை என்பது, இந்த அரசின் சாதனை மட்டுமல்ல; அரசியல் சாதனையும்கூட என்பதை நான் இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சாதனையாக, திட்டங்களையெல்லாம் தொகுத்து அளித்திருக்கின்ற இந்த ஆளுநர் உரையில்...

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுடைய ஜனநாயக உரிமையை நீங்களும், இந்த அரசும் மதிக்காததால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. இ. புகழேந்தி:** ஜனநாயகத்தினுடைய நிலைப்பாட்டை மாற்ற வேண்டுமென்று கருதிக்கொண்டு சிலபேர் ஆசைப்பட்டு, 5 வருடங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டிய ஜனநாயகக் கடமையை 2 ஆண்டுகளில், 3 ஆண்டுகளிலே நிறுத்திவிட வேண்டுமென்றெல்லாம் முயற்சி செய்து, சில பேர் வேடமிட்டுக்கொண்டு, தன்னுடைய அரசியல் சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்ட செல்வாக்கை மனதில் வைத்துக்கொண்டு-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. சி. ஞானசேகரன் அவர்கள் 26 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். 26 நிமிடங்களும், இந்த அரசின்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அவற்றிற்கான பதிலையும் பெற்றுக்கொண்டு, அதன் பிறகு, நான் பேச அனுமதிக்கவில்லை, ஜனநாயகக் குரலை நசுக்குகிறேன் என்று சொல்லி வெளியேறியிருக்கிறார் என்பதை இதன் மூலம் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் யார் எப்போது ஊதாரிகளாக இருக்கிறார்களோ, அப்போதெல்லாம் அவர்களைக் கண்டிப்பது எங்களுடைய வழக்கம். இப்போது நீங்கள் ஊதாரிகள். அதனால் உங்களைக் கண்டிக்கிறோம். அவ்வளவுதான்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பதிலுக்குப் பதில் பேச வேண்டுமென்பதற்காக அதைக் குறிப்பிடவில்லை. கருத்து இருக்கிறது. அதிலே ஆழமான சிந்தனை இருக்கிறது. அது மக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக குறிப்பிட்டேனே அல்லாமல், வேறு அல்ல. அதுமட்டுமல்ல, மிகத் தெளிவாகச் சொன்னார். ஒரு அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிடாமல், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிடாமல், அப்போது அரசியல் நாகரீகத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதுகூட இல்லாமல் அந்த அதிகாரியின் பெயரை அன்றைய முதலமைச்சர் இங்கே வெளியிட்டார்கள். அது நமக்குத் தேவையில்லாத விஷயம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள், "ஒரு துறையைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டில் 5,000 டாலர் எடுத்தார்கள். அவருடைய அரசு அலுவலகத்தில் கோடிக்கணக்கான ரூபாய் எடுக்கப்பட்டது. ஆனால் 5 ஆண்டுகாலமாக ஒரே துறையில் அவர் இருக்கிறார். இது ஏன்? உரிய நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை? இதற்கு அப்போதைய முதலமைச்சர் பதில, "இன்னும் அழகிரியை பேசவிட்டிருந்தால் ஏன் பணிநீக்கம் செய்யவில்லை, ஏன் சஸ்பெண்டு செய்யவில்லை என்றுகூட கேட்பார் போலிருக்கிறதே" என்று சொன்னார். அந்தப் பதிலையும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, எப்படியெல்லாம் இந்த மன்றத்திலே மரபுகள் காற்றிலே பறக்க விடப்பட்டன? மரபுகளைக் காக்கின்ற மண்ணின் மணாளராக, இந்த மண்ணிற்கு மாபெரும் தலைவராக விளங்குகின்ற தலைவர் கலைஞர்(மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சாதாரண சட்டமன்ற உறுப்பினர், எங்களைப் போன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோதுகூட, பேரவைத் தலைவருக்கு நேர்க்கோட்டிலே நின்று பேசுகின்றபோது இடையிலே வரக்கூடாது என்பதற்காக 6 கோடி தமிழர்களின் இதயமாக விளங்குகின்ற எங்கள் மூச்சுக் காற்றாம், முதலமைச்சர் கலைஞர் அங்கேயே நின்று பார்த்து உள்ளே வருகின்ற மாபெரும் மரபு காத்தவர் அல்லவா! (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் அப்போது மரபுகள் காற்றிலே பறக்க விடப்பட்டன. நாங்கள் பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால்



அனுபவித்தவர்கள் இருக்கிறார்கள். அனுபவித்தவர்களே இன்றைக்கு அது தேவை என்று சொன்னால் மக்கள் முடிவு செய்வார்கள் என்பதை மட்டும் நான் குறிப்பிட்டு, நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர், நான் மிகவும் மதிக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திருமிகு தோழர் ஜி. பழனிசாமி அவர்கள் அப்போது சொன்னார்.

ஒரு விவாதத்திலே கலந்துகொண்டு பேசினார்கள். நான் எடுத்துப் பார்த்தபோது, உண்மையை வெளியிடுகின்ற அவருடைய அந்த வேகம், நேர்மைக்கு, இலட்சியத்திற்கு வாதாடுகின்ற, போராடுகின்ற அந்த வேகம், அதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன். அவர் சொன்னார், "தாலுகா மருத்துவமனைகளில்கூட மருந்து இல்லை, மாவட்ட மருத்துவ மனைகளிலும் மருந்து இல்லை. ஆனால் பல கோடி ரூபாய்க்கு இந்த அரசு மருந்தைக் கொள்முதல் செய்து [illegible] வாங்கிய மருந்துகள் தேதிகள் கடந்து போய் பயன்படுத்த முடியாமல் [illegible]கின்றது, நானே பார்த்தேன்" என்று அன்றைக்கு குற்றச்சாட்டை மிகத் தெளிவாக அந்த அரசின் மீது சொன்னதும், இந்த அரசில் தாலுகா மருத்துவமனைகளிலிருந்து மருந்துகள் இல்லை என்ற நிலையே அல்ல, எல்லா இடங்களிலும் மருந்துகள், உயிர் காக்கும் மருந்துகள் தயார் நிலையில் ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் இந்த அரசு வைத்திருக்கிறது என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக நிரூபித்திருக்கிறார்கள். மருந்தே இல்லாத அந்த அரசை ஆதரிக்க வேண்டுமா என்பதைக் குறித்து நாங்கள் அல்ல, இந்த நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

அழகாகச் சொல்வார்கள். 'எழுத்து வேறு, யதார்த்தம் வேறு' என்று. அற்புதமான சிந்தனையோடு உரையாற்றக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள்கூட சொன்னார்கள். ஆம், எழுத்து வேறு, யதார்த்தம் வேறு என்று இருப்பது தவறு. அதைப் போலத்தான், மனசாட்சி ஒருபுறமும் மனிதன் ஒருபுறமும் போவது அதைவிடப் பெரிய தவறு என்று நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஆளுநர் உரையிலே உரையாற்றுவதற்கு வந்தபொழுது, நான் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். 'Advertising and Marketing' என்ற ஒரு வடநாட்டு ஆங்கில இதழ் ஒரு சிறப்பிதழை வெளியிட்டிருக்கிறது. அந்த வரலாற்று இதழ் சொல்கிறது, .'மனிதர்களுக்கும், குடும்பங்களுக்கும் மட்டுமல்ல பாரம்பரியம், தொழில்களுக்கும்கூட பாரம்பரியம் உண்டு' என்று. அப்படித் தொழில்

**திரு. இ. புகழேந்தி:** ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் முழுமையாகத் தன்னுடைய அரசியல் சாதுர்யத்தினாலும், இந்த நாட்டு மக்கள் தன்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் காப்பாற்றுகின்ற விதமாகவும்—இடையிலே அரசியல் சூழல் செல்வாக்கினைப் பெற்று, டெல்லி பட்டணத்திற்குச் சென்று எப்படி எல்லாம் போரிட்டு, இன்று போய்விட்டது; நாளை வந்துவிட்டது; இன்னும் 20 நாட்கள்; இன்னும் 1 வாரம் என்றெல்லாம் நாள் குறித்து, தேதி குறித்து, இறுதியாக முக்காடு போட்டுக்கொண்டு சென்னை மாநகரத்திற்கு ஓடோடி வந்து அந்த நிலையை எண்ணிப்பார்த்து அவற்றை எல்லாம் தூள் தூளாக நொறுக்கி எறிந்து - ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற விதமாக இப்பொழுது ஐந்தாவது ஆண்டை முழுமையாக நிறைவு செய்து, தன்னுடைய வெற்றிப் பயணத்தை, வெற்றிப் பெருமிதத்தோடு நிலைநாட்டியிருக்கின்ற ஓர் ஆளுநர் உரைதான் இந்த உரை. ஆக, இது அரசின் சாதனை உரை மட்டுமல்ல, அரசியல் சாதனை உரையாகவும் இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையின் சிறப்பு என்கின்றபோது, கடந்த ஆட்சிக் காலத்திலே இறுதியாக அவர்கள் வெளியிட்ட ஆளுநர் உரையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், நம்முடைய ஆளுநர் உரையினுடைய சிறப்பு இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும்; அதை நினைவூட்ட வேண்டியது என்னுடைய கடமை என்ற முறையிலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆட்சியாளர்கள் இறுதியாக ஓர் ஆளுநர் உரையை வெளியிட்டார்கள். ஆளுநர் உரை, இதே மன்றத்திலே படிக்கப்பட்டது. அந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட அந்த செய்தியைப் பார்க்கின்றேன். ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதிலே சொல்கிறார்கள், ‘மிகச் சிறந்த சாதனையாக கி.பி.2010-ல் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு இருபத்தொன்று என்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கு முன்னாள் முதல்வர் அவர்களுடைய சாதனையின் காரணமாக ஆயிரத்திற்கு பத்தொன்பது என்று குறைக்கப்பட்டது’ என்று. இது ஒரு சாதனை. இது கடந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது.

முற்பகல் 11-40

இன்னொன்று சொன்னார்கள். உள்ளாட்சி, கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த நாங்கள் நினைத்தோம். ஆனால் நடத்தவில்லை. நாங்கள் நடத்த முயற்சி செய்து எங்களால் முடியவில்லை என்று தேர்தல்களை நடத்தாததற்கு ஒரு காரணத்தை அந்த உரையிலே குறிப்பிட்டார்கள். அதைவிட மோசமாக இன்னொன்றை ஒப்புக் கொண்டது அந்த அரசு.



கடுமையான மின் தட்டுப்பாடு இருப்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். போதுமான அளவிற்கு எங்களால் ஏற்பாடு செய்ய முடியவில்லை. மீண்டும் மீண்டும் வேண்டுகோள்களை விடுத்தும்கூட தமிழ்நாட்டில் மின் துறையில் மேலும் முதலீடு செய்வதற்கு மத்திய சர்க்கார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் என்ன செய்வது என்று அன்றைக்கு மத்தியிலே பிரதமராக இருந்த நரசிம்மராவ்— நரசிம்மராவிற்கும் அன்றைய முதலமைச்சருக்கும், முதலமைச்சர் சொல்கிறபோது Generation gap என்று சொன்னார்கள். இது Generation gap ஆ? Communication Gap ஆ? அல்லது மக்களுக்கும் தங்களுக்கும் இருக்கிற ஒரு Long gap-ஆ? என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு Gap அப்போது அந்த ஆளுநர் உரையிலே சொல்லியதற்கு வாதம் நடைபெற்றது. அப்போது, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களாக, இன்றைக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களாக, ஆனால் அப்போது நரசிம்மராவ் தலைமையை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்களாக இங்கே நண்பர்கள் இருந்தபோது, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் அப்போது ஆற்றிய அந்த உரையின் தொகுப்பை நான் பார்த்தேன்.

தலைவர் கலைஞர் ஆற்றிய உரையைப் பற்றி இங்கே சொல்லி அதிலே நியாயத்தைக் கேட்பதற்கு வந்தார்கள். தலைவர் அன்றைக்குச் சொன்னார், அது என்ன ஆயிற்று? என்று 1967-க்கு முன்பு பேசியதை இங்கே குறிப்பிட்டபோது, அதற்கு முன்பேகூட மகாத்மா காந்தியார் சொன்னார், காங்கிரஸையே கலைத்துவிட வேண்டுமென்று. அது மட்டும் நடந்து விட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அரசியல்— அதுகுறித்து பேசப்பட்ட கருத்துக்களுக்கு இங்கே வியாக்கியானம் செய்வதைவிட கடந்த ஆட்சிக்காலத்திலே, ஆளுநர் உரையிலே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார், அன்றைய முதலமைச்சரைப் பார்த்துச் சொல்கிறார், “ சிறந்த நிர்வாக அமைப்பை முதல்வர் கொடுத்ததாக இந்த ஆளுநர் உரை சொல்கிறது. ஆனால் இந்த அரசு ஊதாரித்தனமான அரசு, இதுவே ஒரு தனியார் கம்பெனியாக இருந்தால் அது திவாலாகப் போயிருக்கும்” என்று. நாங்கள் சொல்லவில்லை, இன்றைக்கு யார் மீண்டும் வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டு, கருதிக் கொண்டு நடவடிக்கைகளை ஏற்படுத்திக்கொள்கிறார்களோ, அவர்களால் இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்யப்பட்ட கருத்து. அதேபோல அடுத்ததாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) இன்னொன்றைச் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். உங்கள் பேச்சு தொடர்ந்து வருகிறது.

வளர்ச்சி பாரம்பரியத்தை அன்றைக்கு இந்த மண்ணில் மகாராஷ்டிரமும், குஜராத்தும் ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் மகாராஷ்டிரத்தையும், குஜராத்தையும் இன்றைக்கு தூக்கி எறிந்துவிட்டு முதல்வர் கலைஞர் ஆட்சியில் தமிழகம் முதல் நிலையில் இருக்கிறது. இதைச் சொல்வது 'Advertising and Marketing' என்ற நாளிதழ் நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படியெல்லாம் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பாராட்டக்கூடிய ஒரு அரசு கலைஞர் அரசு. இன்னும் ஒன்று, ஆவேசத்தோடு அள்ளி வீசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே அழகாகச் சொன்னார்கள். ஊழலைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆம் ஊழலைப் பற்றி யார் சொல்வது? இதே மாமன்றத்தில் அதே மாண்புமிகு உறுப்பினர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுந்து, வேகமாகத் தலைவர் கலைஞரைப் பார்த்து, 'என்ன இந்த அரசு பொறுமையாக இருக்கிறது? எப்போது முன்னாள் முதல்வரை உள்ளே தள்ளப் போகிறீர்கள்? போடப்பட்டிருக்கிற வழக்குகளின் முடிவை ஏன் தாமதப்படுத்துகிறீர்கள்? விரைவில் விசாரித்து ஊழல் செய்திருக்கிறார் என்று தெரிகிறதே, அவரை நீங்கள் உள்ளே வைப்பது உங்களுடைய தார்மீகக் கடமை. அதை உடனே செய்யுங்கள்' என்று பேசியவர்தான் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரை உள்ளே வைக்கச் சொல்லிவிட்டவர். ஊழல் செய்தார் என்று இங்கேயே ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவர், 161-Statement என்று சொன்னாரே, அதை அப்படிகூட எடுத்துக்கொள்ளலாம். நான் இன்னும் சொல்ல விரும்புகிறேன், 161-Statement என்பது, It is not a substantial evidence நீங்கள் சாட்சிகளாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்களே, நாங்கள் அப்படிகூட எடுத்துக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். நீங்கள் அன்றைக்கு அப்படிச் சொல்லிவிட்டு, இன்றைக்கு ஊழலைப் பற்றி, ஊழல் செய்தால் பரவாயில்லை, ஊழலைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை, அக்கறையில்லை என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் இந்த நாட்டைப் பற்றி உங்களுக்குக் கவலையில்லை, அக்கறையில்லை என்று ஆகிறதே என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

வீரப்பன் விவகாரமோ மற்ற விவகாரமோ நமக்குத் தேவையில்லை. இந்த நாடு தேர்தல் களத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிற நேரத்தில், தேர்தல் தொனியே இல்லாமல், அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற ஒரு மகத்தான தலைவராகக் கலைஞர் இருக்கிற நேரத்தில், நாட்டின் வளர்ச்சிக்கான ஜனநாயகக் கடமையை, ஆலோசனைகளை கூறுவதை விட்டு, வீரப்பன் விவகாரத்திற்குப் போகிறபோது, தேடிக் கொண்டிருக்கிற நேரத்தில், ஏன் பிடிக்கவில்லை என்று கேட்பதும், நீண்டகாலமாக தேடிக் கொண்டிருப்பதை அறிந்தவரே சொல்வதும் வேடிக்கை. அதுமட்டுமல்ல,



பழ. நெடுமாறன் எந்தக் காலத்திலும் இப்படித்தான் இருந்தார். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். பழ. நெடுமாறன் எந்தக் காலத்திலும் இப்படித்தான் இருந்தார். அன்றைக்கே கைது செய்திருக்கலாமே, அன்றைக்கே F.I.R. charge-sheet மற்றும் போட்டிருக்கலாம். ஆனால் பழ. நெடுமாறன் அவர்களுடைய இல்ல நிகழ்ச்சிகளில்கூட முன்னாள் முதலமைச்சர் ஓடோடிச் சென்று கலந்துகொண்ட காலம் உண்டு. நாம் அதையெல்லாம் மறந்துவிடக் கூடாது.

மக்களுக்கு நினைவூட்டுவதற்காக நான் இதை இங்கே எடுத்துச் சொன்னேனே அல்லாமல், வேறு அல்ல. எம்.எல்.ஏ.வாக- சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்காக பணியாற்றுகின்ற நாம் அடிப்படை உரிமைகளை காப்பாற்ற வேண்டாமா? அதுமட்டுமல்ல, இன்னும்கூட சொன்னார்கள். அவர்கள் எடுத்து வைத்து இருப்பது என்ன? இங்கு அதைச் சொல்லி முடித்துவிடுகிறேன். அவருடைய கருத்துப்படி ஒரு தரப்புடைய வாதம் வீரப்பனுடன் போனது. ஏதோ பஞ்சர் ஆகிவிட்டது நக்கீரன் கோபால் பயணம் என்று சொன்னார். பஞ்சர் ஆகியிருப்பது சைக்கிள்தானே தவிர, நக்கீரன் கோபால் அல்ல.

முற்பகல் 11-50

நீங்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு அந்த விஷயங்களைவிட்டு வெளியே வந்தால் அடுத்ததாக கையில் எடுப்பது, நீங்கள் நல்லவர்கள்தான், கலைஞர் திறமையானவர்தான், நிர்வாகத்திலே அப்பழுக்கற்றவர்தான். அதேபோல, ஆளக்கூடிய அவரைப் போல ஜனநாயக பண்பைக் காப்பாற்றி எங்களை மதிப்பவர் யாரும் இல்லைதான், நாங்கள் அதையெல்லாம் ஒப்புக்கொள்கிறோம் என்று கலைஞரைச் சொல்லிவிட்டு, ஆனால் மதவாதம் என்கிறார்கள். இல்லாத ஒன்றை எடுத்துக்கொண்டு பேச வருகின்றவர்களுக்காக ஒன்றைச் சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன். ஒன்றும் இல்லை, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 60 ஆண்டுகளுக்கு மேலாக எம்மதமும் சம்மதம், மதங்களை மீறியது மனித நேயம், மனிதம் என்பது புனிதம், அந்தப் புனிதத்தை, மனிதத்தைக் காக்கின்ற தந்தை பெரியாரின் பெரும் தொண்டனாக தன்னுடைய வாழ்க்கையை ஒப்படைத்துக்கொண்ட தலைவர் கலைஞர், தன்னுடைய பொது வாழ்க்கையைத் தொடங்கிய மாமனிதர். இன்றைக்கும் சீர்திருத்தம், பகுத்தறிவு, மக்கள் வாழ வேண்டும், மக்கள் நலம் [illegible] என்று ஒப்புமை கூற முடியாது அல்லும் பகலும் [illegible]

228172
சென்னை-600 009

அற்புதமான அந்த மனிதர் தலைமையிலே அமைகின்ற இந்த அரசு ஒருபுறம், தமிழர்களுக்கே உரிய சைவம், வைணவம் நீங்கி வைதீகத்தில் நம்பிக்கைகொண்டு, வேள்விகளை வளர்த்து இன்றைக்கு தன்னை ஒரு தீவிரமான அழுத்தமான நம்பிக்கையாளராக காட்டிக்கொண்டிருக்கிற ஒருவர் ஒருபுறம். இதிலே யார் மதவாதி? எந்த மதவாதியை இதே மன்றத்திலே முதல்வராக அமர்த்தி வைக்க நீங்கள் போராடுகிறீர்கள்? டெல்லி நாடாளுமன்றம் வேறு, தமிழகச் சட்டமன்றம் வேறு என்றால், தமிழகச் சட்டமன்றத்திலே மனித நேயத்திற்காக பாடுபடுகின்ற கலைஞர் அல்லவா இருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி (மணியடிக்கப்பெற்றது) ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். நான் இவ்வளவு நேரம் பேசி, கடைசி உரையாக இருந்தாலும், என்னுடைய தொகுதியிலே எல்லா பணிகளும் செய்யப்பட்டு நிறைவு செய்திருக்கின்ற சூழ்நிலையில் Railway over bridge-க்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டுகின்ற நிலை. 17 கோடி ரூபாயில் குடிநீர்த் திட்டம் அடிக்கல் நாட்டுகின்ற நிலை. அதைப்போல கடிலம் தரைப் பாலத்தையும் செய்து தர வேண்டுமென்பதைக் கேட்டு இந்த ஆளுநர் உரை என்பது இளம் பிறைக்குள் புதைந்திருக்கும் பூரண நிலவுபோல, பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக் கூட்டம் போல, கார் மேகத்துள் நிறைந்திருக்கும் மழைநீர் போல நாட்டு மக்களுக்கான திட்டங்களை தன்னகத்தே கொண்டு பூத்து நிற்கும் புது மலர் என்று இங்கே எடுத்துச் சொல்லி, துடுப்புகள் இல்லா படகு, அலைகள் அடிக்கின்ற திசையெல்லாம் போகும், தீமையைத் தடுப்பவர் இல்லா வாழ்வும் அந்த படகின் நிலை போலாகும் என்று கலைஞர் சொல்லியதை நினைவுபடுத்தி ஆளுநர் உரையை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற விவாதங்களுக்குப் பதில் அளிப்பதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த அவைக்கு உடல்நலக் குறைவின் காரணமாக வர இயலவில்லை என்று அறிந்தேன். அவர் எங்கு இருந்தாலும் நடைபெறுகின்ற விவாதங்களுக்கு அவர் காது கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். கவர்னர் உரை என்பது தமிழ்நாட்டில், அரசியல், பொருளாதார, சமூக வாழ்வின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய கொள்கை ரீதியான படப்பிடிப்பாக அமைய வேண்டும். அதுதான் சட்டமன்ற வரலாற்றில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற உண்மையாகும்.



அந்தக் கண்ணோட்டத்தோடு இன்றைய கவர்னர் உரை தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் சவாலாக எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றி கண்டிருக்க வேண்டும். ஆனால், கவர்னர் உரை காணத் தவறிய பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. காண வேண்டிய காட்சிகளைக் காண மறுத்து கண்ணை இருக மூடிக்கொண்டதைக் கண்டு உண்மையிலேயே வேதனை அடைகிறேன். ஆளுகிற கட்சிகளுடைய இலக்கணம் காண வேண்டிய காட்சிகளைக் காண மறுப்பதுதான் போலும். ஆனால், எதிர்க்கட்சிகள் என்ற முறையில் ஆளுகிற கட்சி காண மறுத்த காட்சிகளைக் காட்ட வேண்டிய கடமையை, பொறுப்பை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். எப்போதுமே, அரசியல் நிலையில் சொல்கின்ற சொற்கள் வசீகரமாகவும் இருக்கலாம், வலுவாகவும் இருக்கலாம். ஆனால், சொல்கின்ற சொல்லுக்குள் என்ன உண்மை இருக்கிறது என்பதை வாழ்க்கை அனுபவத்திலேயே நாம் உணர முடியும். தமிழ்நாட்டை ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் தவறானவை என்பதை நடைமுறை அனுபவம் மிகத் தெளிவாக உணர்த்தியிருக்கிறது என்று நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

இன்றைக்குத் தமிழ்நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், மாநிலத்தை ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் நிலை கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது என்பது பற்றிய பல்வேறு விரிவான விவரங்களை நான் இந்த விவாதத்திற்குள் கொண்டு போக விரும்பவில்லை. ஆனால் இந்த கவர்னர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிற சில விஷயங்களில் விவசாயத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாநில அரசுக்கு ஒரு அரசியல் நிலை இருக்கிறது. இந்த மாநில அரசு எடுத்த அரசியல் நிலையின் காரணமாக, மத்தியில் வரக்கூடாத ஒரு ஆட்சி வந்துவிட்டது. வரக்கூடாத அந்த ஆட்சி வந்ததற்குப் பின்னர், அவர்கள் எடுத்த அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கை நிலைகள் தமிழ்நாட்டைப் பாதித்து இருக்கிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வாழ்வில் நெருக்கடிகளைத் தோற்றுவித்து இருக்கின்றன. இந்த நெருக்கடிகளைத் தோற்றுவித்து இருக்கின்ற விஷயங்கள் என்ன என்பதை நான் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டியதே இல்லை. இதே தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்னர் அல்ல, வந்ததற்குப் பின்னரும், ஒரு 2, 3 வருடங்களுக்கு முன்னர் வரை ஒரு சட்டை மஞ்சள், 3,800 ரூபாய்க்கு விற்றது. இன்றைக்கு ஒரு சட்டை மஞ்சள் 1,200 ரூபாய்க்கு விற்றுக்

கொண்டிருக்கிறது. தேங்காயினுடைய வரலாற்றில், இன்றுபோல் என்றும் விலை வீழ்ந்தது இல்லை. தேங்காய் நல்ல விலை சொல்லி விற்கப்பட்ட காலம் இருந்தது; பெற்ற பிள்ளை சோறு போடவில்லை என்றாலும், தென்னம்பிள்ளை சோறு போடும் என்ற வழக்குச் சொல் ஒன்று உண்டு. ஆனால், இன்றைக்கு நிலை என்ன? தேங்காய்களைக் கூறு கட்டி விற்றுக்கொண்டிருக்கிற ஒரு நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. பல மாவட்டங்களில் வெங்காயத்தை விதைத்தவர்கள், வெங்காயத்தை தோண்டி எடுத்தால், தோண்டுவதற்கு கொடுக்கிற கூலிக்குக்கூட, தோண்டி எடுக்கப்பட்ட வெங்காயம் விற்காது என்பதால், அந்த வெங்காயம் நிலத்திலேயே அழுகிவிடட்டும் என்று விட்டுவிட்டதால்—பாரதிய ஜனதா அழுகிப் போவது போல அது நிலத்தில் அழுகிக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமைக்கு என்ன காரணம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழுகிக் கொண்டிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சி என்று குறிப்பிடுகின்றார். நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கின்றேன். எந்த அரசியல் கட்சி அழுகிக் கொண்டிருக்கின்றது என்பதை பல சந்தர்ப்பங்களில், பல தேர்தல்களில் நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம். இரண்டே இரண்டு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டிருந்த பாரதிய ஜனதா கட்சி, 50 ஆகி, 100 ஆகி, 152 ஆகி, 182 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு இருக்கின்றது 20 ஆண்டுகளில் ஆனால் 75 ஆண்டுகளாக எங்களைப் பார்த்து மத வாதி, மத வாதி என்று சொல்லக் கூடியவர்கள் எந்த அளவுக்கு அழுகிக்கொண்டே இருக்கின்றார்கள்; யாரிடம் கூட்டணி சேர்ந்துக்கொள்ளலாம்; யாருடைய தோளில் ஆட்சி நடத்தலாம் என்று நினைக்கின்றார்கள் என்பதை பொது மக்கள் நன்கு அறிவார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பொறுத்து இருங்கள். வரலாற்றுச் சக்கரம் சுற்றுகிறது. எனவே, அவசரப்பட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 75 வருடங்களாக அது சுற்றிக் கொண்டிருக்கிறது என்று அவர் சொல்கிறார்.

**திரு. கே. சுப்பராயன்:** மாநில திராவிட முன்னேற்றக் கழக அரசு பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறது. விவசாயிகளின் விளை பொருள் விலை வீழ்ச்சி அடைவதும், அதேநேரத்தில் அவர்கள் இடுபொருள் விலை ஏறுவதும் என்ற இரட்டைத் தாக்குதலுக்கு தமிழ்நாட்டு விவசாயிகள்



ஆட்படக் காரணம், மத்தியில் நாடாளுகின்ற பி.ஜே.பி., தி.மு.க. கூட்டணி கடைப்பிடிக்கிற பொருளாதாரக் கொள்கைதான் என்பதை நடைமுறை அனுபவம் தெளிவாக நிரூபித்து இருக்கிறது. பசுந்தேயிலை விலை வீழ்ச்சி, பல்வேறு விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சி, இதைத்தான் காட்டுகிறது. எனவே, தமிழ்நாட்டில் ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி விவசாயத்தைக் காப்பாற்றுவதில் தவறிவிட்டது என்பதை நான் பகிரங்கமாகக் குற்றஞ்சொல்வதோடு, இந்த மாநில அரசு உண்மையிலேயே விவசாயிகளின் மீது அக்கறை உள்ள அரசு என்றால், அவர்கள் செய்ய வேண்டிய ஒரு வேலை என்ன? விவசாயிகளை, விலை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற வேண்டும். அவர்கள் உற்பத்திப் பொருள் விலை வீழ்ச்சி அடைகிறது. இடுபொருள் விலை ஏறுகிறது. எனவே, விவசாயி பட்டுள்ள கடன், அபராத வட்டி, வட்டி முழுவதையும் இரத்து செய்ய வேண்டும். அசலை பல தவணைகளில் கட்டுவதற்குரிய வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் விவசாய பொருள் விலை வீழ்ச்சிக்கு, மத்தியிலே ஆளக்கூடிய ஆட்சியாகிய, இன்றைய பாரதிய ஜனதாவும், தமிழகத்திலே இருக்கக்கூடிய இந்த ஆட்சியும் காரணமல்லவா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீண்ட நெடுங்காலமாக மத்தியிலே காங்கிரஸ் கட்சிதான் பல்வேறு கட்டங்களில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. அதேபோல, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு கட்சி ஆட்சிக்கு வருவதும், பிறகு அது மாறுவதும் உண்டு. ஆனால், வேளாண் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சிதானே தவிர மாநிலத்திலே இருக்கக்கூடிய ஆட்சி அல்ல.

நண்பகல் 12-00

கடந்த 1991 ஆம் ஆண்டிலேயிருந்து 1996 ஆம் ஆண்டு வரை மத்தியில் காங்கிரஸ் ஆட்சியும் மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சியும் இருந்தது. அந்தக் காலக்கட்டத்திலே வேளாண் விளை பொருள்களுக்கு, ஏதாவது அவர்கள் இரண்டு அரசுகளும்—இந்த மாநிலத்தை ஆண்ட அதி.மு.க-வும், மத்தியிலே இருந்த காங்கிரஸ் ஆட்சியும்—விலை நிர்ணயம் செய்து இருந்து, அதை

இந்த அரசு இரத்து செய்து விட்டதா? அவர்கள் கூடுதலாக விலை வைத்து, விலை நிர்ணயம் செய்து, வேளாண் மக்களுக்கு உதவி செய்ததை, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, அதை ஏதாவது குறைத்து விற்கக் கூடிய ஒரு சட்டத்தை இயற்றிவிட்டதா? அதை விளக்குவது சரியாக இருக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய விளை பொருள்கள் விலை வீழ்ச்சி இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு இருக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. இதே நிலை தொடர்ந்து நீடித்தால், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிற கொடுமை நிகழும் என்பதை முன்கூட்டியே பொறுப்புள்ள அரசியல் கட்சியின் பிரதிநிதி என்கிற முறையில் நாங்கள் எச்சரிக்க விரும்புகிறோம்.

அடுத்து நான் தொழில் துறைக்கு வர விரும்புகிறேன். விவசாயத் துறையில் இந்த மாநில அரசாங்கம் கடைப்பிடிக்கிற அரசியல் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக விவசாயம் நசிந்து அழிந்து கொண்டிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை முன் வைத்தேன். அதைப்போல், அடுத்து தொழில் துறையும் நசிந்து அழிந்து கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தினுடைய வேலைவாய்ப்பில் மிக முக்கியப் பங்கு அளிப்பது சிறு தொழில், குறுந்தொழில். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், 85 சதவீத வேலைவாய்ப்பை வழங்குவது சிறுதொழில், குறுந்தொழில். இன்றைக்கு மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் அனேகமாக தொடர்ந்து மூடப்படுகிறது; பல மூடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் வேலைவாய்ப்பை அளிக்கிற இந்த சிறு தொழில் மூடப்பட்டு விட்டால், வேலை செய்கிற தொழிலாளி தெருவிலே தள்ளப்பட்டுவிட்டால் என்ன நடக்கும் வெறும் தரமணி டைடல் பார்க் மட்டும் சோறு போடாது; மூன்று கார் கம்பெனிகளை சென்னையிலே தொடங்கியதால் மட்டும் சோறு போடாது. சோறு போடுகிற விவசாயத்தை அழிக்கிறீர்கள்; சோறு போடுகிற சிறு தொழில், குறுந்தொழிலை அழிக்கிறீர்கள்.இத்தகைய அழிக்கிற தற்கொலைக் கொள்கையை நீங்கள் ஏன் மேற்கொள்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய புதிய பொருளாதாரக் கொள்கை ஏதோ தமிழ்நாட்டிலே மட்டும் அமல்படுத்தப்படுவதைப் போலவும்,



அதனாலே இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போலவும் சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே கேட்கிறேன். எங்கெங்கே விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்களோ, சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றனவோ அவற்றைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசு முடிந்த வரையில் பாதுகாக்கிறது. ஆனால் அகில இந்தியாவிலே தமிழ்நாட்டிலே கொடுக்கின்ற பாதுகாப்பைப்போல மற்ற மாநிலங்களில் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா என்பதை உறுப்பினர் விளக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுகிறது. மத்தியிலே நாடாளுகிற கட்சியில் ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையில் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கைகள் நாட்டைச் சீரழிக்கின்றன என்பதைத்தான் நான் இங்கே குற்றச்சாட்டாக வைக்கிறேன். அத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற பி.ஜே.பி.யோடு சேர்ந்ததன் மூலம், தமிழ்நாட்டு நலன்களைக் காப்பாற்றுகிற கடமைப் பொறுப்பிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தவறிவிட்டது என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** 1994 ஆம் ஆண்டு ‘காட்’ ஒப்பந்தம், புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்பட்டது. அப்போது அந்தக் கொள்கையைக் கண்டித்து நாடு பூராவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்தியது. இப்போது அந்தக் கட்சியோடு சேர்ந்து தேர்தல் உறவு கொள்கிறீர்களே? அது எந்த வகையில் நியாயம்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பி.ஜே.பி., காங்கிரஸ் இரண்டுமே பொருளாதாரக் கொள்கையில் ஒன்றுதான். பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்த வரையில் காங்கிரஸும் சரி, பி.ஜே.பி.யும் சரி, ஒன்றுதான். அதனால்தான் நாங்கள் அகில இந்திய அளவில் 3-வது அணி வேண்டுமென்று சொல்கிறோம். 3-வது அணி வேண்டுமென்று நாங்கள் சொல்வதினுடைய நோக்கமே அகில இந்திய அளவில் காங்கிரஸ் முன்மொழிந்த கொள்கையை பி.ஜே.பி. ஆதரிக்கிறது; பி.ஜே.பி. நடைமுறைப்படுத்துகிற கொள்கையை காங்கிரஸ் ஆதரிக்கிறது. எனவே, இந்திய அளவில், மூன்றாவது அணி

அவசியப்படுகிறது என்பதால்தான் காங்கிரஸ், பி.ஜே.பி. அல்லாத மூன்றாவது அணி...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே. சுப்பராயன்:** ஆனால் தமிழ்நாட்டில் அல்ல.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலே மூன்றாவது அணி அமைக்கப் போகிறோம் என்று சொல்கின்ற சுப்பராயன் அவர்கள் தமிழ்நாட்டிலே மட்டும் அதே காங்கிரசோடு சேருவது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும் போல் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. சி. வேலாயுதன், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 12-05

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சி நடத்தியதைத்தான் பி.ஜே.பி. நடத்துகிறது என்று சொல்கிறார்கள். 50 ஆண்டுகளாக உலக அரங்கில் பாரத நாட்டினுடைய பெருமை எப்படி இருந்தது? கார்கில் யுத்தம் ஆகட்டும், பொக்ரான் அணு ஆராய்ச்சி ஆகட்டும். இதற்குப் பிறகு உலக வல்லரசுகள் எல்லாம் பல தலைவர்கள் எல்லாம் பாரத நாட்டினுடைய தொடர்பை தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படக்கூடிய வகையில், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அகில இந்தியத் தலைவர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் எல்லாம்கூட பேசியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, பல சந்தர்ப்பங்களில், பாகிஸ்தான்-இந்திய யுத்த காலங்களில் பாரத நாட்டைக் கண்டித்த வல்லரசுகள், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எல்லாம் இப்போது பாகிஸ்தானைக் கண்டிப்பது மட்டுமல்ல, பாரத நாட்டோடு தொடர்ந்து நல்லுறவு வைத்துக்கொள்வதையே நாங்கள் பெருமையாக நினைக்கின்றோம் என்று பேசக்கூடிய அளவில் பாரதநாட்டினுடைய சிறப்பை இரண்டே ஆண்டுகளில், 24 கூட்டணிக் கட்சிகளை வைத்து ஆட்சி நடத்தக்கூடிய அடல்பிகாரி வாஜ்பாய் அவர்கள் இந்த அளவுக்கு பெருமையை சேர்த்திருக்கிறார்கள் என்று சொன்னால் 50 ஆண்டுக் காலம் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி செய்த, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்து ஆட்சி செய்த காங்கிரசால் சாதிக்க முடியாததை சாதித்திருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது. திரு. சுப்பராயன் விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமஸ்கிருதத்தில் பேசுவதுபோன்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரையைப் புரிந்துகொள்ள கஷ்டமாக இருக்கிறது. என்ன சொன்னார் என்றே எனக்குத் தெரியவில்லை. அதனால் அதற்குள்ளே போக விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இரண்டுபேரும் அமெரிக்கா, டில்லி, பாகிஸ்தான் என்பதை விட்டுவிட்டு, தமிழ்நாட்டுக்கு வாருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடும் இந்தியாவிலேதான் இருக்கிறது. இந்தியாவின் ஒரு மாநிலம் என்ற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஆயத்த ஆடை ஏற்றுமதி என்பது இதுவரையிலும் சிறுதொழிலுக்குத்தான் இருந்து வந்தது. இன்றைய பி.ஜே.பி., தி.மு.க. கூட்டாட்சி என்ன செய்துவிட்டது என்றால், சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்டுவந்த அந்த ஆதாரச் சலுகையை அவர்களிடமிருந்து எடுத்துவிட்டது. இதன்மூலம் அந்த சிறுதொழில்கள் தண்ணீருக்குள் இருந்த மீன் குஞ்சை எடுத்து தரையில் வீசி எறிந்தால் எப்படித் துடிக்குமோ அதுபோல துடிக்கிறது. ஏன் இந்த நிலையை நீங்கள் மேற்கொள்கிறீர்கள்? இந்த நிலை சிறுதொழில்களை ஆபத்துக்கு உள்ளாக்குகிறதா, இல்லையா? இதற்கு அமைச்சர் அவர்கள் எழுந்து ஏதாவது ஆக்கப்பூர்வமான பதில் அளித்தால் நான் வரவேற்கிறேன். ஏன் அத்தகைய நிலையை நீங்கள் மேற்கொண்டீர்கள் என்பதை தயவுசெய்து எங்களுக்குச் சொல்லாவிட்டாலும், தமிழ்நாட்டுக்குச் சொல்ல வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் நலிந்து வருகின்ற சிறுதொழில்களுக்கு தமிழகத்தை ஆளுகின்ற கலைஞர் அரசும்,

மத்தியிலே ஆளுகின்ற வாஜ்பாய் அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார். ஆனால் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். சிறுதொழில்கள் நலியாமல் அந்தத் தொழில் தொடர்வதற்காகவே ஒரு திட்டத்தை தீட்டி கடன் வழங்குகின்ற அரசுகள் தமிழக அரசும் மத்திய அரசும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே ஏற்றுமதியிலே ஏற்கெனவே உச்சவரம்பு 3 கோடி இருந்தது, இப்போது 1 கோடி என்று ஆக்கிவிட்டார்கள், உங்களுக்குத் தெரியும். கடந்த அரசு United Front Government இருக்கும்போது 3 கோடியாக இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் 1 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏற்றுமதியைப் பொறுத்த அளவில் எந்தத் தடையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் 16 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, தீப்பெட்டித் தொழில் அழிந்துகொண்டிருக்கிறது. இயந்திரமயம் மற்றும் இறக்குமதி அனுமதிக்கப்பட்டதால் தீப்பெட்டித் தொழில் அழிகிறது. 1400 அந்நியப் பொருள்கள் இறக்குமதிக்குக் கதவு திறந்துவிட்டு இருந்தார்கள் இதுவரையிலும். இப்போது கதவு இருந்தால், அடிக்கடி திறந்துகொண்டு இருக்க வேண்டியிருக்கிறதே என்று கதவையே பிடுங்கிவிட்டது பி.ஜே.பி. ஆட்சி. ஆகவே, இப்போது 1400 பொருட்கள் இந்திய மார்க்கெட்டில் வந்து இறங்குகிறபோது, இந்திய மார்க்கெட்டுக்காக உற்பத்தி செய்து கொண்டிருந்த இந்தியக் கம்பெனிகள் நடைமுறையில் செத்து அழிந்துவிடும். அன்னியக் கம்பெனிகள் இந்திய மார்கெட்டைக் கைப்பற்றிக்கொள்ளும். இதன்மூலம் இந்திய மார்க்கெட் அன்னியக் கம்பெனியின் ஆதிக்க எல்லைக்குள் அனுமதிக்கப்பட்டுவிடும் என்கிற ஆபத்து நீடிக்கிறது. நான் இன்னும் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், இந்த மாநில அரசை. மேற்கு வங்கத்தில் துர்காபூர் உருக்காலை, கர்நாடகாவில் விஸ்வேஸ்வரய்யா உருக்காலை, ஆந்திராவில் விசாகப்பட்டினம் உருக்காலை, இந்த மூன்றையும் தனியார் மயமாக்குவதை எதிர்த்து அந்த மாநில அரசுகள் மத்திய அரசோடு போராடி வென்று தடுத்துவிட்டதே. ஆனால் சேலம் உருக்காலையின் கதி



என்ன? இதே பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே, அந்தத் தீர்மானத்தை ஒரு முடியளவுக்காவது மதித்தார்களா மத்திய அரசு? மதிக்கவில்லையே. நிராகரித்துவிட்டார்களே. இது குறித்து மாநில அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது? தனியாருக்குப் போகட்டும் என்று விட்டுவிட்டார்களா? அல்லது அதைக் காப்பாற்ற...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல இந்த அவையில் தீர்மானம் போட்டதோடு மட்டுமல்ல; மத்தியில் இருக்கக்கூடிய அமைச்சர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கிறபோது எந்த அளவிற்கு சேலம் இரும்பாலையைக் காப்பாற்ற முடியுமோ அந்த அளவிற்கு அதைக் காப்பாற்றியாக வேண்டும் என்று தனியாருக்குக் கொடுப்பதைக் கைவிடுங்கள் என்று வேண்டுகோள் வைத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

ஆந்திரத்திலும், மேற்கு வங்கத்திலும் உள்ள நிலைபற்றி சொன்னார்கள். மேற்குவங்கத்திலும், ஆந்திரத்திலும் இருக்கக்கூடிய இரும்பாலைகளுக்கு ஈடாக சேலத்திலே இருக்கக்கூடிய இரும்பாலையைச் சொல்ல முடியாது. தரம் மட்டுமல்ல, அதனுடைய capacity உட்பட இருந்தாலும்கூட, நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய ஒரு ஆலையை நாம் இழக்கக்கூடாது, தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்பதில் இந்த அரசு அக்கறையோடுதான் இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து தொழிலாளர் பிரச்சினைக்கு வர விரும்புகிறேன். இடையில் குறுக்கிட்டே 15 நிமிடங்கள் போய்விட்டது. திரிசூலம் ஒன்று இருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினை. அதாவது, சமீபத்தில் நான் India Today-வை பார்த்தவுடன் திரிசூலம்தான் தெரிந்தது. திரிசூலம் இந்தியாவை எப்படி ஆபத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறதோ,

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய காரணம் ஒன்றும் இல்லை. உயர்நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு தரப்பட்டு, அந்தத் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நடைமுறையில் தீர்ப்பை மீறுவது அவ்வளவு நியாயம் அல்ல. ஏனென்றால், Contempt of Court என்பதுபோல் கருதப்படும். அந்தத் தீர்ப்பு சரியில்லை என்று உச்சநீதிமன்றத்தின் மூலமாக ஒரு தீர்ப்பு பெறுவதுதான் — உயர் நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்த காரணத்தால் — நாம் மேற்கொள்ள வேண்டிய கடமையாக இருக்கிறது. எனவே, அந்த முறைப்படி மேல் முறையீடு செய்து, அந்த அடிப்படையிலே நம்முடைய இலட்சியத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் இருக்கிறோம்.

*பிற்பகல் 12-15*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர்களும், தமிழ்நாட்டில் தொடர்ந்து தமிழ் வழிக் கல்விக்காகப் பாடுபடுகிறவர்களும், இன்றைக்குப் பாதயாத்திரைகூடப் போகிறார்கள்; அவர்கள் எல்லோரும் வலியுறுத்துவது, தனிச் சட்டம் வேண்டும் என்பதுதான். தனிச்சட்டம் போடுவதிலே சங்கடமேயில்லை. சட்டச் சிக்கல் இல்லை. Contempt of the Court வருவதில்லை. எனவே, தமிழ் வழிக் கல்விக்கு ஒரு சட்டம் இயற்றுங்கள். ஏன் இயற்ற மறுக்கிறீர்கள் என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டம் நிறைவேற்றிய உடனேயே அதைச் செயல்படுத்த முடியும் என்ற நிலை இருந்தால், இந்த அரசு முன்னாலேயே நிறைவேற்றியிருக்கும். உயர்நீதிமன்றத் தீர்ப்பிலே உள்ள கருத்தின்படி சட்டமாக இருந்தாலும் அதே முடிவுதான். சட்டமோ, அரசாங்க ஆணையோ இரண்டும் ஒரேவிதமான பயன் உடையதுதான். நீண்டகாலமாக கல்வித் துறையிலே ஆணைகள் மூலமாகத்தான் செயற்பட்டுள்ளனர். இருமொழிக் கொள்கை உட்பட, ஆணைகள் மூலமாகத்தான் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது. இது ஒன்றும் சட்டம் வரவேண்டிய அளவிற்கோ, அப்படி வருவதன் மூலமாக அது நிலை பெறும் என்ற ஒரு நிலையோ இல்லை. சட்டத்தால்தான் நிலைபெறும் என்பதாக இதுவரையில் சட்டத் துறையிலே இதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, ஆணைக்கும், சட்டத்திற்கும் இரண்டிற்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஒரேவிதமான முடிவுதான். உயர் நீதிமன்றத்திலே அடிப்படை உரிமை என்ற அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்களில், நாம் மேல் முறையீட்டில் தெரிவித்திருக்கிற கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டால், நாம் நடைமுறையிலே 5-வது வகுப்பு வரையில் தமிழ் வழிக் கல்வியை, மழலையர் பள்ளிகள் உட்பட நிறைவேற்ற முடியும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி. (குறுக்கீடு) அனுமதி இல்லை. 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** Incomplete ஆக இருக்கிற இடத்திலே நீங்கள் இப்படிப் பண்ணினால் எப்படீங்க?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி அடிக்கும்போது complete பண்ணிவிட வேண்டும். நான் எத்தனை முறை மணி அடிப்பது? நீங்கள் இப்படியே தொடர்ந்து பேசிக்கொண்டேபோனால் மற்றவர்கள் பேச வேண்டாமா? 26 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** குறுக்கீடுகளுக்கு எவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள், ஆக்கப்பூர்வமான பதிலைத் தாருங்கள் என்றால் குறுக்கிடத்தான் செய்வார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** Deputy Speaker Sir, குறுக்கீடுகளுக்கு அவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது. குறுக்கீடுகளுக்கு நேரமாகவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஆக்கப்பூர்வமான பதிலைத் தாருங்கள் என்று கேட்கும்போது அமைச்சர்கள் குறுக்கிடத்தானே முடியும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசி முடிப்பதற்கு தயவு செய்து அனுமதியுங்கள். அடுத்து ஒரு நிமிடத்திலே அவர் பேசி முடிக்கிறேன் என்கிறார். ஒரு நிமிடம் அனுமதியுங்கள்.

அதைப்போல இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆட்குறைப்பு, ஊதிய வெட்டு, Work load--அதிக வேலை பளு, என்ற முத்தாக்குதலை, திரிசூலத் தாக்குதலை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எதிராக இன்றைக்கு தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கின்றது. பெருந்துறையில் சுப்பாத்தாள் ஸ்பின்னிங் மில்ஸ் எந்தக் காரணமும் இல்லாமல் தொழிலாளர்கள் வீட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இழுத்துப் பூட்டிவிட்டார்கள். இந்த மாநில தொழிலாளர் துறை அரசின் அதிகாரிகள் இதை கவனிக்க வேண்டும். இதுகுறித்து அமைச்சரிடம் புகார் சொல்லியிருக்கிறார்கள். அவரும் பேசுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் உண்மைகளைத் தெரிந்துகொண்டும் அவையிலே சில விவரங்களை வேண்டுமென்றே சொல்லக்கூடாது. இரண்டு தினங்களுக்கு முன்னாலே முதலமைச்சரிடத்திலே இதே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னவுடனே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுங்கள், அதற்கான ஆணையைப் பிறப்பியுங்கள் என்று முதலமைச்சர் ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப் தெரிந்துகொண்டும் இப்படிச் சொல்வது முறையல்ல.

**திரு. கே. சுப்பராயன்**: அதைத்தான் சொல்ல வருகிறேன். அமைச்சர் அவர்கள் தலையிட்டு பிரச்சினையைப் பேசுகின்றார்கள். அதாவது, தமிழ்நாட்டில் தனியார் நிர்வாகத்தின் தாக்குதல் எப்படி இருக்கிறது என்பதற்காகச் சொல்லவந்தேன். அதுபோல் திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் மூடப்பட்டுவிட்டது. மூடப்பட்டு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. 250 ரூபாய் கொடுத்துக்கொண்டு வந்ததை நிறுத்தி விட்டார்கள். 5 மாதங்கள் கொடுத்துவிட்டு, பிறகு நிறுத்திவிட்டார்கள். ஆலையைத் திறக்கக் கோரி இதுவரையில் போராடிக்கொண்டிருந்த அந்தத் தொழிலாளி இப்போது எதற்காகப் போராடுகிறான் தெரியுமா? ஆலையைத் திறக்காவிட்டால் தொலைகிறது, இந்த 250 ரூபாயையாவது கொடுங்கள் என்று போராடுகிறான்.



**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்தபோது இந்த இரண்டு பிரச்சினைகளையும் சுப்பராயன் கொண்டு வந்து, பேச்சுவார்த்தை நடத்தி, சுப்பாத்தாள் மில்லும், தனலட்சுமி மில்லும் திறக்கப்பட்டன. இப்போது மீண்டும் பிரச்சினை வந்தால் பேசித் தீர்க்கலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை எடுத்துக்கொள்ள வேண்டாம். 250 ரூபாய் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, தொழிலாளர் சட்டங்கள் மாற்றப்படும் என்கிறார்கள். தொழிற்சங்கங்களுடைய செயல்பாடுகள் இன்றைக்குக் குறைக்கப்பட்டு வருகின்றன. அதேபோல இன்னும் ஒரு துரதிருஷ்டமான நிலை. தமிழ்நாட்டில் பல்வேறு பள்ளிகளை இந்து மத வெறியர்கள் தங்களுடைய பயிற்சிக் களங்களாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். திருப்பூரில் சின்னசாமி உயர்நிலைப் பள்ளி மைதானத்தை இந்து முன்னணியினர் தங்களுடைய பயிற்சிக் களமாக மாற்றியிருக்கிறார்கள் என்று இந்தப் பேரவையில் நான் பலமுறை பேசிவிட்டேன், புகார் சொல்லியிருக்கிறேன். இன்றுவரை அது தடுக்கப்படவில்லை. ஓர் அரசுப் பள்ளி மைதானத்தையே இந்து மத வெறியர்கள் ஆயுதக் களமாக மாற்றுவார்களானால், அதைப் பெரியாரின் பரம்பரையில் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தடுக்கவில்லையென்றால், இது ஒரு களங்கப் பொட்டாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்கள் தமிழ்மொழியைப் படிப்பதற்கு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்; பாராட்டுகிறேன். ஆனால் உள்ளூர் தமிழன் படிக்க வேண்டாமா? உள்ளூரிலே ஒன்று முதல் 5 வரை பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பெறுவதற்கு உச்சநீதிமன்றத்திலே என்ன வழக்கு இருந்தாலும், இந்தப் பேரவையில் தனிச் சட்டம் இயற்றுவதற்கு எந்தவகையிலும் இடையூறு இல்லை என்பதைத் தெளிந்து, தெரிந்து, உணர்ந்தும் இந்த நிமிடம் வரை இந்த மாநில அரசு ஒன்று முதல் ஐந்து வரையிலும் பள்ளிகளில் கட்டாயத் தமிழ்க் கல்வி என்று கொண்டு வருவதற்கு தயங்குவதற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்குமா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சி.டி. தண்டபாணி அவர்கள் பேசுகின்றபோது, காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது பிந்தரன்வாலேயை பக்கத்திலே வைத்துக் கொண்டு ஓட்டு கேட்டார்கள் என்று சொல்கிறார்கள். அப்போது நடந்தது தவறாக இருக்கலாம். இப்போது நீங்கள் வீரப்பனை வைத்துக்கொண்டு ஓட்டு கேட்கப் போகிறீர்களா? அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளப்போகிறீர்களா என்பதை நீங்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி.டி. தண்டபாணி:** வீரப்பனுடைய தயவிலே வெற்றிபெறுகின்ற அளவிற்கு தி.மு.க. அவ்வளவு பலவீனமான கட்சியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், வீரப்பனை பிடிக்க அரசால் முடியவில்லை. ஆகவே, எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று நீங்கள்தான் வீரப்பன் பெயரைச் சொல்லி ஓட்டு கேட்கிறீர்களே தவிர, தி.மு.க. அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே . . .

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே சன் டிவி.யில் நீங்கள் . . .

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, I am not yielding. இரண்டாவது குறிப்பிட்டார்கள். ஊழலைப்பற்றி இந்தியத் துணைக் கண்டத்திற்கு, ஊழல் என்னவென்று ஒரு அறிமுகம் செய்தது காங்கிரஸ் கட்சி. அது உங்கள் அத்தனைப் பேருக்கும் தெரியும். போஃபர்ஸ் ஊழல் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. நான் நிரம்ப சொல்ல முடியும். எனக்கு நேரம் இருந்தால் எந்தெந்த முதலமைச்சர்கள் ஊழலிலே ஈடுபட்டார்கள். காங்கிரஸ் கட்சி என்ன செய்தது என்று என்னாலே விளக்கமாகச் சொல்ல முடியும்.

**திரு. மு. அப்பாவு:** Speaker Sir. . . .

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்....

**திரு. சி.டி. தண்டபாணி:** நீங்கள் பேசும்போது நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம் அல்லவா? . .

**திரு. சி. ஞானசேகரன்:** Mr. Speaker Sir. . . . . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. வெங்கடசாமி):** He is not yielding.



**THIRU C. GNANASEKARAN:** He is making an allegation against us. So, we have to rebut. Yielding is quite different. Once they are making an allegation, we have got every right to rebut it. Therefore, we have to rebut and that is why you will have to give permission to us.

**HON. CHAIRMAN:** If he is yielding you can speak.

**திரு. சி.டி. தண்டபாணி:** ஆகவே, இதைப்பற்றி, ஊழலைப் பற்றி காங்கிரஸ் பேசக்கூடாது. இரண்டாவது....

**THIRU C. GNANASEKARAN:** Yielding is not the point now. Yielding is not the question. Yielding இதிலே வராது. Once an allegation is made, there is no question of yielding. எனக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** காங்கிரஸ் கட்சி ஊழலைப் பற்றி பேசக்கூடாது. எனக்கு இருக்கக்கூடிய . .

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். பொதுவாக, சபையில் இல்லாதவர்களைப் பற்றி குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. காங்கிரஸ் கட்சி என்ற ஒரு கட்சி இங்கு இல்லை. ஆகையினாலே அதை இப்போது தண்டபாணி விட்டுவிடலாம். காங்கிரஸ் கட்சியைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார், நீங்கள் அமைதியாக இருந்துவிடலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல அந்தக் கட்சியினுடைய பிரதிநிதிகள் இங்கே இல்லாத நேரத்தில் அவர்களைப் பற்றி பேசி அதற்குப் பதில் பெற முடியாத அந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இவர்கள் வேறு, வேறு ஆனாலும், வேர் ஒன்றுதான் . .

பிற்பகல் 12-25

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியும் இதுவரைக்கும் நான் வேறு, வேறு என்று நினைத்தது இல்லை. இப்போதுதான் தெரிகிறது. அந்த இரண்டும் ஒன்று என்று.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே நிமிடம்; நான் முடிப்பதற்காகக் கேட்டேன். கொடுத்திருந்தால், இந்நேரம் நான் முடித்து இன்னொருவர் பேச ஆரம்பித்திருப்பார். நான் நிறைவாகச் சொல்ல விரும்புவது, திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம், கடந்த ஐந்தாண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. (குறுக்கீடு) திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் முடிவுரைக்குத்தானே வருகிறேன் என்று சொன்னீர்கள். அதை விட்டுவிட்டு, அடுத்த subject-க்குப் போகிறீர்கள், நீங்கள். திரு. சி.டி. தண்டபாணி.

***திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் உரையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இலட்சியங்களில் ஒன்றான மாநில சுயாட்சி, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி அதிலே வெற்றி பெறுவோம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, மாநில சுயாட்சி என்கின்ற விவாதங்கள் வெறும் நான்கு சுவற்றுக்குள்ளே இருந்து நடத்தப்பட்ட விவாதங்கள், மக்கள் மத்தியிலே வந்து, மாநில அரசுக்கு உரிய உரிமைகள் வழங்க வேண்டுமென்று அனைவரும் ஏற்றுக் கொள்கிற அளவிற்கு இன்றைக்கு அனைத்துக் கட்சிகளும் சொல்கின்ற அளவிற்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உரிமையைப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள்.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், ஒரு காலத்தில் சுதந்திர தினமானாலும் சரி, குடியரசு தினமானாலும் சரி, சுதந்திர தினத்தன்று மாநிலங்களில் கவர்னர் மட்டுமே தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதேபோல, குடியரசுத் தினத்தன்று, கவர்னரே ஏற்றி வைப்பது வழக்கம். ஆனால், நம்முடைய தலைவருடைய முயற்சியின் காரணமாக— இந்திய துணைக் கண்டத்தில் அனைத்து மாநில முதலமைச்சர்களும் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைக்கின்ற ஒரு உரிமையை, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வாங்கித் தந்த பெருமை நம்முடைய தலைவர் கலைஞருக்கு உண்டு.

அதேபோல, இன்றைக்கு நிதியாதாரங்கள் என்று சொல்கின்ற அளவிற்கு நிதிக் கமிஷன்கள் கூறுகின்ற பல்வேறு கருத்துக்களையெல்லாம் எடுத்துச்சொல்லி, மாநிலங்களுக்கு அதிக அளவிலே நிதியாதாரங்கள் வழங்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்த காரணத்தினால், மொத்த



வருமானத்தில் 28 சதவிகிதம் தரவேண்டுமென்று, நிதிக் கமிஷனே சொல்கின்ற அளவிற்கு, நம்முடைய தலைவர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து வெற்றியடைந்திருக்கிறார்கள். எனவே, அதைத் தொடர்ந்து செய்கின்ற அளவிற்கு நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சி எடுக்கும் என்ற வகையில் ஆளுநர் உரையிலே, இங்கே குறிப்பிடப்பட்டிருந்தது.

பிற்பகல் 12-20

இங்கே பேசிய இனிய நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் விவரமான கருத்துக்களையெல்லாம் இங்கே வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு அரசாங்கம் செய்கின்ற மகத்தான காரியங்களை, இந்த மக்களுக்காகச் செய்கின்ற காரியங்களையெல்லாம் திட்டமிட்டு மறைக்க வேண்டுமென்கின்ற காரணத்திற்காக, ஒருசில கருத்துக்களை இங்கே கூறியிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் ஒரு சிறந்த வழக்குரைஞர் என்று கூறப்படுகிறது. அவர் இங்கே வீரப்பனைப் பற்றிப் பேசினார். பேசுகின்றபோது, வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை என்று பேசினார்களே தவிர, நாட்டினுடைய நிலைமையைப் பற்றி அவராலே பேச முடியவில்லை. இப்படி குற்றச்சாட்டு என்று சொல்வது என்று சொன்னால் நிரம்பச் சொல்லலாம். அவருக்கே தெரியும், பிந்தரன்வாலே என்று ஒருவர் இருந்தார் பஞ்சாப் மாநிலத்தில். அவர் காட்டிலே போய்க்கூட ஒளியவில்லை. பொற்கோவிலிலே உட்கார்ந்து கொண்டார். என்னை யார் கைது செய்ய முடியும் என்று சவால் விட்டார். பல ஆண்டுகள் அவரை ஒன்றும் செய்ய முடியாமல், அதற்கு மாறாக, அதே பிந்திரன்வாலேயை அழைத்துக்கொண்டு, காங்கிரஸ் மேடையிலே உட்கார்ந்து, சஞ்சய் காந்தியும், இந்திரா காந்தியும், பக்கத்திலே உட்கார வைத்து, காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு கேட்டார்களே தவிர, பிந்திரன்வாலேயை தொடவில்லை. பிறகு பல்வேறு இயக்கங்கள் வலியுறுத்தியதற்குப் பின்னால், இன்னும் சொல்லப்போனால், இந்துக்கள் பலர் கொல்லப்பட்டதற்குப் பின்னால், இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர அதற்கு முன்னாலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இங்கே காட்டிலே ஒளிந்திருக்கக்கூடிய வீரப்பனை பிடிக்கமுடியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. வெங்கடசாமி தலைமை)

**திரு. சி. ஞானசேகரன்:** We are quite different parties.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி, இந்திரா காந்தி. நாங்கள் எல்லாம் காங்கிரசினுடைய மறு பிறவியே தவிர காங்கிரசுக்கும் எங்களுக்கும் பெருத்த வேறுபாடு ஒன்றும் கிடையாது. அதனாலே, நீங்கள் காங்கிரஸ் பற்றி ஏதாவது சொன்னீர்கள் என்றால், நாங்கள்தான் முன்னாலே நின்று அதற்கு பதில் சொல்வதற்குத் தயாராக இருப்போம். (குறுக்கீடுகள்)

**திரு. சி.டி. தண்டபாணி:** அப்படி என்று சொன்னால், இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு முரண்பாடான வாதத்தைச் சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சி இந்த அவையில் இல்லை, அதைப்பற்றி ஏன் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். பிறகு, நாங்கள்தான் காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் பாரம்பரியம், யாராவது அதைப்பற்றி சொன்னால் விட்டுக் கொடுக்கவும் மாட்டோம் என்று சொல்கிறார்கள். இந்த வாதத்தை எப்படி எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறார் என்று எனக்குப் புரியவே இல்லை. காங்கிரஸ் கட்சியை இவ்வளவு அநாதை ஆக்க வேண்டாம், அல்லலுக்கு உள்ளாக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவரை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார். வேறு வேறாக இருந்தாலும், வேர் ஒன்றுதான் என்று சொல்லிவிட்டார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அதுதான் முடிந்துவிட்டதே, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, அந்த சப்ஜெக்டிலேகூட அப்படியே விட்டு போயிற்றே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அடுத்த சப்ஜெக்டுக்கு வந்துவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்த சப்ஜெக்டிலேகூட—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிடி. தண்டபாணி அவர்கள் சொல்கிறபோது, காங்கிரஸ்தான் ஊழலை இங்கே கற்றுக் கொடுத்தது என்று சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்த



அளவில், திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஊழலை தமிழ்நாட்டின் உள்ளே புகுத்தியது, கற்றுக் கொடுத்தது என்பதெல்லாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இது தேவையில்லாத ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைத்தான் சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நாங்கள் எல்லாம் ஆளும் கட்சியாக இந்த அவைக்கு வருவதற்கு முன்னாலேயே, திராவிட முன்னேற்றக் கழகம் வருவதற்கு முன்னாலேயே கெய்ரோன், பக்ஷி குலாம் அகமத், ஹரிகிருஷ்ண மேத்தா, டிடிகே. இப்படிப் பலபேர், அதிலெல்லாம் அவர்கள் டாக்டரேட் வாங்கி, முடித்துப்போய் விட்டார்கள். (சிரிப்பு) ஆகையினாலே, நீங்கள் அதைத் திரும்பத் திரும்பப் பேசவேண்டியதில்லை. ஆக, நாங்கள் இப்போது ஆளுவதற்கு, சபைக்கு வருவதற்கு முன்னாலேயே இவர்கள் எல்லாம் வாங்கி அதெல்லாம் கி.மு., கி.பி. மாதிரி ஆகிவிட்டது. அதனாலே வேறு சப்ஜெக்டுக்குப் போகலாம்.

**திரு. சிடி. தண்டபாணி:** அதேபோல நம்முடைய மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிடும்போது, விவசாயிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுமே செய்யவில்லை என்கின்ற அளவிற்கு அவர்கள் குறிப்பிட்டார்கள். நிரம்ப அனுபவம் மிக்க ஒரு சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் குறிப்பிட்டது உள்ளபடி எனக்கு வருத்தத்தைத் தருகின்றது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அபராத வட்டியை முழுமையாகத் தள்ள வேண்டும், அதேபோல் வட்டியையும் தள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்—எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக-3 சதவீத அபராத வட்டியை முழுமையாகத் தள்ளிவிட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதற்கு கிட்டத்தட்ட 128 கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிந்திருந்தும்கூட அதற்கு அவர்கள் உத்தரவு போட்டார்கள். அது மட்டுமல்லாமல், கடன் பாக்கியை யார் கட்டினாலும், அவர்களுக்கு 7 சதவீதம் ஊக்கத்தொகை தரப்படும் என்று அவர்கள் குறிப்பிட்டு விவசாயிகளுக்கு உதவி செய்தார்கள்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, சுப்பராயன் போன்ற அகில இந்தியக் கட்சியைச் சார்ந்தவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தியாவில் அபராத வட்டியை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள் என்று எந்த ஒரு மாநிலத்தையாவது தயவுசெய்து நீங்கள் காட்டுங்கள்.

எந்த மாநிலத்திலே அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது? தமிழ்நாட்டிலே மட்டும்தான் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு விவசாயிகளுக்கு தரப்பட்டிருக்கிறது. அதேபோல, அவர்கள் தங்களுடைய கடன்களைக் கட்டிவிடுகிறபோது 7 சதவீதம் அவர்களுக்கு ஊக்கத் தொகை மானியம் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. விலைவாசி பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். காய்கறிகளைப் பொறுத்தவரையில், பொருட்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு விலை (மணியடிக்கப் பெற்றது) இன்னும் பேசவேயில்லை. இன்னும் பேசவேயில்லையே. இன்றைக்கு இருக்கக்கூடிய விலை நாளைக்கு இருக்காது. இன்றைய தினம் 10 ரூபாய் தக்காளிக்கு. அடுத்த வாரம் 2 ரூபாய் இருக்கும். அது விளைச்சலைப் பொறுத்தது. ஆகவே, விவசாயிகளுக்கு இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் துரோகம் செய்து விட்டது என்று சொல்வது ஒரு அரசியல் கோஷமே தவிர, மேடையிலே பேசலாமே தவிர, சட்டமன்றத்திலே பேசுவது என்பது அவ்வளவு அழகாக இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்திலே என்றைக்கு உறுப்பினர் பதவியைப் பெற்றதோ அன்றைக்கிருந்தே நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கக் கூடிய விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய inputs, அது உரமானாலும் சரி, அதே நேரத்திலே வேறு பொருளானாலும் சரி, பூச்சி மருந்தானாலும் சரி, இவற்றிற்கு முழுமையாக customs duty, excise duty குறைக்கப்பட வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களிலே நாம் வாதாடிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ விவசாயிகளைக் கைவிட்டுவிட்டது என்று எண்ணிக் கொண்டிருப்பது உள்ளபடியே தவறானது.

பிற்பகல் 12-30

இன்றைக்கு, நம்முடைய தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிற ஒரு திட்டத்தைப்பற்றி ஒரு கருத்தை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். நம்முடைய பயோ டெக்னாலஜி பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது, மிகவும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று. அதிலே இரண்டு வகைகள். ஒன்று விவசாயத்திற்குத் தேவையானது. நீண்டகாலமாகச் செய்யக்கூடிய காரியங்கள், விவசாயத்திற்குத் தேவையானது. இன்னொன்று உடல் நலத்திற்கு, மருத்துவத்திற்குத் தேவையானது. இந்த இரண்டையும் நம்முடைய தலைவர் அவர்கள் பயோ டெக்னாலஜி மூலமாக இன்றைக்குச்



செய்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், ஜப்பான் நாடு இன்றைக்கு பயோ டெக்னாலஜி என்ற வகையிலே அதைக் கொண்டு வந்து அங்கே இருக்கக்கூடிய நெற்பயிர்களை வறட்சியிலும், கடும் குளிரிலும் எப்படி உற்பத்தி செய்ய முடியும் என்று அவர்கள் முடிவு செய்து, 10 நாடுகளினுடைய கூட்டமைப்பை வைத்து 2004-ஆவது ஆண்டில் அந்த நாட்டில் நெற்பயிர்கள் அதிகமாக வளருவதற்கு எல்லாவகையான காரியங்களையும், நடவடிக்கைகளையும் செய்யமுடியும் என்று இப்போது அந்த நாட்டிலே கண்டுபிடித்திருக்கிறார்கள். அதேபோலத்தான் இன்றைக்கு இங்கே நம்முடைய மீன் பிடிக்கக்கூடியவர்களைப் பொறுத்தவரையில் பார்த்தால் ஜெர்மன் நாட்டில் சிப்ரா பிஷ் என்கின்ற ஒரு வகையான மீன் இருக்கிறது, அந்த மீனை இப்போது ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மீனினுடைய உடலில் 95% உறுப்புக்கள் மனித உடலுக்குள்ள உறுப்புகளுக்கும் ஒப்பீடு இருக்கிறது என்று அறிந்திருக்கிறார்கள். அந்த மீனினுடைய ஆரிஜின் எங்கே என்று கேட்டால் கங்கை நதிதான் அந்த மீனினுடைய ஆரிஜின். அதை இப்போது ஆராய்ச்சி செய்து அதன் மூலமாக இரத்தக் கோளாறுகள், இன்னும் சொல்லப் போனால் கேன்சர் போன்ற வியாதிகளை நல்ல முறையிலே தீர்க்க முடியும் என்று இப்போது ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சிறந்த திட்டத்தை நம்முடைய தலைவர் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதை இங்கே வரவேற்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் இங்கே அதை வேறு திசையில் திருப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அடிக்கடி கோவை வருவது உண்டு. எதற்காக வருகிறார் என்று கேட்டால் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு, பி.ஏ.பி. விவசாயிகளுக்காக உதவி செய்வதற்காக. ஒரு மடை விட்டு ஒரு மடை தண்ணீர் பாய்ச்சுவதற்கு இத்தனை ஆண்டு காலமாகப் போராடிய விவசாயிகளுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அனுமதியின்பேரில் இப்போது அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கி, அந்தப் பகுதி மக்கள் அத்தனைபேரும் வரவேற்றிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய கந்தசாமி அவர்களும் இன்றைக்கு வரவேற்றிருக்கின்றார்கள். அந்த அளவிற்கு ஒரு மடை விட்டு ஒரு மடை என்ற அளவிற்குச் செய்யப்பட்டிருக்கின்றது. 23,000 ஏக்கர் அதனாலே பாசன விஸ்தரிப்பு பெறுகின்றது. இப்படி விவசாயப் பெருங்குடி மக்களுக்குத்

அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர், ஆட்சிக்கு வந்ததுபோல எங்களாலேயும் நிச்சயமாக ஆட்சிக்கு வர முடியும் என்கின்ற நம்பிக்கையில்தான், நீங்கள் எதுவும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்கிற கருத்தில் சொல்லப்பட்ட கருத்துதானே ஒழிய வேறு அல்ல.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** அது ஊழல் அரசாங்கமாக இருந்ததால் அப்படிக் கேட்டார். இது அப்படிப்பட்ட அரசு அல்ல. அதுவும் தி.மு.க., த.மா.க.-வாக ஆகிவிட முடியாது அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அடுத்த தேர்தலில் தி.மு.க.தான் வருகிறது. நம்முடைய தலைவர் இங்கே முதலமைச்சராக இருக்கப் போகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வருத்தம் நீங்கள் எல்லாம் அந்த வரிசையில் இருப்பீர்களா என்பதுதான். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். 1996 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலிலே மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு 11-வது சட்டமன்றத்தினுடைய கூட்டத் தொடரிலே பொறுப்பேற்ற 234 உறுப்பினர்களிலே 21 ஆம் நூற்றாண்டினுடைய முதலாவது கூட்டத் தொடர் என்ற முறையிலும் இந்த 5 ஆண்டு காலத்தினுடைய நிறைவுக் கூட்டத் தொடர் என்ற முறையிலும் நம்முடைய உறுப்பினர்கள் 12 பேர் இங்கே காணவில்லையே என்ற செய்தியை மிகுந்த ஆழ்ந்த வேதனையோடு நான் இங்கே முதலிலே தெரிவித்துக்கொண்டு ஒருசில கருத்துக்களை மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலே படித்துப் படித்துப் பார்த்தேன். படித்த நேரத்திலே நம்முடைய கலைஞர் அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இதுவரையிலே இல்லாத அளவுக்கு மிகப் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறது என்பதை



விளக்கிச் சொல்லக்கூடிய வகையிலே அமைந்திருந்தது என்று சொல்லி மனதார பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆளுநர் உரையை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆளுநர் அவர்கள் அடிப்படை வசதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த வகையிலே இதுவரையில் இல்லாத அளவிற்கு குடிநீர் வசதி, எங்கு பார்த்தாலும் சாலை வசதி, தெருவிளக்கு வசதி போன்ற பல்வேறு அடிப்படைத் தேவைகளை, பொதுமக்கள் பிரச்சினைகளை எல்லாம் நிறைவேற்றி மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறது என்று சொன்னதை மீண்டும் ஒரு முறை நான் மனதார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக விவசாயிகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிறார்கள். எல்லோருக்கும் உணவு வழங்கி இருக்கிறார்கள் என்ற செய்தி எல்லாம் சொன்னார்கள். அப்படி விவசாயிகள் தன்னிறைவு பெறுவதற்குக் காரணமாக இருந்தது தமிழக அரசு என்பதை நான் பெருமனதோடு சுட்டிக்காட்டுகிறேன். அதைப்போலவே பாட்டாளி மக்கள் கட்சி, எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களும் இந்தியத் திருநாட்டிலே, தமிழகத்திலே ஒரு தரமான கட்டாயக் கல்வி வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் ஐந்தாவது வகுப்பு வரையிலே கட்டாயக் கல்வித் திட்டத்தை அறிவித்திருப்பதை மனதார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-40

அதைப்போலவே, பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு இருந்த அந்த இடஒதுக்கீட்டிலே மிகப்பெரிய சாதனைகளையெல்லாம் படைத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அதையும் நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையிலே இவையெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே, இன்னொன்றுகூட, இந்த இடஒதுக்கீட்டிலே இவ்வளவு சாதனைகளைப் படைத்த தமிழக அரசு மீண்டும் சில சீர்திருத்தங்களைச் செய்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும்

தரப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு காரியங்களை இன்னும் எங்களாலே நிரம்ப எடுத்துச் சொல்ல முடியும்.

நம்முடைய சட்டம் ஒழுங்கு குறித்து நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு, பாரதீய ஜனதாக் கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டுச் சேர்ந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டது. தமிழகத்தில் இனிமேல் எந்த வகையிலேயும் மதக் கலவரம் வரக் கூடாது என்கின்ற ஒரேயோரு காரணத்திற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் பாரதீய ஜனதாக் கட்சியும் ஒன்றாக இணைந்திருக்கின்றன. அது எப்படி என்றால், இந்த இரண்டு பேரும் வேறு வகையான திசையிலே இருக்கக்கூடியவர்கள் இல்லை. இந்துக்களிலே இருக்கக்கூடிய சில தீவிரவாதிகள், இஸ்லாமியர்களிலே இருக்கக்கூடிய சில தீவிரவாதிகள். இந்த இரண்டுபேரும் மோதுகின்ற காரணத்தினால் இந்து முஸ்லீம் கலவரம் என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்கிற காரணத்திற்காகத்தான், பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்களுக்கும், இந்துக்களுக்கும் பெரிய போராட்டம் நடந்தபோது அந்தப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கருதி பாரதீய ஜனதாக் கட்சியும், சீக்கிய அகாலிதளமும் இன்றைக்குக் கூட்டணி வைத்துக்கொண்டு அங்கே அரசு நடத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் அங்கே கலவரம் நின்றது. அதேபோலத்தான் இங்கே திராவிட முன்னேற்றக் கழகமும் பாரதீய ஜனதாக் கட்சியும் கூட்டணி வைத்துக் கொண்டு இன்றைக்கு அரசு நடத்துகின்ற காரணத்தினால் கடந்த 1½ ஆண்டுகாலமாக, அதாவது பாரதீய ஜனதாக் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்த நாளிலேயிருந்து மதக் கலவரம் என்று ஒரு சம்பவம்கூட தமிழ்நாட்டில் இதுவரைக்கும் நடைபெறவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் அதைக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நம்முடைய அரசு பொருளாதார ரீதியில் ஒன்றுமே செய்யவில்லை என்று நம்முடைய (மணியடிக்கப் பெற்றது) அன்பிற்குரிய நண்பர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய Economic Development Target, National Development Target என்ன என்று கேட்டால் 9 சதவீதம். பாரதப் பிரதமர் அவர்கள் எல்லா மாநிலங்களுக்கும் எழுதியிருக்கிறார்கள் 9 சதவீதம் என்று. ஆனால், மேற்கு வங்காளத்திலே எவ்வளவு - 6 சதவீதம். கேரளாவிலே எவ்வளவு -5.5 சதவீதம். தமிழகத்திலே எவ்வளவு என்று கேட்டால் 8.9 சதவிகிதம். 9 சதவிகிதம் target. Mostly we achieved it. 9 சதவிகிதம் target முழுமையான குறியீட்டை நாம் இன்றைக்கு



நிறைவேற்றி இருக்கிறோம். அந்த அளவிற்கு ஆற்றல் மிகுந்த தலைவர் நம்முடைய தலைவர் இங்கே இருக்கிறார்கள். இங்கே நம்முடைய அன்புக்குரிய (மணியடிக்கப்பெற்றது) ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீங்கள் 3 மாதம் முன்பாக விலகிவிடுங்கள். பிறகு தேர்தலை நடத்துங்கள் என்று. அவருக்கு ஒரு வருத்தம். நாங்கள் ஆட்சியில் இருந்தால் அவர்களுக்கு ஒரு சீட்டுகூட வராது என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் எங்களை விலகச் சொல்கிறார். நாங்கள் ஆட்சியில் இருந்தால் அங்கே ஒரு சீட்டுகூட வராது. இருந்தாலும்கூட . . .

பிற்பகல் 12-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அவர் முடிக்கட்டுமே, பிறகு சொல்லுங்கள். அவர் சொல்லிய பிறகு நான் உங்களை அனுமதிக்கிறேன்.

**திரு. சி.டி. தண்டபாணி:** ஜனநாயகத்தில் ஒரு புதுமையைச் செய்ய வேண்டும் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். சட்டத்தை இயற்றியவர்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இந்த மண்டபத்தில் இருக்கின்றவர்கள் ஆக்கப்பூர்வமான அதே நேரத்தில் அரசு உள்ளபடியே தவறு செய்திருக்குமேயானால் அதைச் சுட்டிக்காட்டி அதை சீர்திருத்தக் கூடிய ஆற்றலை எல்லோரும் பெற்றிருக்க வேண்டுமே தவிர வருகிற தேர்தலை மனதிலே வைத்துப் பேசுவதென்பது சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய ஒரு சரியான கடமையாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி அவர் எதிர்பார்ப்பதைப் போல நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது நம்முடைய தலைவர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் பேசுகின்றபோது நாங்கள் எல்லாம் 3 மாதம் நீங்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகுங்கள் என்று கேட்பதே மீண்டும் வரமாட்டோம் என்ற சந்தேகத்தில் சொன்னதாகச் சொன்னார்கள். 1966-லே கேட்ட அன்றைய கலைஞர்

கல்வீச்சிலே சம்பந்தப்படாதவர்கள், 15 வயது, 17 வயது நிரம்பாத சிறுவர்களை எல்லாம் குண்டர் சட்டத்திலேயும், தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலேயும் கைது செய்திருப்பது, தொடர்ந்து வலியுறுத்தியும்கூட அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்ற அந்த வேதனையை, ஆதங்கத்தைச் சொல்லி, அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே 1996-லே தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில், அதற்கு முந்தைய ஆட்சிக்காலத்திலேயும்கூட, தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சியினர் மீதெல்லாம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்த வழக்குகளெல்லாம் திரும்பப் பெறப்படும் என்று சொல்லி முதலமைச்சர் அறிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இருந்த வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டன. வரவேற்கிறோம். பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது இருந்த ஒருசில வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதே தவிர பல ஆயிரக் கணக்கான தொண்டர்கள் இன்னும் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். வேதனையோடு திரும்பிக் கொணடிருக்கிறார்கள். அந்த வழக்குகளையெல்லாம் சொன்னமாதிரி திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லி நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

அதைப்போலவே இன்றைய நிலையிலே விவசாயிகளைப் பற்றிப் பேசுகிறபொழுது, விவசாயிகளுடைய வாழ்க்கை என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஒரு குண்டூசி, சோப்பு, எந்தப் பொருள் உற்பத்தி செய்தாலும்கூட, பொருளை உற்பத்தி செய்யக்கூடியவனே விலையை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடையாது. ஆகவே, அதையெல்லாம் கருத்திலே கொண்டு விவசாயிகள் தன்னிறைவு பெறக்கூடிய வகையிலே உணவு தானியத்தை உற்பத்தி செய்து இருந்தாலும்கூட, அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக இன்னும் நலத் திட்டங்களை, முன்னேற்றத் திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அப்படிச் சொல்லுகின்றபொழுது, உதாரணத்திற்குச் சொல்கிறேன். அரிசி, விவசாயி நெல்லை உற்பத்தி செய்கிறான். நெல்லினுடைய விலை மிகக் குறைவாக இருக்கிறது. கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. ஏங்குகிறான், வேதனைப்படுகிறான். ஆனால் அதே நெல், அரிசியாகக் கடைக்குப் போகிறது. கடையிலே சென்று கேட்டால், ஒரு கிலோ அரிசி 20 ரூபாய், 25 ரூபாய். இடையிலே இடைத்தரகர்கள் கொள்ளையடிக்கிறார்கள். விவசாயிகளுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. நுகர்வோருக்கும் அடக்க விலையிலே பொருள் கிடைக்கவில்லை. இடைத்தரகர்கள் அதைச் சுரண்டுகிற காரணத்தினாலே இந்த இரண்டு தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நியாயம் கிடைக்கக்கூடிய வகையிலே விவசாயிகளுக்குக் கூடுதலான விலையும், நுகர்வோருக்கு அடக்க விலையிலேயும் கிடைக்கக்கூடிய அந்த விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே விவசாயி மின்னிணைப்பு வேண்டுமென்று காத்திருந்து, 15 வருஷம் ஆனாலும் கிடைப்பதில்லை. 25,000, 50,000, 10,000 இப்படிக் கட்டினாலும்கூட, காத்திருக்க வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், கர்நாடக மாநிலத்திலே மின்சாரத்தைக் கடன் பெறுகிறார்கள். வெளியிலேயிருந்து மின்சாரத்தைப் பெறக்கூடிய அந்த அரசு விவசாயிக்கு விண்ணப்பித்த ஒரு வார காலத்திற்குள்ளே மின்னிணைப்பு விவசாயப் பம்பு செட்டுக்குக் கொடுக்கிறது. ஆனால் மின் உற்பத்தியிலே தன்னிறைவு பெறக்கூடிய வகையிலே சாதனை படைத்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசு விவசாயிகளினுடைய இந்த மின்னிணைப்பு வழங்குவதிலே தாமதிப்பது ஏன் என்று தெரியவில்லை. அதையெல்லாம் மாற்றிக்கொண்டு, விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விண்ணப்பித்தவுடனே மின்னிணைப்பு கொடுப்பதற்கு எவ்வளவு செலவினங்கள் ஏற்பட்டாலும்கூட அதை ஏற்று அரசு நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, நெசவாளர்கள் பிரச்சினை. இந்த நெசவாளர் பிரச்சினை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆக்கப்பூர்வமான இடஒதுக்கீட்டை மீண்டும் அமைத்திட வேண்டுமாறு நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இடஒதுக்கீடு என்று சொல்கின்ற நேரத்திலே, இப்போது அரசுத் துறைகள் எல்லாம் தனியார்மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசின் புள்ளிவிவரங்களோடு சொல்கிறேன். இன்றைய வேலைவாய்ப்பிலே மத்திய அரசிலே 3 சதவீதம் வேலைவாய்ப்பும், மாநில அரசிலே 1 சதவீதம் வேலைவாய்ப்பும் ஆக 4 சதவீதம் என்பதுதான் அரசுத் துறைகளினுடைய வேலைவாய்ப்பு. மற்றும் எஞ்சியிருக்கின்ற 96 சதவீத வேலைவாய்ப்பு எங்கே இருக்கிறது என்று சொன்னால், தனியார் நிறுவனங்களிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு தனியார் நிறுவனங்களிலே வேலைவாய்ப்புக்குச் செல்வதற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, தனியார் துறையிலேயும், அந்தத் தனியார் நிறுவனங்களிலேயும் இடஒதுக்கீடு வேண்டும் என்ற நிலையை தமிழக அரசு கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்று இருக்கக்கூடிய இடஒதுக்கீட்டிலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, 1989-லே ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தீர்கள், 20 சதவீதம் இடஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். பாராட்டிக்கொண்டிருக்கின்றோம்.

அதேநேரத்திலே, மற்ற மாநிலங்களிலே இருப்பதைப்போல அந்த இடஒதுக்கீட்டை, தொகுப்பு அடிப்படையிலே, தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையிலே பிரித்து அமைக்க வேண்டும். அது எல்லாச் சமுதாய மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தை வைக்கிறேன். இதைப்போலவே ஆந்திர மாநிலத்திலே, ஆந்திர அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடிய இடஒதுக்கீட்டை நான்கு தொகுப்பாகப் பிரித்திருக்கிறது. அந்த நிலையும் இங்கே தமிழ்நாட்டிலே வரும் என்று சொன்னால், தமிழகத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களிலே உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் அது வாய்ப்பாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்டி, இப்படிப்பட்ட இடஒதுக்கீட்டால் மேலும் சில சீர்திருத்தங்களை நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1989 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டை வைத்து சட்டமன்றத்திலே நான் பேசிய நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்து, ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அந்தக் கமிட்டியிலே நாங்கள் எல்லாம் இடம்பெற்று, அரசுக்குப் பரிந்துரை செய்த நேரத்திலே, காலிப் பின்னடைவு இடங்களை நிரப்புவதற்கான ஒரு நல்ல திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அதை வரவேற்கிறோம். அப்படி அந்தப் பின்னடைவு இடங்களை - Back lock Vacancy என்று சொல்லக்கூடிய அந்த இடங்களை நிரப்புகின்ற நேரத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை வரவேற்கிறோம். அதேநேரத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உண்டான இடஒதுக்கீட்டிலே அந்த Back lock Vacancy-லே வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதைப் பாராட்டக்கூடிய அதேநேரத்திலே, 1989-க்குப் பிறகு நிரப்பப்பட்ட பணிகளிலே என்ற அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டு, இதுவரையிலே இருக்கக்கூடிய வேலைவாய்ப்புகளிலே அவற்றை மொத்தமாகக் கணக்கிட்டு, அதை நிறைவு செய்து நிரப்புவதுதான் பொருத்தமாக இருக்கும். உண்மையான சமூக நீதிக்கு வழிவகுக்கும் என்ற காரணத்தினால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டான மொத்த வேலைவாய்ப்புகளிலே இருக்கக்கூடிய காலியிடங்களைப் பின்னடைவு காலியிடங்களாக அறிவித்து நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த இட ஒதுக்கீட்டிலே சிறுபான்மை மக்கள் என்று சொல்லக்கூடிய இஸ்லாமியருக்கு இடஒதுக்கீடு இல்லை. நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, யார் எதைப் பேசினாலும்கூட, பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையில் சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்று அந்த நிலையிலேயும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இஸ்லாமியருக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்று சொல்லி வலியுறுத்தி, அதேநேரத்திலே இந்த கிறிஸ்த்துவ வன்னியர்களும் நீண்டகாலமாகக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பற்றி கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. நாங்கள் குறை சொல்லவில்லை. இருந்தாலும்கூட, இங்கே பாட்டாளி மக்கள் கட்சியினர் எந்தத் தவறும் செய்யாதவர்கள். எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களைக் கொலை செய்ய, தாக்குதலுக்கு முற்பட்ட நேரத்திலே ஒருசிலர் பேருந்துகள் மீது கல் வீசினார்கள் என்ற காரணத்திற்காக, அந்தக்

அதைப்போலவே, மீனவர்கள் பிரச்சினை. இன்று மீனவர்களுடைய நிலை அவல நிலையாக இருந்துகொண்டிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சிகூட தொடர்ந்து இந்த மாமன்றத்திலே அதிலும் குறிப்பாக டாக்டர் ஐயா அவர்கள் வெளியிலே சொன்ன கருத்தை இந்த மாமன்றத்திலே முதன்முதலாவது நான் சட்டமன்றத்திலே பேசியவன் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மீனவர்களுக்குத் தாங்கள் பிடிக்கக்கூடிய மீனுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. ஆகவே மீனவர் அங்காடி கொண்டு வர வேண்டுமென்று சொல்லி, நாங்கள்தான் முதலிலே குரல் கொடுத்தோம். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு, மீனவர் அங்காடி திறப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அது நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. மீனவர் அங்காடியைக் கொண்டு வருவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு நாடு முன்னேறுவதற்கு, தனி நபர் முன்னேறுவதற்குக் கல்வி தேவை. அதற்காகத் தமிழக அரசு கட்டாயக் கல்வித் திட்டத்தை ஐந்தாம் வகுப்பு வரையிலே அறிவித்திருக்கிறது. வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, இந்திய அரசியல் சட்டப்படி, 1960-க்குள்ளாக எல்லோருக்கும் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும்; 14 வயது வரையிலே என்று சொல்லியிருந்தாலும்கூட, இதுவரையிலும் நம்முடைய நாட்டில் அது இல்லை. ஆகவே, அதையெல்லாம் ஏற்று நம்முடைய தமிழக அரசு 10 ஆம் வகுப்பு வரையிலும் அல்லது 8 ஆம் வகுப்பு வரையிலாவது அந்தக் கட்டாயக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்களுக்கு மீனவர் அங்காடி கொண்டு வரக்கூடிய அதேநேரத்திலே அவர்களுக்கு டீசல் விலை மானியத்திலே கிடைக்க வேண்டும். இன்னும் கூடுதலான மண்ணெண்ணெயும், அதிக மானிய விலையிலே மண்ணெண்ணெய் கிடைப்பதற்கும், டீசல் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊட்டி தேயிலைப் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதையெல்லாம் தீர்ப்பதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் பிரச்சினை குறித்து சுருக்கமாக சொல்கிறேன். இந்த நாட்டிலே நம்முடைய தமிழக அரசு தொழில் துறையிலே சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. நாம் பெரிதும் வரவேற்கிறோம். அதேநேரத்திலே மூடிய



ஆலைகளெல்லாம் திறக்கப்படாமல் இருக்கின்றன. இங்கே B&C மில், 2000 டிசம்பருக்குள்ளே திறக்கப்படும் என்று சொல்லி முதலமைச்சரவர்கள் 12 (3) செட்டில்மெண்ட் ஒப்பந்தம் செய்யப்பட்டது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இருந்தாலும்கூட அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் பல்வேறு ஆலைகள், மேட்டூர் பேர்ட்சில் மில் போன்று தமிழ்நாட்டிலே பல்வேறு ஆலைகள் மூடிய ஆலைகளாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் திறந்து அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

என்னுடைய தொகுதியில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது, தருமபுரி மாவட்டத்தில் கொண்டுவரப்படவேண்டிய திட்டம். மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த மாவட்டத்து மக்கள் எல்லாம் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே வாக்குறுதி அளித்தமாதிரி, என்னுடைய தொகுதியில் ஒரு தொழிற்சாலை கொண்டுவருவதற்கு முன்வரவேண்டும். இப்படிப் பல்வேறு கோரிக்கைகளை, தொகுதியினுடைய மேம்பாட்டுக்காகச் செய்ய வேண்டும் என்று சொல்லி, அவற்றை எழுத்து மூலமாகவும் கொடுக்கிறேன் என்று தெரிவித்து, இந்த அளவில் ஆளுநர் உரை என்பது வரவேற்கக்கூடிய வகையிலே சிறந்த வகையிலே அமைந்திருக்கிறது என்று சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆளுநர் உரையை வரவேற்று அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையைப் பொறுத்த அளவிலே பார்த்தால் தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினைகள் பற்றி எந்தவித முறையிலும் குறிப்பிடப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க செய்தி. இன்று தமிழகத்திலே இருக்கிற மக்களைப் பொறுத்தவரையிலே, பெருவாரியான மக்கள் விவசாயிகள். அந்த விவசாயிகள் இப்பொழுது மிகப்பெரிய சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே நம்முடைய நடுத்தர மக்களைப் பொறுத்தவரையில், விலைவாசி என்பது

அந்த அளவிற்கு இருக்கிறது. உதாரணமாக, ரப்பருக்கு விலை இல்லை. அதே நேரத்திலே டயருடைய விலை குறையவில்லை.

இப்பொழுது நடுத்தர மக்கள் கடுமையான விலைவாசியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகளில் வந்திருக்கிற விவரங்களை வைத்துப் பார்த்தால், பருத்தியினுடைய விலை ரூ.2500-லிருந்து இன்றைக்கு 800 ரூபாய்க்கு வந்திருக்கிறது. அதேபோல, நெல் 650 ரூபாயில் இருந்தது. 350 ரூபாய்க்கு வந்திருக்கிறது. நிலக்கடலை ரூ.1200-க்கு இருந்தது, 460 ரூபாய்க்கு வந்திருக்கிறது. ரப்பர், 60 ரூபாயில் இருந்தது, 23 ரூபாய்க்கு வந்திருக்கிறது. அதேமாதிரி தேங்காய், 8 ரூபாய்க்கு இருந்தது, இன்றைக்கு 2 ரூபாய்க்கு வந்திருக்கிறது. தேயிலை 19 ரூபாயில் இருந்தது, இன்றைக்கு 5 ரூபாய்க்கு வந்திருக்கிறது. காப்பி 58 ரூபாயில் இருந்தது 30 ரூபாய்க்கு வந்திருக்கிறது. அதேமாதிரி மிளகாய், 2,200 ரூபாயில் இருந்தது இன்றைக்கு 1,300 ரூபாய்க்கு வந்துவிட்டது. நம்முடைய தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிற தேனுக்குக் கூட இன்றைக்கு விலை கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு இன்றைக்கு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கரும்பு விவசாயிகள் நிலையும் அதுதான்.

ஆனால் அதையெல்லாம் இந்த ஆளுநர் உரையில் கண்டு கொள்ளாமலேயே இருக்கிறது. அதேபோன்று இன்னொரு பக்கத்திலே அவர்கள் என்ன சொல்கிறார்கள்? இதையெல்லாம் பார்ப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழு (High Level Committee) அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ஆளுநர்தான் கடைக்கு எல்லாம் வரமாட்டார்கள். ஆனால் இந்த நாட்டில் இருக்கிற ஆளும் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் கடைக்கு வராமலா இருக்கிறார்கள்? இவர்களா இந்த விலையெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று எழுதிவைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களைப் பாதுகாப்பது சம்பந்தமாக தமிழக அரசு என்ன செய்கிறது அல்லது என்ன திட்டம் வைத்திருக்கிறது என்று இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை.



அடுத்து, தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், மிகப்பெரிய தொழில் நெருக்கடி இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். திரு. ஜி.கே. மணி அவர்கள் கூடச் சொன்னார்கள். பின்னி மில் திறக்கப்படவில்லை என்று சொன்னார்கள். 1999 ஆம் ஆண்டு 12(3) ஒப்பந்தம் போட்டார்கள், திறக்கப்படும் என்று. திறக்கவில்லையே? அதைப்போல சேலம் உருக்காலை பற்றி இங்கே பேசப்பட்டது. இங்கே இந்த அவையிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதற்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று, Standard Motor மோட்டார் நிறுவனம். அது சம்பந்தமாக என்ன நிலை இன்று? அது நாடறிந்த உண்மை. அதேபோன்று கைத்தறித் தொழிலாளர்களும், விசைத்தறித் தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேயிலை, இரப்பர் போன்ற தோட்டங்கள் இன்றைக்கு அனேகமாக மூடுவிழா என்ற நிலைமையைப் பெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு Industan Photo Film நிறுவனம். நம்முடைய ஆசியாவில் இருக்கிற மிகப் பெரிய ஸ்தாபனம். இதேபோன்று சீனாவில் இருக்கிற ஒரு Photo Film நிறுவனத்துக்கு நெருக்கடி வந்த நேரத்தில், அந்த நாட்டில் இருக்கிற அரசு என்ன பாதுகாப்பு கொடுத்து அந்த ஸ்தாபனத்தை பாதுகாத்தார்களோ அந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் இங்கே தயாராக இல்லை.

பிற்பகல் 12-55

உலக மயம், இதன் விளைவாக இன்றைக்கு நம்முடைய மீன்பிடித் தொழிலாளிகள் மீன் பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு, பகாசுர கம்பெனிகளுக்கு உரிமம் கொடுத்ததால் இன்றைக்கு மீன்பிடித் தொழிலே சின்னாபின்னமாகி இருக்கிறது. சிறு தொழில்கள் எல்லாம் நொறுங்கிக் கிடக்கின்றன. கோவை மாவட்டத்திலே போய்ப் பார்த்தால் சிறு தொழில்கள் எல்லாம் நொறுங்கிக் கிடக்கின்றன. இவற்றை எல்லாம் பாதுகாப்பதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? என்ன திட்டம் வைத்திருக்கிறது என்று ஆளுநர் உரையில் அலசிப் பார்த்தால், பார்க்க முடியவில்லை.

அதேபோல, இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Software, TIDEL Park- பொறுத்த அளவில் பெரிய அளவிற்கு இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. Software-ஐ வரவேற்கிறோம். ஆனால், அதனால், எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கப்போகிறது? பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தால்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று அரசியல் சட்டத்திலே 292-வது வகுப்பை இன்றைக்கு கையடக்கக்கூடிய முறையிலே அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். அதாவது, Responsibility and Budget Management Bill, 2000 என்பது மாநில அரசினுடைய உரிமையில் கை வைப்பதாகும். இதை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிற மாதிரி நமக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்படி நாம் ஒரு பக்கத்திலே அரசியல் சட்டத்திலே திருத்தங்களைப் பொறுத்த அளவிலே, சொல்கிற நேரத்திலே இப்படிப்பட்ட மாநில அரசினுடைய உரிமைகளில் கை வைக்கிறார்கள் என்று சொன்னால், சட்டங்களைப் பொறுத்தவரையிலே—இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்—எதையும் இன்றைக்குச் சொல்லவில்லை. அதேபோன்று நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், பாரதிய ஜனதா கட்சியில் உள்ள தொண்டர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, திருநெல்வேலியில் நடந்த அந்தக் கொலை வழக்கிலே காவல் துறையே இன்று அதை திசை திருப்பக்கூடிய முறையிலே, அதாவது மைதீன் பாட்சா என்பவர்தான் கொலை செய்தார் என்று அவரை இம்சைப்படுத்தி சொல்ல வைக்கக்கூடிய அளவுக்கு இப்போது காவல் துறை நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலமைச்சருடைய அறிவிப்பைப் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எனவே, அங்கே உள்ளூரிலே இருக்கிற காவல் துறை விசாரிப்பதைத் தவிர்க்கின்ற வகையில் சி.பி.சி.ஐ.டி விசாரணை அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன். (குறுக்கீடு) அதுதான் முடிந்துவிட்டது. இன்னும் 3 பேர் பேச வேண்டும். 10 நிமிடங்கள்தான் நீங்கள் கேட்டீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இந்த அரசு Labour Welfare Board என்ற முறையிலே நல வாரியங்களை தொழிலாளர்களுக்காக அமைத்து இருக்கிறது. ஆனால் இன்று அதை குட்டை குழப்பக்கூடிய முறையிலே திட்டத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்று அது ஆளுங் கட்சிக்கு ஆதாயம் தேடுகின்ற முறையிலே மாற்றப்பட வேண்டும் என்ற அக்கறையில் அதிலே பல குழப்படிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்போது என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அதற்காக Social Security Fund



உருவாக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், ஏற்கெனவே 20 ரூபாய் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களால் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அறிவிப்பு வந்து இருக்கிறது. அந்தப் பணமெல்லாம் என்ன ஆனது? ஏற்கெனவே அந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் பாதுகாப்பு என்ன ஆனது? நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இந்த அமைப்பு சாரா வாரியங்களுக்கான, தொழிலாளர்களுக்கான வாரியமே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக, இதற்கு முன்பு செயல்பட்டு வந்த கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியத்திலே இருந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 25,000 பேர்தான், இருந்த தொகையே சுமார் 25 இலட்சம்தான். ஆனால் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகுதான் 164 அமைப்பு சாரா தொழில்கள் இதிலே சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவர்களுக்காக 12 வாரியங்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்களையும் சேர்த்து 12 வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொழில்கள் 64, வாரியங்கள் 12. அதிலேகூட, இந்தத் தொழில்களைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, முதலிலே குளறுபடி இருந்தது. 20 ரூபாய் மாதா மாதம் கட்ட வேண்டும் என்றால் அதிலே எவ்வளவு பிரச்சினை இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அதனால்தான், எல்லா தொழில் சங்கத்திலே இருக்கிற, வாரியத்திலே இருக்கிற இயக்குநர்களை எல்லாம் கூப்பிட்டுப் பேசி, அவர்கள் மாதா மாதம் 20 ரூபாய் கட்டுவது பிரச்சினையாக இருக்கிறது, அதுவும் வங்கியிலே கட்டுவது ரொம்பப் பிரச்சினையாக இருக்கிறது. அதனால் 20 ரூபாய் கட்டுவது வேண்டாம் என்று சொன்ன பிறகுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து ஒரே முறையாக 100 ரூபாய் கட்டினால் போதும் என்று சொன்னார்கள். நீண்ட காலமாகக் கட்டினார்கள் என்று சொன்னீர்கள், பாருங்கள். நீண்ட காலமாகக் கட்டவில்லை. அதுவும் கலைஞர் அவர்கள் வந்த பிறகுதான், 1998-லே இருந்துதான் அந்த 20 ரூபாய் கட்டலாம் என்ற சட்டமே வந்தது. அந்தமாதிரி 20 ரூபாய் கட்டி ரொம்ப பேர் discontinue பண்ணிவிட்டுப் போய் விட்டார்கள். அதனால் அவர்களுக்கு எந்தப் பலனும் இல்லாமல் போய் விடுகிறது.

கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, Information Technology, TIDEL Park போன்றவற்றால் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கப்போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இன்றையதினம், இந்தியாவில் இருக்கக்கூடிய பல மாநிலங்கள் இவற்றையெல்லாம் பார்த்து பொறாமைப்படுகின்றன. ஏனென்று கேட்டால், Information Technology, Computer Science, Electronics and Communication போன்ற துறைகளிலே தமிழ்நாடு முன்னேறிவிட்டால் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகப் பொருளாதாரம் நம்முடைய மாநிலத்திற்கு வரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிற நேரத்தில் மற்ற துறைகளுக்கும் உதவக் கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கிறது. Technology வளர்வது ஒரு நாட்டினுடைய நன்மைக்கே தவிர, அதனால் அந்த நாடு கெட்டுவிடப் போவதில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் அமெரிக்காவைப் பற்றிச் சொன்னார்கள். அமெரிக்காவில்கூட இன்றைக்கு தொழிலாளி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றான் என்ற விவரங்கள் பத்திரிகையிலே வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே அமெரிக்காவைச் சுட்டிக்காட்டுவதாலே ஒன்றும் பயன் இல்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இன்று Software-லோ அல்லது Technology Development-லோ நாடு முன்னேறுவதைப் பொறுத்த அளவிலே நாங்கள் பெருமைப்படுகிறோம். ஆனால், மறு பக்கத்திலே பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய தொழிலாளிகள் இன்றைக்கு வேலையற்றவர்களாக மாற்றப்படுகிறார்களே, அவர்களைப் பாதுகாப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது? அது இல்லை.

இன்று, மத்திய மாநில அரசுகள் Globalisation பற்றிச் சொல்கிறார்கள். இங்கே ஏற்கெனவே Globalisation பற்றி ஒரு உறுப்பினர் கேள்வி கேட்டார். நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சீனாவில் Globalisation உள்ளது. இன்றைக்கு சீனா Globalisation-ஐ ஏற்றுக்கொண்டு, அந்தப் பாதையிலே, அவர்கள் செல்கிறார்கள். ஆனால், அவர்களுடைய terms-லேதான் மற்றவர்கள் நடந்துக் கொள்ள முடிகிறதே தவிர—இந்தியாவிலேகூட பல மாநில அரசுகளும் அதைத்தான் செய்கின்றன. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஏழை எளிய மக்கள் பாதிக்கக்கூடிய முறையில்



அதை அமல்படுத்தக்கூடாது என்பதை நோபல் பரிசு வாங்கியிருக்கிற அம்ரித்யா சென் சமீபத்திலே பேசி அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆகவே Globalisation-ஐப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மத்திய, மாநில அரசுகள் தயாரில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

மாநில சுயாட்சியைப் பொறுத்த அளவில் அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டுவருவதற்கு இந்த அரசு வலியுறுத்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்லவருகிறேன் என்றால், அந்தத் திருத்தங்களை ஆதரிப்பதாகச் சொல்கிறீர்களே, அதுபோல, இந்தச் சட்டம் சம்பந்தமான உங்களுடைய நிலை என்ன? அதாவது, மின்சாரம் சம்பந்தமாக 2000 வருடத்தில் அவர்கள் 'மின்சார மசோதா 2000' என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். என்ன நிலை? நீங்கள் அதை ஆதரிக்கிறீர்கள். அதேபோன்று இன்னொரு சட்டம்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று பொதுவாகச் சொல்லக்கூடாது. எங்கே ஆதரித்திருக்கிறோம்? நாங்கள் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, உலக வங்கியினர் இங்கே வந்த நேரத்திலேகூட அந்தத் திட்டத்தைத் தமிழக அரசாங்கம் இப்போது அமல்படுத்துவதாக இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்லி, அதனாலே உலக வங்கி 'உங்களுக்குக் கடன் கொடுக்க முடியாது' என்று அவர்கள் மறுத்து, 'நீங்கள் கடன் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, எங்கள் நாட்டிலே உள்ள விவசாயிகளைக் காப்பாற்றுவதுதான் எங்களுடைய முதல் கடமை' என்று சொல்லியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மின்சார மசோதா 2000 நாடாளுமன்றத்திலே தாக்கல் செய்யப்படுகிற நேரத்திலே நீங்கள் எதிர்ப்பீர்களா, ஆதரிப்பீர்களா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்தச் சட்டம் ஏற்கெனவே தாக்கல் செய்யப்படுவதாக இருந்து, மத்திய அரசாங்கமே மாநில அரசாங்கங்களிலே இருக்கக்கூடிய எதிப்பைத் தெரிந்துகொண்டு, அதை ஒத்திவைத்திருக்கிறது. அது மீண்டும் வருகின்ற நேரத்தில், தி.மு.க. வினுடைய நிலைமையை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளலாம்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா விசுவநாதன். (குறுக்கீடு) திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

அதனால் பலன் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற உணர்வோடுதான், 20 ரூபாய் கட்டியிருப்பவர்களுக்கு அந்தத் தொகை திருப்பித் தரப்படும் என்றும் கலைஞர் அவர்கள், முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதிலே எந்தவிதமான பாதிப்பும் கிடையாது. அந்த 20 ரூபாய் கட்டியவர்கள்கூட, 100 ரூபாய் கட்டி அதிலே புதிய உறுப்பினர்களாகப் புதுப்பித்துக்கொள்ளலாம். கட்டிய பணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். அதிலே பல சலுகைகளும் அறிவிக்கப்பட்டிருப்பதிலே நிதி பற்றியும் சொன்னீர்கள். நிதியைப் பொறுத்தவரையிலே கலைஞர் அவர்கள், ஏதோ சொல்லிவிட்டுப் போவது கிடையாது. பல பேருக்குச் சந்தேகம். 100 ரூபாய் கொடுத்தால் இவ்வளவு சலுகைகள் கிடைக்குமா என்றுகூட கேட்கிறார்கள். கலைஞர் சொல்வது, Employers' Fund என்று சொல்லி, யார் அமைப்பு சாரா தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துகிறார்களோ அவர்களே அதற்கு நிதி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் .3 சதவிகிதத்தை உயர்த்தியதுகூட கலைஞர்தான் கொண்டு வந்தார்கள். அதன்மூலமாக இப்போது கட்டுமானத் தொழிலாளர்களுடைய நிதியில் 28 கோடி ரூபாய் இருக்கிறது. அதிலே அவர்கள் கட்டியது குறைவுதான். 25 ரூபாய்தான் கட்டுமானத் தொழிலாளர்கள் கட்டுகிறார்கள். அதிலே நிதி எப்படி வந்தது என்று சொன்னார்கள். Employers கட்டடம் கட்டுகிற யாராக இருந்தாலும் .3 சதவிகிதத்தை வாரியங்களுக்குக் கொடுக்கிறார்கள். குறிப்பாக, அரசாங்க கட்டடங்களாக இருந்தாலும் சரி, தனியார் கட்டடங்களாக இருந்தாலும் சரி, குறிப்பாக நகராட்சியிலே தனியார் கட்டடங்கள், டவுன் பிளானிங் பெர்மிஷன் கேட்கும்போதே அந்த 0.3 சதவிகிதத்தை எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பி விடுகிறார்கள்.

பிற்பகல் 1-05

அதனால்தான் 28 கோடி ரூபாய் கலைஞர் ஆட்சி வந்த பிறகுதான் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிதி உருவாகி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு நிதி உருவாக்குவதிலே கலைஞர் அரசு அதையெல்லாம் கரெக்ட் செய்துவிட்டுத்தான் சலுகைகளை அறிவித்திருக்கிறது. சரிசெய்துவிட்டுத்தான் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே எந்தவிதமான குளறுபடியும் கிடையாது. இந்தச் சட்டமன்றத்திலேயும்



அதற்கான சட்டமுன்வடிவுகள் வருகின்றன. எந்தக் குளறுபடியும் இல்லாமல் முழுமையாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இருக்கிற 25 நிமிடங்களில் இன்னும் 3 உறுப்பினர்கள் பேசவேண்டும். நீங்கள் கேட்டதே 10 நிமிடங்கள்தான். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. விசுவநாதன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. விசுவநாதன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் மணி அடித்த பிறகு, நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. விசுவநாதன், நீங்கள் பேசுங்கள். இல்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டி வரும். (குறுக்கீடு) விசுவநாதன் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டி வரும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியினுடைய முடிவுரையாக, இறுதி கவர்னர் உரையாக அமைந்துள்ள, இந்த ஆளுநர் உரையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். இந்த கவர்னர் உரையைப் பொறுத்த அளவிலே, சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே என்ன சொல்லப்பட்டதோ அதையே மீண்டும் 'சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையைப் போல 'அரைத்த மாவையே அரைத்ததைப் போல' இன்றைக்கு மீண்டும் சில வார்த்தைகளை மட்டும் மாற்றிவிட்டு அதே உரையை திரும்பக் கொடுத்திருக்கிறார்கள். இந்த உரையிலே சாதனைகள் ஏதுமில்லை. மிஞ்சியிருப்பது வேதனைகள்தான். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான தொலைநோக்குப் பார்வை இந்த கவர்னர் உரையிலே எதுவுமில்லை. அந்தக் காலத்திலே அண்ணா சொன்னார். 'சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகள் நெஞ்சங்களிலே விபரீத எண்ணங்கள்' என்று பேரறிஞர் அண்ணா சொன்னது இந்த நேரத்திலே என் நினைவுக்கு வருகிறது. அந்த வகையிலே படித்த

இளைஞர்களும், கிராமங்களில் இருக்கிற சாதாரண விவசாய கூலித் தொழிலாளர்களும், சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் வாழ வழியின்றி வேலைவாய்ப்பின்றி தினந்தோறும் செத்து பிழைத்துக் கொண்டிருக்கிற அவல நிலையில் இருக்கிற தமிழக மக்களுடைய நிலையை மேம்படுத்துவதற்கு தொலைநோக்குப் பார்வை எதுவுமில்லை. திட்டங்கள் எதுவுமில்லை. ஆனால் மாறாக, வழக்கமாக நீங்கள் சொல்கிற சில விளம்பர திட்டங்களை மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறீர்கள்.

உங்களுடைய நட்சத்திர திட்டங்கள் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற, உழவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற உழவர் சந்தை. இன்றைக்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்குச் சரியான கட்டுப்படியான விலை இல்லை. இடுபொருட்களின் விலை ஏறியிருக்கின்ற சூழ்நிலையில் விவசாயத்தைக்கூட தொடர்ந்து செய்ய முடியாத அவல நிலையில் இருக்கிற விவசாயிகள் இந்த ஆட்சியின்மீது அதிருப்தியாக இருக்கிறார்கள் என்று அறிந்துகொண்ட இந்த ஆட்சி அவர்களை ஏமாற்றுகின்ற வண்ணம் இப்போது உழவர் சந்தை என்ற போலியான விளம்பரத் திட்டத்தைக் கொண்டு வந்து உழவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. உள்ளபடியே உழவர்களுக்குக் கிடைக்க வேண்டிய விவசாயக் கடன் தள்ளுபடி அல்லது குறைந்தபட்சம் வட்டித் தள்ளுபடியையாவது இந்த அரசு கொடுத்திருக்க வேண்டும். ஆனால் நாங்கள், எதிர்க்கட்சிகளெல்லாம் ஆரம்ப காலத்திலேயிருந்து வலியுறுத்தி வந்தாலும் அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்க மறுக்கிறது. அதேபோன்று விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற துணைத் தொழிலான பால் உற்பத்தி மற்றும் கோழி வளர்ப்பு போன்ற துணைத் தொழிலுக்கும் உரிய உதவிகளை இந்த அரசு செய்திடவில்லை.

மாறாக, கொள்முதல் செய்த பாலுக்கு உரிய விலையை உரிய நேரத்தில் இந்த அரசு கொடுக்கவில்லை. இப்படி ஏழைகளையும், விவசாயிகளையும் ஏமாற்றிக் கொண்டும், அதேபோன்று சாதாரண பொதுமக்களைக்கூட இப்போது ஏதோ வருமுன் காப்போம் என்ற விளம்பர திட்டத்தைக் கொண்டு வந்து, ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வருமுன் காப்போம் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கூட ஓர் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஏதோ இந்தத் திட்டத்தை இவர்கள்தான் புதிதாகக் கொண்டு வந்ததைப் போலவும், ஏதோ தி.மு.க. ஆட்சியில்தான் இலவச மருத்துவ முகாம்களைக் கண்டுபிடித்ததைப்



போலவும் ஒரு போலியான தோற்றத்தை, உண்மைக்கு மாறான தகவலை அறிக்கையின் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டம் கொண்டு வந்து அமல்படுத்தப்பட்டு பல்வேறு கிராமங்களிலே 1992 ஆம் ஆண்டிலேயே இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு அதற்கடுத்தபடியாக அந்தத் திட்டம் படிப்படியாக...

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏதோ வரும்முன் காப்போம் திட்டம் நாங்கள் கண்டுபிடித்ததைப்போல பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று நாட்களாக முதலிலே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சொன்னார். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 1991 முதல் 1996 வரை தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க ஆட்சி நடந்த காலத்தில் ஏழை மக்களுக்காக நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களில் 2 ½ கோடி மக்கள் பங்கேற்றனர். இது உண்மையா? (குறுக்கீடு) இருங்கள். எங்கே அந்த முகாம்கள் நடைபெற்றன? நாங்கள் நடத்துகிற முகாம்களில் Cardiologist என்ற மருத்துவர் போகிறார். கண் மருத்துவர் போகிறார். அதைப்போல 15 சிறப்புப் பிரிவுகளிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் போகிறார்கள். வெறும் எம்.பி.பி.எஸ். டாக்டர் அல்ல. அவர்களோடு 25 நர்சுகள் போகிறார்கள். 60 பேர் ஒரு முகாமிற்குச் செல்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலேயும் ஆயிரத்திற்குக் குறையாமல் நோயாளிகள் வருகிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் இலவசமாக மருந்துகள் வழங்கப்படுகின்றன. இப்படிப்பட்ட ஒரு முகாம் முன்னாள் ஆட்சியில் நடைபெற்றிருந்தால் இன்றைக்கு நான் சவால் விட்டு சொல்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது, அதை நிரூபித்தால் நான் அமைச்சர் பொறுப்பிலே இல்லாமல் போய்விடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சவாலை நாங்கள் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். எண்ணிக்கையை வைத்துப் பிரச்சினையை திசை திருப்பக் கூடாது. இந்த முகாமே நடத்தவில்லை என்பது மாண்புமிகு அமைச்சருடைய வாதம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** என்னுடைய பதிலே நீங்கள் முகாம் நடத்தவில்லை-என்பதுதான் என்னுடைய வாதத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசினால் எப்படி? நீங்கள் பத்தாயிரம் முகாம்கள் நடத்தியதாக அறிக்கை விட்டிருக்கிறீர்கள். 2½ கோடி மக்கள் அதிலே போய் பயனடைந்ததாக முன்னாள் முதல்வர் சொல்லியிருக்கிறார். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. நீங்கள் நடத்திய முகாம்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமல் தமிழ்நாட்டிலுள்ள கிராமத்து மக்களுக்குத் தெரியாமல் எங்கேயாவது நடந்ததா, எனக்குத் தெரியாது. ஆனால், நீங்கள் சொல்கின்ற முகாம்கள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை நான் விளக்குகிறேன்.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும் இரண்டு மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒரு மருத்துவரை ஒரு கிராமத்திற்கு அனுப்பி முகாம் நடத்தியிருக்கிறீர்கள். அது முகாம் அல்ல. அது பரிசோதனை. நாங்கள் நடத்துவது முகாம். அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு பரிசோதித்து ஏதாவது தீராத நோய் இருக்குமானால் மேல்மட்ட மருத்துவமனைக்கோ, மாவட்ட மருத்துவமனைகளுக்கோ, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கோ அனுப்பி அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வது முதற்கொண்டு தொடர் சிகிச்சை அளிக்கிறோம். அப்படிப்பட்ட முகாம்கள் நீங்கள் நடத்தவில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேனே தவிர எம்.பி.பி.எஸ். படித்த ஒரு டாக்டரை, இரண்டு டாக்டர்களிலே ஒருவரை இன்னொரு ஊருக்கு அனுப்பி பரிசோதித்தோம் என்பதற்குப் பெயர் முகாம் அல்ல.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் பிரச்சினையை திசை திருப்பத்தான் முயற்சிக்கிறார்கள். ஏதோ தான் தவறாக சொல்லிவிட்ட செய்தியை மறைப்பதற்காக இப்படிப்பட்ட மீண்டும் தவறான தகவலை, விளக்கத்தை தந்துகொண்டிருக்கிறார் என்பதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடம் இந்த முகாம் பற்றி சொல்லிவிடுகிறேன். இந்த முகாம்கள் ஏதோ 1992-லேயே அவர் தொடங்கியதைப்போல சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த முகாம்களைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் முன்பு இருக்கிறபோதே கண் அறுவை சிகிச்சை முகாம் எல்லாம் ஒவ்வொரு பகுதியிலேயும்



நடத்தப்பட்டிருக்கிறது. அதுபோன்ற முகாம்கள் காலம் காலமாக நடைபெறுவதுதான். வழக்கமான முகாம்களை அவர் நடத்தியிருக்கலாம், அவ்வளவுதானே தவிர, இது ஒரு திட்டம். இந்த திட்டத்தைக் கொண்டு வந்தவர், வருமுன் காப்போம் திட்டம் என்று சொல்லி அதிலே experts-களை கொண்டு போய் நடத்துகிற முகாமாக, இந்தத் திட்டத்தை அறிவித்தவர் முதல்வர்தான். ஆகவே, முகாம்கள் நடந்திருக்கலாம். அது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்கள் காலத்தில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் நடத்துகின்ற வரும்முன் காப்போம் திட்டம் அம்மையார் கண்டுபிடித்தது, அவர்கள் ஆட்சியிலே நடந்தது என்று சொல்லி ஓர் அறிக்கையை விட்டிருக்கிறார் அவர். எப்போது என்றால் இந்தத் திட்டம் அறிவித்தவுடனே அம்மையார் அறிவித்தார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அ.தி.மு.க. தமிழ்நாட்டில் நாங்கள் நடத்த இருந்தோம், அதை சி.ஐ.டி. மூலமாக தெரிந்துகொண்டு கருணாநிதி உடனடியாக ஆட்சி மூலம் அறிவித்துவிட்டார் என்று சொன்னாரே, அதற்கு என்ன பெயர்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நாங்கள் எம்.ஜி.ஆர். பிறந்த நாளில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு பண்ணியதை நீங்கள் முதலிலே கொண்டு வந்திருக்கலாம். ஆட்சிக்கு வந்தவுடனே உழவர் சந்தை, நமக்கு நாமே, சமத்துவபுரம் எல்லாம் கொண்டு வந்தீர்கள். அப்போது உங்களுக்கு எண்ணம் இருந்திருந்தால் நீங்கள் அப்போதே கொண்டு வந்திருக்கலாம். நாங்கள் கொண்டு வந்ததைப் பார்த்து நாங்கள் செய்வது தெரிந்து அதற்குப் பின்னால், காப்பி அடித்து, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதேமாதிரி மருத்துவ முகாம் நாங்கள் நடத்தவில்லையென்று சொல்கிறீர்கள். மருத்துவ முகாம் எங்களுடைய ஆட்சியிலே 10 ஆயிரம் மருத்துவ முகாம் நடத்தியிருக்கிறார்கள். நேற்று விளக்கமாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் நடத்தவேயில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். இதைத்தான் நாங்கள் மறுக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதாவது சுந்தரம் அவர்கள் சொல்வதிலேயிருந்து எனக்கு ஒன்று நன்றாகப் புரிந்துவிட்டது. எம்.ஜி.ஆர்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் நிரூபித்து இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் எந்த குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டதாக தீர்ப்பை வரையவில்லை; நிரூபிக்கப்படவில்லை, ஆதாரம் இல்லை, போதுமான சான்று இல்லை என்றுதான் தெரிவித்துள்ளது. எல்லாவற்றையும்விட அவர்கள் போற்றுகிற தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க என்னிடத்தில் ஆதாரம் இல்லை; எனக்குக் கிடைத்த தகவலைத்தான் நான் தந்து இருக்கிறேன் என்றுதான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காலத்தில், சர்க்காரியாவின் முன்னர் தன்னுடைய வாக்குமூலமாகத் தெரிவித்து இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு. (குறுக்கீடு) இன்னும் இருக்கிற 12 நிமிடத்தில் இரண்டு பேர் பேச வேண்டும். ஏற்கெனவே திரு. விசுவநாதன் அவர்கள் பெயர், பட்டியலிலே இல்லை. நீங்கள் இடையிலே வந்து கேட்ட பிறகு, உங்களுக்கு நேரம் ஒதுக்கினேன். நீங்கள் 12 நிமிடங்களுக்கு மேலே பேசிவிட்டீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பட்டியலிலே உங்கள் பெயரே இல்லை. நீங்கள் வந்து கேட்ட பிறகு நான் அனுமதி கொடுத்து இருக்கிறேன். திரு. சுந்தரத்தை பேசச் சொல்லவா? (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** குறுக்கீடுகள் வந்துவிட்டன. ஒரு நிமிடம் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களும் பேசினீர்கள்; அவரும் பேசினார். எல்லாவற்றுக்கும் சேர்த்து அமைச்சர் பதில் சொன்னார்கள், உட்காருங்கள். திரு. அப்பாவு பேசட்டும்.



**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன் அவர்கள் நேரத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். ஏற்கெனவே பல முறை பேசிவிட்டீர்கள். திரு. அப்பாவு பேசுங்கள்.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது, . . . . . (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மொத்தம் 10 நிமிடங்கள் ஆகி இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கிறீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், என்ன ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கிறோம்? நான் சொல்வதைக் கேளுங்கள். பேசுவோர் பட்டியலில் திரு. விசுவநாதன் பெயரே இல்லை. அவர் வந்து கேட்ட பிறகு நான் 10 நிமிடத்தில் பேசி முடியுங்கள் என்று சொல்லி அனுமதித்தேன். அவர் அதற்கு மேல் அதிகமாக 2 நிமிடம் பேசி இருக்கிறார். ஏற்கெனவே திருப்பித் திருப்பி சர்க்காரியா, சர்க்காரியா என்று சொல்கிறீர்கள். சர்க்காரியா கமிஷனிலே யார் கொடுத்தார்களோ, அவரே இது எனக்கு கிடைத்த தகவல்; சேலத்தில் கண்ணன் கொடுத்தார் என்று சொல்லி பின்வாங்கிவிட்டார். உரையை முடியுங்கள் அதோடு. திரு. அப்பாவு பேசுங்கள். (குறுக்கீடுகள்). திரு. அப்பாவு பேசுங்கள். நான் 1½ மணிக்கு சபையை முடிக்க வேண்டும். இன்னொரு உறுப்பினர் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 1-20

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

பிறந்த நாளையொட்டி நாங்கள் நடத்துவதாக இருந்தோம், அதை நீங்கள் முன்கூட்டியே தெரிந்துகொண்டு நடத்துகிறீர்கள் என்று சொல்வதிலிருந்தே அந்த ஆட்சியிலே அவர்கள் நடத்தவில்லை என்பதை நிரூபிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன் பேசட்டும்; அவருடைய நேரத்தை எல்லாம் திரு. சுந்தரம் எடுத்துக்கொள்கிறீர்கள்; உங்கள் நேரம் கழிக்கப்படும். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆளும் கட்சியாக இருந்தபோது அரசு சார்பில் நடத்தினோம். இப்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும், மக்கள் நலம் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை நடத்துவதற்கு சொல்லி இருந்தோம்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டமே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பிறந்தநாள் இலவச மருத்துவ முகாம் என்பதுதான் அந்தத் திட்டத்தின் பெயர். அந்தத் திட்டத்திலே தமிழகம் முழுவதும் எல்லாக் கிராமங்களிலும் மக்கள் பலர் கலந்துகொண்டு பயனடைந்து இருக்கிறார்கள். இது உங்களுடைய தமிழரசு பத்திரிக்கையில் இருக்கிறது. எடுத்துப் பார்த்துக்கொள்ளுங்கள். அமைச்சர், உண்மையிலேயே, உண்மையான விவரங்களை எல்லாம் தெரிந்துவிட்டு வேண்டுமென்று மறைக்கிறாரா அல்லது அந்த விவரங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் சொல்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் தமிழரசு பத்திரிக்கையையும் பார்த்தேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. முத்துசாமி விடுத்த அறிக்கையையும் பார்த்தேன். அந்த முரண்பாட்டைத்தான் கேட்கிறேன். அவருடைய அறிக்கையிலே, அந்தத் தமிழரசு பத்திரிகையிலே இந்தத் திட்டத்தின் மூலமாக 1 இலட்சத்து 85 ஆயிரத்து 400 பேர் சிகிச்சை பெற்றார்கள் என்று முன்னாள் அமைச்சர்



சொல்கிறார். ஆனால் முன்னாள் முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், 2.5 கோடி மக்கள் அந்த முகாமிலே கலந்துகொண்டார்கள்; 68 இலட்சம் பேர் பயன் பெற்றார்கள் என்று சொல்கிறார். இதிலே முன்னாள் முதலமைச்சர் சொல்வது உண்மையா? முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்வது உண்மையா? இதில் எது உண்மை என்று உறுப்பினர் சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடம் இருக்கிறது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருவரும் சொல்லி இருப்பதில் எந்த முரண்பாடும் இல்லை. இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன. என்பதை ஆதாரப்பூர்வமாக சொல்லி இருக்கிறார்கள். அதை உங்களால் ஆதாரப்பூர்வமாக மறுக்க இயலவில்லை. ஆகவே, அதை நீங்கள் மக்கள் மத்தியிலேயிருந்து திசை திருப்ப முயற்சிக்க வேண்டாம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இங்கு வெளிப்படையான ஊழலற்ற நிர்வாகத்தை நீங்கள் கொடுத்து இருப்பதாகச் சொல்லி இருக்கின்றீர்கள். ஊழலுக்கு என்று— இந்திய அரசியல் வரலாற்றிலேயே, இந்திய மாநிலங்களிலேயே ஊழலுக்கு என்று— ஒரு அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், நீங்கள் சொன்னீர்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டாமா? மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அறியமாட்டார். ஊழல் வழியில் முயற்சித்தவர்களால் அந்த ஊழலில் திளைத்த ஒரு மத்திய அரசு இந்த மாநில அரசை அன்றைக்கு கலைத்தது. அம்முயற்சி தொடங்கினதே, ஊழல் முறையிலேயே, அந்த அரசு ஊழல் செய்தவர்களிடத்திலே ஒரு பேரம் பேசிக்கொண்டு, அன்றைய அரசை கலைத்ததே தவிர, அந்த அரசு கூறிய ஊழல் குற்றச்சாட்டை என்றைக்கும் நிரூபிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மொத்த குறுக்கீடுகளையும் சேர்த்து அவர் 1( நிமிடம்தான் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவரத்தை நான் தெரிவிக்க வேண்டும். ஒவ்வோர் உறுப்பினரும் பேசுகிறபோது பேச்சை முடிக்க வேண்டும் என்று சொல்கிற அதிகாரம், யார் தலைவர் இடத்திலே அமர்ந்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இருக்கிறது. நேரம் என்பது உறுப்பினருடைய உரிமை அல்ல. எந்தக் கட்சியினுடைய உரிமையும் அல்ல. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உங்களுடைய பேச்சை முடியுங்கள் என்று சொல்கிற அதிகாரம் தலைவருக்கு இருக்கிறபோது, உறுப்பினர் நேரம் கேட்கலாமே தவிர, உரிமை என்று கருதிக் கொண்டு திரு. சுந்தரம் அவர்கள் பேசுவது இந்த அவையினுடைய மரபு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, பேசுங்கள். (குறுக்கீடு).

**திரு. இரா. விசுவநாதன்:** நான் 1 நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 14 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். என்னிடம் 10 நிமிடங்கள் என்று கேட்டுவிட்டு போனீர்கள். திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர் பேசுவதை நிறுத்திவிட்டு உங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டது. (குறுக்கீடுகள்) திரு. இரா. விசுவநாதன், நீங்கள் 14 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் 1½ மணிக்கு சபையை முடிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** யார், யார் எவ்வளவு நேரம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் நின்று கொண்டே இருந்தனர்.)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தமாதிரி அனைவரும் எழுந்து நிற்பது நன்றாக இல்லை. யாராவது ஒருவர் நின்றுகொண்டு பேசுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, சபையை நடத்துவது என்பதற்குத்தான் நேரத்தை adjust பண்ணி, துணைத் தலைவரோ, தலைவரோ அவ்வப்போது நிலைமைக்கேற்ப ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்கள் கொடுத்து ஒருவர் பேச்சை முடிக்க வேண்டும். ஆனால் ஒரு கால கட்டத்திலே முடிக்கவில்லையென்றால் மற்ற உறுப்பினர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது. ஏனென்றால் இன்றைக்குப் பேசுவதாக இருக்கிறவர்கள் பலர் பேசமுடியாத நிலைமை ஏற்படும். அதனாலே Priority right அந்தத் தீர்மானிக்கும் உரிமை சபாநாயகருக்குத்தான். ஆகவே, யாரும் நேரம் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று வாதாட முடியாது. வாய்ப்பு இருக்குமானால், நேரம் வழங்குவதில் எங்களுக்கு ஒன்றும் தடையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இப்படியே 4 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. அப்பாவு, பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுவோர் பட்டியலிலே திரு. இரா. விசுவநாதன் அவர்களுடைய பெயரே இல்லை. (குறுக்கீடுகள்) இதேமாதிரி பேசி, பேசி நேரத்தை வீணாக்குகிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆவேசப்படவேண்டாம். உட்காருங்கள். நான் சொல்கிறேன். அதற்குப் பிறகு பேரவைத் தலைவரிடத்தில் 10 நிமிடங்கள் போதும் என்று சொல்லி ஏற்றுக் கொண்டு வந்தார்கள். அவர் பேசியது 14 நிமிடங்களுக்கு மேல் (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினருக்கு நான் வாய்ப்பு கொடுக்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) நியாயமாக, சரியாகச் சொல்லுங்கள். திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள். உங்களுக்காக, சபையினுடைய நேரத்தை 2 நிமிடம் நீட்டிக்கிறேன். நீங்கள் பேசுங்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு

நன்றி கூறிக்கொள்கிறேன். ஊழல் என்கிறார்கள், சர்க்காரியா என்கிறார்கள், ஒன்றுமே புரியவில்லை. நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் தண்டபாணி அவர்கள் ஊழலை வித்திட்டவர்களே காங்கிரஸ் என்று சொன்னார்கள். அது எவ்வாறு வளர்ந்து புரையோடி, சர்க்காரியா கமிஷன் வரை வந்தாலும்கூட, அப்படிப்பட்டவர்களை தமிழகம் முழுவதும் சந்துபொந்தெல்லாம், காடு மேடெல்லாம் சைக்கிளின் பின்னால் வைத்து தூக்கி, தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து, 1996 ஆம் ஆண்டு இந்தக் கோட்டைக்கு கொண்டு வந்து அமர வைத்தது மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தக் கோட்டைக்கு வந்த பின்பு...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, 1989-லே, அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால், சர்க்காரியா கமிஷன் விசாரணைக்குப் பின்னாலும், 1989-லே நாங்கள் வந்தோமே; அப்போது யார் எங்களை தூக்கி கொண்டு வந்து விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் ஆளுநர் உரையின்மீது பேசுங்கள். நேரத்தை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** பேசி முடித்துக்கொள்கிறேன். அவ்வாறு கரை, காடு மேடெல்லாம் சுற்றி வந்த காரணத்தினால், சைக்கிள் பஞ்சர் ஆனது உண்மைதான். தம்பி புகழேந்தி அவர்கள் சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். சைக்கிள் பஞ்சர்தான் ஆகிவிட்டது. புது டயரும், டியூப்பும் மாட்டி, இந்த 2001-லே புதிய சகாப்தத்தை உருவாக்குவதற்கு ரெக்கை கட்டி பறக்குதய்யா சைக்கிள் என்ற வண்ணம் தலைவர் மூப்பனார் புதிய சகாப்தத்தை உருவாக்குவார் என்பதை தம்பி புகழேந்தி அவர்களுக்கு இந்த நேரத்திலே நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய அறையில் மறைந்த அண்ணா அவர்களுடைய படமும், எம்.ஜி.ஆர். அவர்களுடைய படமும் இருக்கின்றன. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய படம் இருந்திருக்கிறது. இப்போது காணவில்லை. தயவுசெய்து அதையும் மாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான விவரத்தைக் கொடுக்கக் கூடாது. சபாநாயகர் அறையில் சபாநாயகர்களாக இருந்தவர்களுடைய படங்கள்தான் அங்கே இருக்கின்றன. பொதுவான மரபு, சபாநாயகர் அறையில் எல்லா



சபாநாயகர்கள் படங்களும் இருக்கும். வேறு படம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) பொதுவாக சபாநாயகர் படம்தான் அந்த வரிசையில் வைக்கப்படும். மற்றது அவரவர்களுடைய விருப்பமாக இருக்கலாம் (குறுக்கீடு) இந்த அவையிலே காமராஜர் படம் உரிய மரியாதையோடு வைக்கப்பட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

பிற்பகல் 1-25

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மறைந்த அண்ணா அவர்களோ, எம்.ஜி.ஆர். அவர்களோ, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களோ ஒரு போதும் சபாநாயகராக இந்த அவையிலே இருந்தது இல்லை. அவர்களுடைய படங்கள் இருக்கின்றன...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, வைக்க வேண்டிய முறைகளை நான் சொன்னேன். வேறு படங்கள் அப்போதைக்கப்போது இருக்கிற சபாநாயகர் யார் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். அதை ஒன்றும் விழா நடத்தி வைப்பதில்லை என்பதால் நான் அறியவில்லை.

**திரு. மு. அப்பாவு:** எனவே. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய படத்தை, இந்த சட்டமன்றம் முடிவதற்குள் அங்கே மாட்ட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலங்களை உதாரணத்திற்குச் சொல்லும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கேரளாவிலே மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 400 லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கப்படுகிறது. அதுபோன்று தமிழகத்திலும் மீனவர்களுக்கு இலவசமாக மாதம் 300 லிட்டர் மண்ணெண்ணெய் அல்லது 300 லிட்டர் டீசல் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கடற்கரை கிராமங்களான உவரி, கூட்டப்பறை, கூடுதாளை, பெரியதாளை, இடிந்தகரை, கூட்டப்புளி, பெருமணல் ஆகிய பகுதிகளில் தூண்டில் வளைவு கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிடமிருந்தும், நபார்டு வங்கியிடமிருந்தும் கோடிகோடியாக திட்டங்களுக்கு உதவி பெறுகின்ற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கடற்கரை கிராமங்களையும் கண்நோக்கி சுமார் 200 கோடி ரூபாய் பெற்றுக்

தந்தால்போதும், அனைத்து கிராமங்களிலும் தூண்டில் வளைவு கட்டலாம், அதை செய்துதர தவறிவிட்டீர்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் திசையன்விளையிலே ஆரம்பித்துத் தருவதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2-10-2000-லே நம்பியாறு திட்டம் தொடக்க விழாவிலே கூறி இதுவரையில் திறக்கவில்லை. அதை உடனடியாக திறந்துதர வேண்டும். அங்கே திறக்க தவறிவிட்டீர்கள் என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அதைப்போல வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் வேளாண்மைத் துறையிலே விதைகளை கொடுக்கிறோம் என்றால் அந்த விதை முளைக்க வைத்து பயிர் செய்து பலன் எடுக்கிற நேரத்திலேதான் வேளாண்மைத் துறையிடமிருந்து விதைகள் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் தென்னை மரங்களுக்கு நோய் வந்துவிட்டது என்று சொன்னால், உங்கள் விவசாய அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்று, மருந்து வாங்கி அடித்ததில், 4 மரத்திலிருந்த நோயை நாடு முழுவதும் பரபபிவிட்டார்கள், என்ன மருந்து கண்டுபிடித்து, என்ன பண்ணினார்கள் என்று தெரியவில்லை. பல கோடி ரூபாய் செலவழிந்திருக்கிறதே தவிர, அந்த நோயை இதுவரை கட்டுப்படுத்தவில்லை. தக்காளி கூறு வைத்து விற்கிறார்கள்; கத்தரிக்காய் கூறு வைத்து விற்கிறார்கள். தேங்காய் கூறு வைத்து 10 ரூபாய்க்கு 15 தேங்காய் என்று கூறுவது நம்முடைய ஆட்சியிலேதான் நடக்கிறது. ஆகவே விவசாயிகளை நீங்கள் மறந்துவிட்டீர்கள். விவசாயிகளை நீங்கள் மறந்தால், விவசாயிகளும் நம்மை என்ன செய்வார்கள் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல களக்காடு பகுதியில் 2-5-2000-ல் ஒரு புயல் வந்தது. அந்த சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15-5-2000-லே இந்த சட்டமன்றத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நிவாரணம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்த நிமிடம் வரைக்கும் அவர்களுக்கு ஒரு ரூபாய்கூட கொடுக்கவில்லை.

அதுமட்டுமல்ல 2½ ஏக்கருக்கு 4000 ரூபாய் நிவாரணத் தொகை—ஏற்கெனவே நீங்கள் நிவாரணத் தொகை எக்டேருக்கு 4000 ரூபாய் என்று சொல்லி, ஒரு வாழைக்குலை 5 ரூபாய் என்று விற்கும்போது, அந்த 4000 ரூபாய் எனறு அன்றைக்குக் கொடுத்தீர்கள். ஒரு எக்டேர் என்றால் 2500 வாழை போடுவார்கள். அதற்கு 4000 ரூபாய் கொடுத்தால், அவற்றை



அள்ளி வெளியே போடுவதற்குக்கூட காணாது. ஆகவே, நிவாரணத் தொகையை நீங்கள் மாற்றி ஒரு வாழைக்கு குறைந்தபட்சம் 50 ரூபாய் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல அங்கே கணக்கெடுத்த நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் சரியான முறையிலே கணக்கெடுக்கவில்லை. கிட்டத்தட்ட 5 இலட்சம் வாழைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 500 வாழைகளுக்கு குறைவாக ஒடிந்தவர்களை, பாதிக்கப்பட்டவர்களை கணக்கெடுக்கவில்லை. ஆகவே விவசாயிகளுக்கு நீங்கள் வழங்குகின்ற அந்த 4000-ஐ எங்களுக்கு வேண்டாம் என்ற நிலையில் யாருமே இதுவரை வாங்கவில்லை. ஆகவே களக்காடு, நாங்குநேரி பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு வாழைக்கு நிவாரணமாக 50 ரூபாய் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பணியில் இருப்பவர்கள் பாதிப்பதைவிட, retire ஆகிப் போகிறவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். 1-1-1996-லிருந்து 31-3-1998 முடிய retire ஆனவர்களுக்கு பணிக்கொடை 40 சதவீதம்தான் கொடுத்திருக்கிறீர்கள். ஒப்படைப்புத் தொகையில் 40 சதவீதத்தைக் கொடுத்துவிட்டு கேவலம் என்னவென்றால் அவர்களிடம் 100 சதவீதம் பிடித்துவிடுகிறார்கள்

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** அவர்களுக்கு கொடுத்திருப்பதில் 40 ரூபாயைக் கொடுத்துவிட்டு, கடனை திருப்பி வசூல் செய்கின்றபோது 100 ரூபாயாக வசூல் செய்கின்றார்கள். ஆகவே ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கவேண்டிய ஒப்படைப்புத் தொகையில் மீதி இருக்கின்ற 60 சதவீதத்தையும் உடனடியாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேர்மையாக, நல்ல முறையில் இந்தத் துறையை நடத்தி வருகிறார்கள். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் சபையில் இங்கே சொல்வதை அதிகாரிகள் நடத்தவில்லையா? என்னவென்று எனக்குத் தெரியவில்லை. உதாரணமாக 340 அரசாணையின்படி பழைய சர்க்கார் ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் என்று போட்டிருந்தது. நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, 40 மாணவர்களுக்கு

கிட்டத்தட்ட 65 தனியார் சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளில் மட்டும் இன்னும் 5 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். மீதி மூன்றையும் நீங்கள் தருவதாக ஒத்துக்கொண்டீர்கள். அதன்படி உங்களிடம் கேட்டதில், எல்லாம் முடிந்துபோய்விட்டது என்று சொன்னீர்கள். எப்படியும் கொடுத்துவிடுவோம் என்று சொன்னீர்கள். ஆகவே, அந்த 65 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அதை நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இடைநிலை ஆசிரியர்களுடைய தேர்விலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-01-2001) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

17 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின (மத்திய சட்டம் 1/1956) 69-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

18. 1999-2000 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-



## இணைப்பு-I

**(74 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**Honourable Members of the Legislative Assembly,**

I have great pleasure in addressing you at the commencement of the first session of the year 2001. I extend my warm New Year greetings to all of you.

2. This is the concluding Session of the Eleventh Legislative Assembly. In the last five years this House has witnessed many outstanding debates in each of the sessions and has given shape to the progressive policies of the Government. I am happy to congratulate you for your contribution in guiding the Government and ensuring the welfare of the State.

3. The political scene in our country has changed dramatically over the last 50 years. In order to strengthen the unity and integrity of India, this Government will continue to urge that the Constitution should be amended to provide greater autonomy to the States with additional devolution of powers and a federal set up at the Centre.

4. This Government has honoured the vital mandate given by the people of this State for providing a corruption free and transparent administration. The Government has taken appropriate decisions on the recommendations of the committee headed by Justice Ramanujam and has implemented them to prevent corruption in administration. Tamil Nadu is the first State to enact legislation imparting transparency in tender procedures.

5. Maintenance of law and order has been accorded high priority by this Government. It has successfully taken steps to ensure social harmony and peace in the State by holding meetings with the leaders of all political parties and ascertaining their views. Most of the recommendations of the Justice Mohan Committee to prevent caste clashes have been accepted and implemented. As a result of the steps taken by this Government, there has been a sharp decline in the number of persons affected by caste and communal violence in the last two years.

[2001 ஜனவரி 22

6. This Government has successfully maintained law and order by modernizing the police force, collecting information on potential problems and amicably resolving them by taking appropriate steps. The State Human Rights Commission set up to enquire into complaints of human rights violations is functioning effectively.

7. The High Level Committee set up by this Government is monitoring the prices of commodities that are necessary for the daily life of the people such as foodgrains, edible oils, pulses and vegetables. About 1.59 crore families are getting essential commodities at fair prices through the public distribution system. The Government is likely to incur an expenditure of Rs. 1,700 crores towards food subsidy in the current financial year. Tamil Nadu is the only state which provides rice at a subsidized rate of Rs.3.50 per kg. to all sections of the public without any distinction between those living below the poverty line or above the poverty line. Hon'ble Members are aware that the present system of distribution of essential commodities including rice, sugar and kerosene is being continued. To ensure that farmers get a good price for their paddy, this Government is implementing the parallel procurement system for the current Samba season. This is the only State which provides Rs.40 per quintal as incidental charges to farmers over and above the minimum support price fixed by the Central Government.

8. As a result of the precautionary measures taken by the Government, major damages have been averted when Tamil Nadu was hit by cyclones twice in the last two months. Apart from giving immediate relief to the affected people, prompt action has also been taken to repair the damage caused by the cyclones.

9. Recognising that strong infrastructure is a pre-requisite for the economic development of the State, this Government has implemented projects for increasing power generation, upgradation of roads, construction of bridges and augmentation of water supply. As a result of these measures, and the industry-friendly policy adopted by the Government, Tamil Nadu has attracted large industrial investments and has emerged as one of the leading states in the country.



2001 ஜனவரி 22]

10. An Information Technology revolution is successfully taking place in Tamil Nadu without much fanfare. Consequently, the number of software development firms as well as software production and exports are growing. The Government has been encouraging large scale private sector investment to establish a high speed optic fibre cable network. This basic facility will enable the spread of Information Technology throughout the state. To promote establishment of software firms and generation of employment opportunities not only at Chennai and Coimbatore, but in other parts of the state as well, Satellite Earth Stations are being established at Madurai and Tiruchirappalli. A Point of Presence linked to the Madurai Earth Station is also being set up at Tirunelveli. The magnificent Tidel Park set up with all modern facilities at Taramani in Chennai is functioning successfully. Consequently, the Government has decided to create a second Tidel Park close to the existing one. Internet kiosks are now widespread in all towns and cities. Such kiosks will soon come up in villages also. A pilot project will shortly be implemented in Madurai district to provide internet-telephone connectivity in village based on indigenous wireless technology developed by Indian Institute of Technology in Chennai. This will be the first of its kind in India.

11. I am happy to announce that the Tamil Virtual University will be launched in February. This University will enable people all over the world to learn Tamil and to know about the history, art, literature and culture of the Tamil people using the Internet.

12. Like the IT revolution, Biotechnology will also play a major role in the coming years in creating job opportunities and improving the standard of living of the people. Hon'ble Members are well aware that in recognition of this fact, this Government has announced a Biotechnology Policy and has set an example for other states. For the first time in India, a Biotechnology Park for women entrepreneurs has been set up at Siruseri village near Chennai and it was inaugurated by Hon'ble Chief Minister Kalaignar on 24-11-2000. Following this, the Tamil Nadu Industrial Development Corporation (TIDCO) has signed an MoU with Genome Technologies of USA on 5-12-2000 for setting up a Bio-informatics and Genomics Project in Chennai. Further, an MoU has been signed with the prestigious Cornell University of USA on 15-1-2001 for setting up a

ஒரு ஆசிரியர் என்று சொல்லி 525 அரசாணை போடப்பட்டது. அந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்வோம் என்று சொல்லியிருந்தீர்கள். சிறுபான்மை பள்ளிகளுக்கு நீங்கள் முதலிலே ஆசிரியர்களைப் போட்டீர்கள். அதில் விடுபட்டவர்களுக்கும், இப்போது தனியார் பள்ளிகளுக்கும் வழங்க வேண்டுமென்று சொல்லி வழங்கியிருக்கிறீர்கள். கணக்கு எடுக்கும்போது ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் என்று கணக்கெடுத்து, அதன்படி இரண்டு ஆசிரியர்கள் தேவைப்பட்டால் அவர்களைப் போடுவது கிடையாது. 4 ஆசிரியர்கள் வந்தால்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதாச்சாரம்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 50 என்று இருந்ததைக் குறைத்துவிட்டோம். எதிர்காலத்திலே 30-ஐ நோக்கி மெல்ல, மெல்ல, படிப்படியாக, 4 ஆண்டுகளில் ஆசிரியர்களை அதிகப்படுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால், தனியார் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அல்லது நியமிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களுக்கு, மொத்த ஆசிரியர்களையும் ஒட்டுமொத்தமாக ஓர் காலத்தில் தருவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், 8 ஆசிரியர்கள் பாக்கி தரவேண்டுமென்றால் இந்த ஆண்டு இரண்டு ஆசிரியர்கள், 3 ஆசிரியர்கள் என்று விகிதாச்சார கணக்கிட்டு துறைச் செயலாளர் அவர்களால் ஒரு முறை வகுக்கப்பட்டு, அந்த எண்ணிக்கையில் தரப்பட்டிருக்கிறது. வருகின்ற ஆண்டுகளில் அந்தக் குறைபாடுகளும் படிப்படியாக நீக்கப்படும்.

**திரு. மு. அப்பாவு:** 50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலேதான் கணக்கு எடுத்ததிலே இரண்டு ஆசிரியர் இருந்தால் கிடையாது. 3, 4 ஆசிரியர்கள் அங்கே தேவைப்பட்டால் ஓர் ஆசிரியர் உண்டு. உங்கள் கவனத்திற்காகச் சொல்லுகிறேன். நான் செயலாளரிடம் கேட்கும்போது என்னிடத்திலே சொன்னார்கள். ஆவரைகுளம் பாளையமார்த்தாண்டம் பள்ளி மேனேஜர் கணேசன் அவர்களும் நானும் சென்று கேட்கும்போது 3, 4 என்றால் ஒன்று. 5, 6 என்றால் இரண்டு. இரண்டு என்றால் கிடையாது என்ற ஒரு புதிய கருத்தை அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, உண்டோ இல்லையோ. ஒரே முறைதான். சரியாக இருக்கலாம்; தவறாக இருக்கலாம். விகிதாச்சார முறையில் ஒரு கணக்குப்போட்டு, நிலைத்தபடி கொடுக்காமல்,



யாராக இருந்தாலும் வேறுபாடு இல்லாமல் ஒரு முறை வைத்து செய்யப்படுகிறது. வருகின்ற ஆண்டுகளில் இந்தக் குறையைப் போக்குவதை அரசாங்கம் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக நானே அந்தப் பொறுப்பை ஏற்று நிறைவேற்றுகின்ற வாய்ப்பு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு. அப்பாவு:** அமைச்சருடைய உணர்வுகள் எப்படி இருக்குமோ? ஆண்டவன் சித்தம் எப்படியோ இருந்துவிட்டு போகட்டும். அது வேறு விஷயம். இப்போது நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஒரு கண்ணில் சுண்ணாம்பு ஒரு கண்ணில் வெண்ணெய் வைக்கக்கூடாது—1:50-ஐ வைத்துத்தான் calculate செய்து list கேட்டிருக்கிறீர்கள். எனக்குத் தெரியும் D.E.O.'s மூலமாக அப்படிப்பட்ட particulars வாங்கியிருக்கிறீர்கள். ஆவரைகுளம், பாளையமார்த்தாண்டம் பள்ளி குறித்து செயலரிடம் கேட்கும்போது நாங்கள் வைத்தது தான் Norms. 3, 4-க்கு ஒன்று. 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தில் கணக்கிடப்பட்டது, 3, 4, ஆசிரியர்கள் தேவைப்பட்டால் அதிலே ஒன்றுதான் தருவோம். இரண்டு என்றால் கிடையாது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், நாங்கள் கோர்ட்டுக்குப் போவோம் என்று சொன்னவுடனே, அதிகாரி கொஞ்சம் கோவப்பட்டு கோர்ட்டுக்குப் போனால் challenge செய்வோம்; நீங்கள் வாங்கிவிடுவதைப் பார்ப்போம் என்று சொன்னார்கள். அதைமட்டும் சொல்லவில்லை, பட்டதாரி ஆசிரியர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். இதுவரையில் அவர்கள் Secondary Grade வேலையில் சேர்ந்து விட்டார்களா என்றுகூட Challenge செய்தார்கள். நான் வருத்தப்பட்டுகூடச் சொன்னேன். மூத்த செயலாளர் நீங்கள், அனுபவம் உள்ள ஆள், மிகவும் பொறுமையாக இருப்பீர்கள், ஏன் ஆத்திரப்படுகிறீர்கள் என்று கேட்டேன். அந்த அளவுக்கு பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலைப் பணியிடத்தில் போடக்கூடாது என்பதில் உங்களிடம் ஏதோ ஒரு வறட்டு கௌரவம்தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இங்கே சட்டமன்றத்தில் அதைக் கொடுக்கலாம் என்று சொன்னீர்கள். அதன்படி இடைநிலைப் பணியிடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கின்ற அந்த ஆணையை, நீங்கள் ஒத்துக்கொண்டபடி, அவர்களுக்கு நடைமுறைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

அதேபோல பிளஸ் 2 மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 8 ஆசிரியர்கள் என்று சொல்லி, எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 8 ஆசிரியர் பணியிடங்களை வழங்கிவிட்டீர்கள். ஆனால்

[2001 ஜனவரி 22

Bio-Technology Park in Chennai. This Park will not only foster closer linkages between research institutions and commercial bio-technology enterprises but will also provide a framework for economic development on par with internationally renowned bio-technology parks.

13. In pursuance of the announcement made in the last year's budget speech, the Government of Tamil Nadu will embark upon a co-operative venture in Telemedicine with Montefiore Institute of Minimally Invasive Surgery and Telemedicine (MIMISAT) of the Albert Einstein College of Medicine, New York for providing modern health services to the people. The initial focus would be on improvement of community health services especially for women and children and for providing medical education and training using tele-education technology.

14. Computerisation paves the way for speedy implementation of works, transparency in administration and simplification of procedures. Taking this into account, computerisation of district administration has been taken up and extended to activities such as issue of certificates and distribution of old age pension in 50 Taluk offices. This process will be completed in the remaining 156 Taluks by March, 2001. Besides the 25 offices which have been fully computerised in the Registration Department, computerisation of another 100 offices will be completed in a few days time. This work in respect of 200 additional offices is progressing at a rapid pace.

15. Tamil Nadu is one of the States in India with a very large urban population. Keeping this in view, this Government has made large investments in providing basic infrastructure such as roads, streetlights, water supply and drainage facilities in urban areas. The construction of nine Flyovers in Chennai, the Ring Road in Madurai and a bridge across the river in Karur are shining examples of the competence of the urban local bodies in taking up major basic infrastructure projects. A massive project at a cost of Rs.1,700 crores is being taken up for environmental protection through works such as creating underground sewerage facilities, and desilting of waterways and lakes. This project will be implemented with Central and State assistance in Chennai, Trichy, Madurai, Tirunelveli, Karur, Thanjavur, Tiruvarur, Kumbakonam, Myladuthurai, Rameswaram,



2001 ஜனவரி 22]

Tiruchendur, Udhagamandalam and Kodaikkanal. Hon'ble Members are aware that this project was inaugurated in Chennai by Hon'ble Chief Minister Kalaignar on the 1st of this month.

16. This Government has accorded very high priority to rural development. It has taken action to ensure that 40 litres of water per capita per day is made available in all rural habitations of the State. Since this Government assumed office in 1996, this scheme has been completed in 27,274 habitations. For the first time in the State, cement concrete has been laid on village streets for the length of 5,900 km. at a cost of Rs.472 crores. In addition, a programme for conversion of 22,289 km. of rural link roads to black-topped roads in five years has been taken up and so far, 20,900 km. length of roads have been converted at a cost of Rs.1,463 crores. During the current financial yeard, the Central Government has accorded approval for upgradation of roads under the Prime Minister's Grama Sadak Yojana (PMGSY) in 17 districts in the first phase at a cost of Rs.78.76 crores. It is expected that approval for the remaining districts will be received shortly.

17. Under the Varumun Kappom Thittam, introduced by this Government, specialists in various medical disciplines are visiting the villages to provide health care to the rural people especially to those living below the poverty line. So far, 84.58 lakh people have benefited through 8,481 health camps. Medicines worth Rs.4.58 crores have been distributed to these beneficiaries free of cost. The information obtained under this scheme will provide data about the diseases affecting the people, which will enable effective preventive action against such diseases in the future.

18. Considering the close linkage between livestock and rural life, this Government has introduced a Livestock Protection Scheme to provide free veterinary services in the remote villages of the State. Under this scheme, 4,570 camps have been held so far in which 1.07 crores livestock have been given treatment. Medicines worth Rs.1.94 crores have been dispensed free of cost.

19. In order to create linkages between rural and urban economics this Government has formulated and implemented schemes like Uzhavar Sandhai and Poomalai. The Uzhavar Sandhais are playing a major role in ensuring a better return to the farmer as well as providing increased benefit

during the current year. The computer education scheme has been launched for the students of Government Colleges this year.

26. This Government has been showing great concern in protecting the social rights of Adidravidars, Scheduled Tribes, Backward Classes, Most Backward Classes and Denotified Communities. Not only has a White Paper on reservation been brought out, steps have also been taken to clear the backlog in appointments in five years. Orders have been issued to fill up such posts wherever there are provisions for direct recruitment. The progress in this regard is being monitored by a committee headed by the Chief Secretary. Out of the total of 11,264 backlog posts to be filled up, the target for the current year is 2,250. So far, 2,374 posts have been filled up in all the four categories, namely, A.B,C and D. I am very happy to inform that among these, 1,467 belong to the Adidravidar community, 217 to Scheduled Tribes and 690 to Most Backward Classes.

27. Keeping in view the important role played by Government employees in discharging developmental as well as regulatory responsibilities, this Government has extended the Central pay scales to its employees and pensioners with retrospective effect inspite of financial constraints. In addition it has paid enhanced dearness allowance and Pongal bonus to the employees.

28. I have presented before you the policies, programmes and achievements of this Government. While we can look back with pride on this splendid record, let us strive to maintain similar progress in the future as well.

29. I conclude this address with the firm belief that the ensuring debate will serve to strengthen our democratic ethos and tradition.

**VANAKKAM**

**JAI HIND**





## இணைப்பு-II

**(74 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

*மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,*

2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. இக்கூட்டத்தொடர் பதினோராவது சட்டப்பேரவை நிறைவு கூட்டத்தொடர் ஆகும். இப்பேரவை இந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் சிறப்பாக விவாதங்களை நடத்தி அரசின் முற்போக்கு கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்துள்ளது. இம் மாநிலத்தின் நலனிலும், அரசை வழிநடத்திச் செல்வதிலும் உங்களது பங்கினைப் பாராட்டுவதில் பெருமிதம் அடைகிறேன்.

3. இந்திய அரசியல் கடந்த 50 ஆண்டுகளில் பெரும் அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளது. இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துவதற்கு, மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் கூடுதல் அதிகாரங்களோடு சுயாட்சியும் அமைய அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

4. ஊழலற்ற, வெளிப்படையான நிருவாகத்தை வழங்க இம்மாநில மக்கள் இந்த அரசிற்கு அளித்த முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பை மதித்து இந்த அரசு செயல்பட்டுள்ளது. அரசின் செயல்முறைகளில் ஊழலைத் தவிர்த்திட நீதியரசர் இராமானுஜம் தலைமையிலான குழு அளித்த பரிந்துரைகளின்மீது அரசு உரிய முடிவுகள் எடுத்து செயல்படுத்தியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளில் ஒளிவுமறைவற்ற தன்மையைக் கொண்டுவருவதற்கான சட்டம் ஒன்றை இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

5. இந்த அரசு சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க முன்னுரிமை அளித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களை நடத்தி, அவர்தம் கருத்தறிந்து மாநிலத்தில் சமுதாய நல்லிணக்கத்தைப் பேணி அமைதி காக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வெற்றிகண்டுள்ளது. வகுப்பு மோதல்களைத் தடுப்பதற்கு நீதியரசர் மோகன் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை

to the consumer. Since 14-11-1999, 100 Uzhavar sandhais have been started in phases and vegetables worth Rs.160 crores have been sold through them so far. The Poomalai Scheme is helping the rural artisans get a fair price for their products.

20. The Namakku Naame Thittam, which is one of the most important schemes of this Government, has met with an overwhelming response from the public. With the Government providing Rs.98.15 crores and the public contributing Rs.52.76 crores, the Namakku Naame Thittam continues to be implemented as a scheme of the people, by the people and for the people. Further, under the Anna Marumalarchi Thittam, this Government has provided all basic amenities such as education, roads, drinking water and public health in 844 villages at a cost of Rs.694 crores. Moreover, under the MLA Constituency Development Scheme, each constituency has been allotted Rs.77 lakhs during the current year. No other State in the country has provided such large amount. I am very happy to inform you that the works under this scheme are progressing speedily and effectively. With the objective of creating a casteless society, this Government has been setting up Periyar Ninaivu Samathuvapurams. So far, 98 Samathuvapurams have been inaugurated and another 20 are ready for inauguration. The Government is taking effective action on the recommendations of the High Level Commission headed by Justice Ratnavel Pandian constituted to formulate schemes for generation of employment opportunities and overall development of the southern districts.

21. Many schemes of this Government are being drawn up with the farmer as the focus. To ensure self sufficiency in food production, adequate returns to the farming community and increased agricultural productivity, this Government has accorded high priority to wasteland development as well as management and conservation of soil and water resources. With this in mind, a massive scheme of desilting rivers, canals, tanks and drainage structures is under implementation. So far, since 1997-98, 907 tanks and 10,637 k.m. length of rivers, canals and drainage structures have been taken up for desilting at a cost of Rs.178.65 crores. This programme will continue. In the year 2000-2001, 30,000 hectares are being covered under wasteland development.



22. It is important not only to develop irrigation potential but also to maintain the existing irrigation sources properly. Hon'ble Members are well aware that an Act has been passed to form Water Users' Associations and to entrust the responsibility of operation and maintenance of irrigation sources to these farmers associations. As a follow up, the Government will provide all help including financial assistance to enable these associations to discharge the responsibilities vested in them.

23. As already announced by this Government, the "Tamil Nadu Manual Workers Social Security and Welfare Board" has been set up to provide social security for more than 60 categories of manual workers in the unorganised sector. Furthermore, 11 separate boards have been set up for the welfare of different categories of unorganised labour. All these labour welfare schemes will be implemented through a Social Security Fund to be created for this purpose.

24. The progress in the implementation of the Mahalir Thittam, named in memory of Perarignar Anna's mother Bangaru Ammaiyar, is indeed gratifying. This scheme which facilitates socio-economic empowerment of women was started in the rural areas of 28 districts and has subsequently been extended to the Town Panchayats and Municipalities. More than 10 Lakh women have benefited so far through 58,391 self-help groups. The Savings-Linked Micro Credit Scheme introduced by this Government exclusively for women engaged in small businesses in Corporation areas has since been extended to municipal towns and rural areas. As on date, 1.59 lakh women have received loan assistance to the extent of Rs.20.02 crores.

25. This Government is effectively implementing the elementary education programme which seeks to impart free and compulsory education to all children upto Class V. The concept of "joyful learning" has been introduced in primary schools to motivate all children to join schools and continue their education. Primary schools are being established so that all villages with a population of more than 300 have access to a school within a distance of 1 km. Tamil Nadu is the first state in the country to provide computer education in all Government Higher Secondary Schools. Under this scheme, 60,851 students are being trained

ஏற்று செயல்படுத்தியுள்ளது. இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் பயனாக, சாதி, மத வன்முறைகளினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கடந்த இரண்டாண்டுகளில் வெகுவாக குறைந்துள்ளது.

6. காவல் துறையை நவீனப்படுத்தி, ஆங்காங்கே எழும் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை அறிந்து அவற்றிற்கு சுமுகமான தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த அரசு சட்டம்-ஒழுங்கினை நல்ல முறையில் பாதுகாத்துள்ளது. மனித உரிமைகள் மீறல் பற்றி வரும் புகார் களை விசாரிப்பதற்காக ஏற்படுத்திய மாநில மனித உரிமைகள் ஆணையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

7. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவு தானியங்கள், சமையல் எண்ணெய்கள், பயறு வகைகள், காய்கறிகள் போன்றவற்றின் விலைகள் உயராதவாறு இந்த அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கண்காணித்து வருகிறது. சுமார் ஒரு கோடியே 59 இலட்சம் குடும்பங்கள்,பொது விநியோக முறையின் மூலம் நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்களைப் பெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில், இந்த அரசு உணவு மானியமாக ரூபாய் 1700 கோடி வழங்க உள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற குறைந்த விலையில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் என்ற வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினருக்கும் அரிசி வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடேயாகும். அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் உள்ளிட்ட இன்றியமையாப் பொருட்கள் விநியோகத்தில் இப்பொழுதுள்ள நடைமுறை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். விவசாயிகள், தங்களுடைய நெல்லுக்கு நல்ல விலை பெறுவதை உறுதி செய்வதற்காக, நடப்பு சம்பா பருவத்தில், இணை கொள்முதல் முறையைச் செயல்படுத்தி,மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் மைய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலைக்குமேல் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் கூடுதலாக வழங்கிவருவது இந்த மாநிலம் ஒன்றேயாகும்.

8. கடந்த இரு மாதங்களில் தமிழகத்தில் இரண்டுமுறை புயல் தாக்கியபோது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக, பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. புயல் தாக்கியதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கியதோடு, புயலால் ஏற்பட்ட சேதாரங்களை சரிசெய்யவும் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



9. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான அடிப்படைவசதி இன்றியமையாதது என்பதைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு மின் உற்பத்தியை அதிகரித்தல், சாலைகளைத் தரம் உயர்த்துதல், பாலங்கள் கட்டுதல், குடிநீர் வசதியைப் பெருக்குதல் ஆகிய கட்டமைப்புப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இதன் காரணமாகவும் இந்த அரசு பின்பற்றிவரும் தொழில்நேயமிக்க கொள்கையின் காரணமாகவும் அதிக அளவில் தொழில் முதலீடுகளைப் பெற்று இந்தியாவின் தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

10. தகவல் தொழில்நுட்பப் புரட்சி தமிழ்நாட்டில் ஆரவாரமின்றி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இதன் பயனாக இம் மாநிலத்தில் மென்பொருள் (software) மேம்பாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையும், மென்பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் அதிகரித்து வருகிறது. மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு உகந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கண்ணாடி இழை கம்பிவடங்கள்மூலம் உயர்வேக வலையமைப்பு (Optic fibre cable network) உருவாக்குவதில் தனியார் நிருவனங்கள் அதிக முதலீடுகள் செய்வதை அரசு ஊக்குவித்து வருகிறது. மென்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் சென்னை, கோயம்புத்தூர் பகுதிகளில் மட்டுமல்லாமல், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அப்பகுதிகளில் வேலைவாய்பபினை உருவாக்கிட மதுரையிலும் திருச்சிராப்பள்ளியிலும் செயற்கைக்கோள் தரைநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை நிலையத்துடன் இணைந்த ஓர் இருப்பிட அமைப்பு (Point of Presence) திருநெல்வேலியிலும் உருவாக்கப்பட்டு வருகின்றது. சென்னை தரமணியில் அனைத்து வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான டைடல் பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டுவருகிறது. இதனை அடுத்து இரண்டாவது டைடல் பூங்காவை அதற்கு அருகிலேயே உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது. தற்போது இணைய நிலையங்கள் (Internet Kiosks) அனைத்து நகரங்கள் மற்றும் மாநகரங்களில் பரவலாக அமைந்துள்ளன. இத்தகைய இணைய நிலையங்கள் கிராமங்களிலும் விரைவில் அமைந்திட வழிவகுக்கப்படும். சென்னை இந்திய தொழில்நுட்பவியல் நிறுவனம் (I.I.T.) உருவாக்கியுள்ள உள்நாட்டு வயர்லெஸ் தொழில்நுட்ப அடிப்படையில் கிராமங்களில் இணையம் மற்றும் தொலைபேசித் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்தியாவிலேயே முதலாவதாக மதுரை மாவட்டத்தில் முன்னோடித் திட்டமொன்று விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

[2001 ஜனவரி 22

11. உலகெங்கிலுமுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்துகொள்ளவும், வேண்டிய வாய்ப்புகளை இணையத்தின்மூலம் வழங்கிட தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) பிப்ரவரித் திங்களில் தொடங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

12. தகவல் தொழிநுட்பப் புரட்சியைப் போன்று வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் உயிரியல் தொழில்நுட்பம் மிகப் பெரும் பங்கினை வரும் ஆண்டுகளில் வகிக்க உள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை அறிவித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். சென்னை அருகே சிறுசேரி கிராமத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக பெண் தொழில் முனைவோர்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று 24-11-2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உயிரியல் தகவல் தொடர்பு மற்றும் ஜீனோமிக்ஸ் (Genomics) திட்டம் தொடங்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) அமெரிக்காவிலுள்ள ஜீனோம் டெக்னாலஜீஸ் (Genome Technologies) என்ற நிறுவனத்துடன் 5-12-2000 அன்று உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. மேலும் சென்னையில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்திட அமெரிக்காவின் புகழ்பெற்ற கர்னெல் பல்கலைக்கழகத்துடன் 15-1-2001 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இப்பூங்கா, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், வர்த்தகம் மற்றும் உயிரியல் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதுடன், வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு இணையாக பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலாகவும் திகழும்.

13. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, நவீன மருத்துவ வசதிகளைப் பெற்று மக்களுக்கு அளிப்பதற்காக, நியூயார்க்கில் உள்ள ஆல்பர்ட் அய்ன்ஸ்டின் மருத்துவக் கல்லூரியின் மான்ட்போர் இன்ஸ்டிடியூட் ஆப் மினிமலி இன்வேசிவ் சர்ஜரி அண்டு டெலிமெடிசன் நிறுவனத்துடன் (Montefiore Institute of Minimally Invasive Surgery and Telemedicine) இணைந்து தொலைத்தொடர்புவழி மருத்துவ வசதியைப் பெறுவதற்கான கூட்டுத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.



2001 ஜனவரி 22]

தொடக்கத்தில் சமுதாய சுகாதாரப் பணிகள் குறித்து முக்கியமாக, மகளிருக்கும் சிறாருக்கும் மருத்துவ வசதியை அதிகரிப்பதும், தொலைத்தொடர்புவழி கல்வி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சிஅளிப்பதும் இதன் குறிக்கோளாக இருக்கும்.

14. கணினிமயமாக்கும் திட்டம், பணிகளை விரைந்து முடிக்கவும், அரசின் செயல்பாடுகளை வெளிப்படையாக்கவும், நடைமுறைகளை எளிமையாக்கவும் வழிவகை செய்கிறது. இதைக் கருத்தில்கொண்டு மாவட்ட நிருவாகத்தை கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர் உதவித்தொகை வழங்குதல் போன்ற பணிகள் 50 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி மீதமுள்ள 156 வட்டங்களில் மார்ச் திங்கள் 2001-க்குள் முடிக்கப்படும். பத்திரப்பதிவுத் துறையில் ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்ட 25 அலுவலகங்களைத் தவிர, 100 அலுவலகங்கள் இன்னும் சில தினங்களில் முழுமையாக கணினிமயமாக்கப்படும். மேலும் 200 அலுவலகங்களை கணினிமயமாக்கும் பணி வேகமாக நடைபெறுகிறது.

15. இந்தியாவில் நகர்ப்பகுதிகள் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். இதைக்கருதி நகர்ப்புறப் பகுதிகளில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க அரசு பெருமளவில் முதலீடுகளைச் செய்துள்ளது. சென்னையில் 9 மேம்பாலங்கள், மதுரையைச் சுற்றி வட்டச்சாலை, கரூரில் ஆற்றுப் பாலம் போன்றவை பெரிய அளவிலான அடிப்படை வசதித் திட்டங்களை மேற்கொள்வதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறமைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கரூர், தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய நகரங்களில் பாதாளச் சாக்கடை வசதிகள் ஏற்படுத்துதல், நீர்க்கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை தூர்வாருதல் போன்ற பணிகளின்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மொத்தம் ரூபாய் 1,700 கோடி செலவில் மத்திய-மாநில அரசுகளின் நிதியுதவியுடன் ஒரு மிகப் பெரிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் இம் மாதம் 1 ஆம் தேதி சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

[2001 ஜனவரி 22

16. ஊரக மேம்பாட்டிற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மாநிலத்தின் கிராமப்புறக் குடியிருப்புகள் அனைத்திலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற 1996 முதல் இதுவரை 27274 குடியிருப்புகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநிலத்தில் முதன்முறையாக கிராமங்களில் சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள் ரூபாய் 472 கோடி செலவில் 5900 கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ளன. இதுதவிர, ஐந்தாண்டுகளில் 22289 கி.மீ. கிராம இணைப்புச் சாலைகளை தார் சாலைகளாக மாற்றும் பணியில், இதுவரை ரூபாய் 1463 கோடி செலவில் 20900 கி.மீ. நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பிரதமர் ஊரக சாலைத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 17 மாவட்டங்களுக்கு ரூபாய் 78 கோடியே 76 இலட்சம் செலவில் சாலை மேம்பாட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் எஞ்சியுள்ள மாவட்டங்களுக்கும் இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

17. இந்த அரசு அறிமுகப்படுத்திய வருமுன் காப்போம் திட்டத்தின் வாயிலாக கிராமங்களுக்கே மருத்துவ நிபுணர்கள் சென்று கிராம மக்களுக்கு, குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளித்துவருகின்றனர். இதுவரை 8481 முகாம்களில் 84.58 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு ரூபாய் 4 கோடியே 58 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பெறப்பட்டுள்ள தகவல்கள், பொதுமக்களை பாதிக்கும் நோய்கள் பற்றிய விவரங்களை அளிப்பதோடு எதிர்காலத்தில் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்யும்.

18. கிராம மக்களின் வாழ்க்கையுடன் கால்நடைகள் தொடர்புடையவை என்பதைக் கருத்தில்கொண்டு இந்த அரசு, தொலைதூர கிராமங்களில் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4570 முகாம்களில் ஒரு கோடியே ஏழு இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, ரூபாய் ஒரு கோடியே 94 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

19. ஊரக-நகர்ப்புற பொருளாதாரங்களை இணைக்கும் வகையில் இந்த அரசு உழவர் சந்தை, பூமாலை போன்ற திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. உழவர்களுக்கு ஆதாயத்தையும், நுகர்வோருக்கு



2001 ஜனவரி 22]

பலனையும் கிடைக்கச் செய்வதில் உழவர் சந்தைகள் பெரும்பங்கு ஆற்றுகின்றன. 14-11-1999 முதல் இதுவரை படிப்படியாக தொடங்கப்பட்டுள்ள 100 உழவர் சந்தைகள்மூலம் ரூபாய் 160 கோடி மதிப்புள்ள காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. பூமாலைத் திட்டம், கிராமப்புறக் கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு உரிய விலையைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

20. இந்த அரசின் முக்கிய திட்டங்களில் ஒன்றான நமக்கு நாமே திட்டம் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளது. அரசின் முதலீடான ரூபாய் 98 கோடியே 15 இலட்சத்துடன், ரூபாய் 52 கோடியே 76 இலட்சம் அளவிற்கான பொதுமக்களின் பங்கும் இணைந்து நமக்கு நாமே திட்டம் மக்களிடையே, மக்களால், மக்களுக்கான ஒரு திட்டமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த அரசு ரூபாய் 694 கோடி செலவில் 844 கிராமங்களில் கல்வி, சாலை, குடிநீர், பொதுச் சுகாதாரம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளையும் இதுவரை அளித்துள்ளது. மற்றும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூபாய் 77 இலட்சம் நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் விரைவாகவும் செம்மையாகவும் நடைபெறுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறேன். சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்த அரசு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. இதுவரை 98 சமத்துவபுரங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 20 சமத்துவபுரங்கள் விரைவில் தொடங்கப்பட தயார் நிலையில் உள்ளன. தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கி மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலான உயர்நிலை ஆணையத்தின் பரிந்துரைகள்மீது இந்த அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

21. இந்த அரசின் பல திட்டங்கள் விவசாயிகளை மையமாக வைத்து வகுக்கப்படுகின்றன. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு, விவசாயக் குடும்பங்களுக்குப் போதுமான ஆதாயம் கிடைக்கச் செய்தல், நிலத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் போன்றவற்றை உறுதிசெய்யும் பொருட்டு தரிசு நிலங்களைச் சீரமைத்தல், மண்வள-நீர்வள ஆதாரங்களைப் பேணி நிருவகித்தல் ஆகியவற்றுக்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது.

[2001 ஜனவரி 22

இதனைக் கருத்தில்கொண்டு, ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், வடிகால்கள் ஆகியவைகளில் தூர்வாரும் பணிகள் அடங்கிய ஒரு பெருந்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1997-1998 ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் ரூபாய் 178 கோடியே 65 இலட்சம் செலவில் 907 ஏரிகள்,10637 கி.மீ.நீளத்திற்கு ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணி மேலும் தொடரும். 2000-2001 ஆம் ஆண்டில் 30,000 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

22. பாசனத்திறன் அதிகரிப்புப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், பாசன ஆதாரங்களை சரிவரப் பராமரிப்பதும் இன்றியமையாதது ஆகும். ஆகவே, பாசன நீர் பயன்படுத்தும் விவசாயிகளின் குழுக்கள் உருவாக்கப்பட்டு பாசனத்தை இயக்கவும், பராமரிக்கவுமான பொறுப்பு இக் குழுக்களுக்கு அளிக்கும்வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவீர்கள். இதனையடுத்து இக்குழு தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை மேற்கொள்வதற்கு, நிதியுதவி உட்பட அனைத்து உதவிகளையும் அரசு உடனடியாகச் செய்ய உள்ளது.

23. ஏற்கெனவே இந்த அரசு அறிவித்தவாறு அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்காக 'தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், ஒன்றை அமைத்து 60-க்கும் மேற்பட்ட பல்வேறு அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்களின் நலனுக்காக தனித்தனியாக பதினோரு வகையான வாரியங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 'சமூகப் பாதுகாப்பு வைப்பு நிதி' ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் இந்தத் தொழிலாளர் நலத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படும்.

24. பேரறிஞர் அண்ணாவின் அன்னையார் பங்காரு அம்மையார் நினைவாக அமைக்கப்பட்டுள்ள மகளிர் திட்டத்தின் செயல்பாடு, மனநிறைவளிக்கும் வகையில் உள்ளது. பெண்களுக்கு சமூகப் பொருளாதார உரிமை அளிக்க வகை செய்கின்ற இத்திட்டம், 28 மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்டு பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, இதுவரை 58,391 சுய உதவிக் குழுக்கள் மூலம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்து வருகின்றனர். மகளிருக்கென்றே இந்த அரசு மாநகராட்சிப் பகுதிகளில்



2001 ஜனவரி 22]

அறிமுகம் செய்த 'சேமிப்புடன் இணைந்த சிறு வணிகக் கடன் திட்டம்' நகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு இதுவரை ஒரு இலட்சத்து 59 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் ரூபாய் 20 கோடியே 2 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

25. ஐந்தாம் வகுப்பு வரை சிறார்கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தை இந்த அரசு முனைப்பாக செயல்படுத்தி வருகிறது. சிறார்கள் அனைவரும் ஆர்வத்துடன் பள்ளியில் சேரவும் தொடர்ந்து கல்வியைப் பயிலவுமான 'மகிழ்வுடன் கல்வி கற்கும் முறை' ஆரம்பப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்னூறுக்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மேனிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் நடப்பு ஆண்டில் 60,851 மாணவர்கள் கணினிக் கல்வி பெற்று வருகின்றனர். அரசுக் கல்லூரிகளின் மாணவர்களுக்கும் கணினிக் கல்வித் திட்டம் இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

26. ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரது சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் இவ்வரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. இட ஒதுக்கீடு பற்றி வெள்ளை அறிக்கை ஒன்றை அளித்ததோடு மட்டுமில்லாது, நிரப்பப்படாமல் உள்ள அனைத்து பின்னடைவுப் பணியிடங்களையும் ஐந்து ஆண்டுகளுக்குள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எங்கெல்லாம் நேரடி நியமனங்களுக்கு விதிமுறைகள் வழிவகுக்கின்றனவோ அங்கெல்லாம் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு தலைமைச் செயலாளர் தலைமையிலான குழுவினால் இப்பணியின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீடு பெறும் பிரிவினருக்கான பின்னடைவு பணியிடங்கள் மொத்தம் 11,264-ல் நடப்பாண்டில் நிரப்பப்பட வேண்டிய இலக்கு 2250. இதுவரை ஏ,பி,சி,டி என்ற நான்கு பிரிவுகளிலும் 2,374 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர் 1,467 பேர், பழங்குடியினர் 217 பேர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 690 பேர் என்று தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing. Chennai-600 002.

[2001 ஜனவரி 22

27. மாநிலத்தின் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை பொறுப்புகளை ஆற்றுவதில் அரசுப் பணியாளர்களின் முக்கியமான பங்கை கருத்தில்கொண்டு, நிதி நெருக்கடி இருந்தபோதிலும், பணியாளர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் முன் தேதியிட்டே மத்திய அரசுக்கு இணையான சம்பள வீதங்களை இந்த அரசு வழங்கியதோடு பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட அகவிலைப் படி மற்றும் பொங்கல் ஊதியக்கொடை ஆகியவற்றையும் அளித்துள்ளது.

28. இந்த அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் சாதனைகளையும், நான் உங்கள்முன் விவரித்துக் கூறியுள்ளேன். இந்த உயரிய செயலாக்கங்களை நாம் பெருமிதத்துடன் கூறும் அதே நேரத்தில் இதுபோன்ற வளர்ச்சியை இம்மாநிலம் தொடர்ந்து அடைவதற்குப் பாடுபடுவோமாக.

29. இவை குறித்த உங்களின் விவாதம், நம்முடைய ஜனநாயக மரபிற்கும் பாரம்பரியத்திற்கும் உகந்த வகையில் அமையும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நான் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

ஜெய்ஹிந்த்

D
V 21/3/P01
P01.112-2
228172

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.